# நமது செட்டிநாடு

மலர் 10 ✿ மணம் 12 ✿ ஸ்ரீ விசுவாவசு ஆண்டு ✿ சித்திரை ✿ ஏப்ரல் 2025 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 10 ✿ Issue 12 ✿ April 2025 ✿ Rs.25




செட்டிநாடு குழும ஆதரவுடன் கோவை நகரத்தார் சங்கம் சார்பாக நடைபெற்ற மகளிர் தின விழாவில் காரைக்கால் அம்மையார் விருது பெற்றவர்கள்... செய்தி பக். 06


Institute of Technology
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)
MANAMAI CAMPUS
From bridges to AI, Engineering makes it possible!
B.Tech (AI&DS)*
B.Tech (Cyber Security)*
B.Tech (CS & Medical Engg)*
B.Tech (IT)*
B.Tech (ECE)*
B.Tech(CSE)*
B.Tech*
4 years
SCAN TO REGISTER
ADMISSION OPEN 2025-26
MANAMAI CAMPUS
844 789 2022
manamaiadmissions.care.edu.in
Nallur - Manamai, ECR, Behind Great Lakes Institute of Management, Thirukalukundram taluk, Chennai - 603102.
*Subject to Approval

நமது
செட்டிநாடு

மலர் 10 மணம் 12 ஏப்ரல் 2025
ஸ்ரீ விசுவாவசு ஆண்டு சித்திரை மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்
ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி
வடிவமைப்பு: பி.தாமோதரன்
விளம்பரம் தொடர்புக்கு:
99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–42951888

கரு.மணிகண்டன்
மக்கள் தொடர்பு அலுவலர்
காரைக்குடி 86818 28284

இதழ் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ.300 |
| இரண்டாண்டு | ரூ.500 |
| ஐந்தாண்டு | ரூ.1250 |

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com
வாட்ஸ்ஆப்
9962243750



# கோடை வெப்பத்தைச் சமாளிக்க...

பொதுவாக தென் மாநிலங்களில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கோடை காலம் மிகுந்த வெப்பம் கொண்டதாக இருக்கும். கடந்த சில ஆண்டுகளாக கோடையில் வெயிலின் தாக்கம் மிக அதிகமாக உள்ளது. இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்திலேயே பத்திற்கும் மேற்பட்ட நகரங்களில் வெப்பம் 100 டிகிரி பாரன் ஹீட்டைத் தாண்டி விட்டது. இது 110 டிகிரி வரை செல்ல வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். இந்த நிலையில் நாம் எப்படி இந்த கோடை வெயிலின் தாக்கத்தை எதிர் கொள்வது. நாம் உட்கொள்ளும் உணவு, அருந்தும் நீர், உடுத்தும் உடை, வெளியில் நடமாட்டம், வீட்டில் செய்ய வேண்டியவை ஆகியவற்றில் சிறிது கவனம் செலுத்தினாலே கோடை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து விடுபடலாம். கோடைக் காலத்தில் நாம் எதுபோன்ற ஆடைகளை உடுத்துகிறோம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். ஆடைகளைப் பொறுத்தவரை பாலியஸ்டர் ஆடைகளைத் தவிர்த்து பருத்தி அல்லது கைத்தறியிலான மெல்லிய ஆடைகளை அணியலாம். இவை உடலுக்கு இதமாகவும் காற்றோட்டமாகவும் இருக்கும். உணவைப் பொறுத்த அளவில் குளிர்ச்சி தரும் தயிர் சாதம், எலுமிச்சை சாதம், வெள்ளரி, தர்பூசணி உள்ளிட்ட உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்ளலாம். இந்த உணவுகள் சுவையாக இருப்பது மட்டுமின்றி உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து வெப்பத்தைத் தணிக்க உதவுகின்றன. கோடைக் காலங்களில் அவ்வப்போது தண்ணீர் குடிக்க வேண்டியது அவசியமானது. இத்துடன் மோர், இளநீர், பழச்சாறு போன்ற புத்துணர்ச்சியூட்டும் பானங்களையும் குடிப்பது நல்லது. இவை தாகத்தைத் தணிப்பது மட்டுமின்றி உடலுக்குத் தேவையான ஆற்றலையும் வழங்குகின்றன. பொதுவாக முற்பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். இந்த நேரங்களில், நேரடி சூரிய ஒளியைத் தவிர்க்க வேண்டும். வெளியில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் குடை, தொப்பி அணிந்து செல்வது நல்லது. கோடைக் காலத்தில் குளிர்ந்த நீரில் காலையும் மாலையும் குளிக்க வேண்டும். இதனால் உடல் சூடு குறைவதோடு நல்ல புத்துணர்ச்சியையும் கொடுக்கும். வீட்டில் அதிகம் பயன்படுத்தும் பகுதிகள் குளிர்ச்சியாக இருக்கும் வண்ணம் ஜன்னல் திரைச் சீலைகள் பயன்படுத்தி வெப்பத்தைத் தடுக்கலாம். கோடை வெப்பம் சிறுவர்களையும், பெரியவர்களையும் அதிக பாதிப்பிற்கு உள்ளாக்கும் என்பதால் அவர்கள் கண்டிப்பாக வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள மேற்கண்ட வழிமுறைகளை கடைபிடிப்பது அவசியமாகும். ♦

உ
திருச்சி ஸ்ரீ வளத்தி
சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
துவக்கம் 2005
வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி) லிட். ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
VALATHI 2005
பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை
எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
ரூ. 1,00,000/- முதல் ரூ. 30,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை
பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.
0431-2760064
0431-7968005
TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,
94439 86143
"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143
"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1), அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை – 600 093
Cell : 91235 71029
எண். 1, முதல் தளம்,
பழைய சொக்கநாதர்–
–கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001.
Cell : 89034 90064
★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com www.valathichitfunds.com

## உள்ளே...


கோலாகலமாக நடந்த கோவை நகரத்தார் சங்க மகளிர் தின விழா ........................... 06

வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க..... 10

நகரத்தார் திருப்பணிகள்............................ 12

திருமாலின் திவ்ய தேசங்கள் .................... 14

கண்டவராயன்பட்டி ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் மகாகும்பாபிஷேகம் ..................... 15

உத்தரகோசமங்கை நகரத்தார் திருப்பணி.... 16

உங்களுடன் உரையாடுங்கள் .................... 20

தொழில் தொடங்கலாம் வாங்க ................ 21

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு ........................... 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு ........ 28

ஏழிளந்தமிழ் – கொன்றை வேந்தன் – உரை செம்மல் வ.சுப.மாணிக்கனார் ..................... 31

திறந்த முனைக் கேள்விகள் ........................ 32

அழகப்பரின் பிள்ளைகள் ............................ 34

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் ........ 36

திருமந்திரச் சுவை .................................... 38

இராம காவியம் ......................................... 39

நகரத்தார் சிகரத்தார் ................................. 40

ஓவியம் ................................................. 42

சந்தா படிவம்! .......................................... 45


Vees Star™
Diamonds & Jewelry
ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை
GIA
CERTIFIED
SOLITAIRE
இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
CHENNAI: W-182, NORTH MAIN ROAD ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY KHAJOD, GUJARAT - 395007.
www.vstardiamonds.com
CHENNAI - 044 4553 6003 1, 9383007477
MADURAI - 9884473330
KARAIKUDI - 9884803349
S. விஜயகுமார் V. விசாலாட்சி
பள்ளத்தூர்



# கோலாகலமாக நடந்த கோவை நகரத்தார் சங்க மகளிர் தின விழா

நீலமலைத் தொடருக்கும், மேலை காற்றுக்கும் ஆலை தொழிலுக்கும், பெயர் பெற்ற கோவை மாநகரில் 61 ஆண்டுகளாகச் சிறந்த சேவை ஆற்றி வருகிறது கோவை நகரத்தார் சங்கம். நகரத்தார் சங்கத்துக்கென கோவையின் மையப்பகுதியான ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் சாலையில் கம்பீரமாக எழுந்து நிற்கும் சொந்தக் கட்டடம் சங்கத்தின் சிறப்பான செயல்பாடுகளுக்கான சிறந்ததோர் அடையாளம். குளிரூட்டம் செய்யப்பட்ட அரங்கு, விசாலமான மேடை, அலுவலக அறை, உணவுக்கூடம் என சகல வசதிகளுடன் இருக்கும் நகரத்தார் சங்க கட்டடம், இப்போது மாதந்தோறும் விழாக் கோலம் பூணுகிறது.

ஆம்... இப்போது பொறுப்பில் இருக்கும் நிர்வாகக் குழுவினர், பொறுப்பேற்கும் போதே, 'மாதம் ஒரு நிகழ்வை நடத்துவோம்' என்று கோவை நகரத்தார்களுக்கு அளித்திருந்த வாக்குறுதியின்படி, மாதந்தோறும் சுவையானதொரு நிகழ்வை நடத்திக் கொண்டிருக்கின்றனர். குழந்தைகளுக்கு மேஜிக் ஷோ, முதியவர்களுக்கான ஆன்மிக நிகழ்ச்சி என்ற வரிசையில் கடந்த மாதம் அவர்கள் 'மகளிர் தின விழா'வை சிறப்பாகக் கொண்டாடினர். இவ்விழாவுக்கென விதை போட்டு, அதை விருட்சமாக்கி மிகச் சிறப்பாக நடத்திய பெருமை சங்கத் தலைவர் ஆடிட்டர் S.சுந்தரேசன், துணைத் தலைவர்கள் S.முத்துராமன், நாகப்பா ராமநாதன், நிர்வாகச் செயலாளர் OL.சுப்பிரமணியன், பொதுச் செயலாளர் S.ST.சுவாமிநாதன், பொருளாளர் ஆடிட்டர் SM.நாகப்பன் ஆகியோரைச் சாரும்.

கடந்த 16-03-2025, ஞாயிற்றுக்கிழமை, மாலை சங்க வளாகத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றி வரும் நகரத்தார் பெண்மணிகளைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 'காரைக்கால் அம்மையார்' விருது வழங்கப்பட்டது. 63 நாயன்மார்களில் அந்த ஈசனாலேயே 'அம்மையே' என்றழைக்கப்பட்ட பெருமை காரைக்கால் அம்மையாருக்கு மட்டுமே உண்டு. அத்தகைய சிறப்பு வாய்ந்த அம்மையாரின் பெயரில் முதல் முறையாக விருது வழங்க, கோவை நகரத்தார் சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும் கீழ்க்கண்ட நான்கு சாதனையாளர்களை விருதுக்கென தேர்ந்தெடுத்தனர்.



**முனைவர் ஆனந்தவல்லி நாராயணன்:** அரியக்குடி, வைரவன் கோவிலைச் சார்ந்த திரு.நாராயணனின் மனைவி திருமதி ஆனந்தவல்லி. திரு. சு.பழனியப்ப செட்டியார் - திருமதி பழ.சரசுவதி

ஆச்சியின் திருமகளாவார். சென்னைப் பல்கலைகழகத்தில் கட்டிடத் துறையில் தங்க பதக்கத்துடன் இளங்கலை பட்டம் பெற்றார். மத்திய மனிதவள அமைச்சகத்தின் ஊக்கத்தொகை பெற்று, கோவை P.S.G.தொழில்நுட்ப கல்லூரியில் முதுகலைப் பட்டம் பெற்றார். சென்னை அண்ணா A Laced Reinforced Concrete and Laced Steel-Concrete Composite Elements என்ற தலைப்பில் ஆய்வறிக்கை சமர்ப்பித்து 2012-ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார். இவருடைய ஆய்வறிக்கைகளுக்காக 2013-ல் மதிப்புமிகு 'சர் ஆர்தர் காட்டன் நினைவு பரிசு'. 2017-ல் 'டாக்டர் ஆ.ராமையா பரிசு'. எனப் பல பரிசுகளைப் பெற்றார். 2014 -2015-ல் இவருடைய சிறந்த ஆய்வுக்காக அமெரிக்காவின் ஜான் ஹாப்ஹின்ஸ் பல்கலைக் கழகத்தில் ராமன் ரிசர்ச் ஃபெல்லோஷிப் பெற்றார். இவர் CSIR கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தில் 1993-ல் ஜூனியர் ரிசர்ச் ஃபெல்லோ வாக தனது தொழில் முறை பயணத்தை தொடங்கி, 2021 ஆம் ஆண்டு முதல் அந்நிறுவனத்தின் இயக்குநராக இருந்து வருகிறார். மேதகு ஆளுநரால் சென்னை பல்கலைக்கழகத்தின் சின்டிகேட் உறுப்பினராகவும், திருச்சி பாரதிதாசன் பல்கலைகழகத்தின் திட்டக்குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார்.



**திருமதி SP.விசாலாட்சி:** கடியாபட்டி, இரணிக்கோயிலைச் சார்ந்த திரு.அழ.தண்டாயுதபாணியின் மனைவி திருமதி SP.விசாலாட்சி. இவர் அரண்மனை சிறுவயல், திரு.முத்து சுப்பிரமணியன் செட்டியார் - திருமதி சுப.வள்ளியம்மை ஆச்சியின் திருமகளாவார். தொலைத்தொடர்பு துறையில் டிப்ளோமோ பெற்று, கணினி பொறியியல் முதுகலை டிப்ளோமோ மற்றும் பெங்களூர் விஸ்வேஸ்வரய்யா பல்கழைக்கழக பொறியியல் கல்லூரியில் மின்னணுவியல் துறையில் பொறியியல் இளங்கலை பட்டம் பெற்றுள்ளார். இந்திய ராணுவத்தின் கீழ்வரும் தரக்கட்டுப்பாட்டுத் துறை பணியில் சேர்ந்த முதல் நகரத்தார் பெண்மணி. DGAQA (Quality Assurance for Air Force) துறையில் ஜூனியர் சயின்டிபிக் ஆபிசராக சேர்ந்து, படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று, பின்னர் இயக்குநராகப் பதவி வகித்தவர். இந்தத் துறையில் 24 ஆண்டு காலம் அனுபவம் பெற்றவர். DGAQA ஹைதராபாத்தில் Military Aircraft Manufacturers ஆன Hindustan Aeronautics Ltd நிறுவனத்தில் மண்டல இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பாதுகாப்பு அமைச்சகத்தில் 25 ஆண்டுகள் Class | Gazetted Officer ஆக பணியாற்றியுள்ளார். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், தெலுங்கு என ஐந்து மொழிகளில் பேசவல்ல பன்மொழி வித்தகி.

**திருமதி. சாலா லெட்சுமணன்:** ராங்கியம், இரணிக் கோயிலைச் சார்ந்த தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிர்வாக



பொறியாளராக பணிபுரியும் திரு.சித. செந்தில் ராஜ் அவர்களின் மனைவி திருமதி சாலா லெட்சுமணன். இவர் கானாடுகாத்தான் முனைவர். லெ.லெட்சுமணன் செட்டியார் - திருமதி லெ.வள்ளியம்மை ஆச்சியின் திருமகளாவார். கோவை P.S.G தொழில்நுட்பக் கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்புத் துறையில் பொறியியல் இளங்கலை பட்டமும், BITS-பிலாணியில் மென்பொருள் அமைப்புகளில் முதுகலைப்பட்டமும் பெற்றுள்ளார். பெங்களூரில், இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (DRDO) CEMILAC (Center for Military Airworthiness and Certification - Intellectual Property) G மற்றும் கூடுதல் இயக்குநர் (மென்பொருள்) பதவி வகிக்கிறார். இவர் பல சர்வதேச மாநாடுகளில் தன் துறை சார்ந்த ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறார்.



**திருமதி பிரேமா நாராயணன்:** வலையபட்டி திரு.லெ.நாராயணன் செட்டியார் - திருமதி ராதா ஆச்சி ஆகியோரின் திருமகள் பிரேமா நாராயணன். மதுரை காமராஜர் பல்கழைக்கழகத்தில் ஆங்கிலம் இலக்கியத்தில் இளங்கலை பட்டமும், இதழியல் மற்றும் மக்கள் தொடர்புத் துறையில் முதுகலை பட்டமும் பெற்றுள்ளார்கள். பத்திரிக்கைத் துறையில் 27 ஆண்டுகளாகப் பணி ஆற்றும் இவர் ஊடகத்துறையின் நெளிவு சுளிவுகளை நுட்பமாய் அறிந்தவர். தினமணி இதழின் மேனாள் ஆசிரியர் இராம.திரு. சம்பந்தம் அவர்கள் தான், தனது வளர்ச்சிக்கு காரணம் என நன்றியோடு கூறுவார். தினமணி, ஆனந்த விகடன் போன்ற பாரம்பரியமிக்க குழுமங்களில் மூத்த நிருபராகவும், உதவி பொறுப்பாசிரியராகவும் திறம்படப் பணி செய்தவர். பல பிரபலங்களை நேர்முகப் பேட்டி கண்டிருக்கும் இவர், மகளிர், குழந்தைகள், ஆரோக்கியம், ஆன்மீகம், கலை எனப் பல தளங்களில் பணி அனுபவம் பெற்றவர். இவரின் பிரபலங்களுடனான பேட்டிகள் 'உங்களில் ஒருத்தி' என்ற தொடராக தந்தி டிவியில் ஒளிபரப்பப்பட்டது. திருமதி சுஹாசினி மணிரத்தினத்தின் டேலண்ட் சவுத் அமைப்பு மற்றும் ராஜ் டிவி-யிடமிருந்து பத்திரிக்கைத் துறையில் சிறந்து விளங்குவதற்கான பெண் சாதனையாளர் விருது பெற்றவர். இவர்கள் நால்வரும் விருதுக்கென தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆண்களும் பெண்களுமாக பார்வையாளர் கூட்டம் அரங்கை நிறைத்திருக்க, இனிமையான கணபதி துதியைத் தொடர்ந்து, சங்கத்தின் துணைத் தலைவர் S.முத்துராமன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மதுரை தியாகராஜர் கல்லூரி தலைவர் முனைவர் உமா

கண்ணன் விழாவுக்குத் தலைமை தாங்கி விருதுகளை வழங்கினார். விருதாளர்கள் ஒவ்வொருவரையும் பற்றிய பாராட்டுப் பத்திரத்தை நான்கு மாணவிகள் மேடையில் வாசிக்க, நேர்த்தியாக கண்ணாடிச் சட்டமிடப்பட்டிருந்த அந்தப் பாராட்டுப் பத்திரம் விருதாளருக்கு வழங்கப்பட்டது. மேலும் விருதாளர்கள் அனைவருக்கும் விழாத் தலைவர் சால்வை அணிவித்து கௌரவிக்க, அவர்களுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கினார் சங்கத்தின் பொருளாளர் SM. நாகப்பன்.

விருது பெற்ற நால்வரும் ஏற்புரை வழங்கினர். முதல் முறையாக காரைக்கால் அம்மையார் பெயரில் வழங்கப்படும் விருதைப் பெறுவதை எண்ணிப் பெருமிதப்படுவதாகக் கூறிய அவர்கள், தாங்கள் கடந்து வந்த பாதையையும் பணிகளையும் பற்றி சுவாரஸ்யம் ததும்பப் பகிர்ந்து கொண்டனர். நம் சமூகத்து இளம் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் கோலோச்சி சாதனைகள் பல புரிய வேண்டும் என்று கூறியதுடன், தங்கள் துறைகளுக்கு வர விரும்பி, தங்களை அணுகினால் அவர்களை வழிநடத்தத் தயாராக இருப்பதாகவும் உறுதி கூறினர். அடுத்ததாக தேவகோட்டை சித்ரா சுப்ரமணியன் சிறப்புரை ஆற்றினார். புனிதவதி என்னும் இல்லத்தரசி, தனது சிவ பக்தியால் எவ்வாறு காரைக்கால் அம்மையார் எனும் நாயன்மாராக உருமாறினார் என்னும் வரலாறை தனது பாணியில் நகைச்சுவையுடன் பொருள்சுவை ததும்பப் பேசினார்.

சங்கத்தின் பொருளாளர் SM. நாகப்பன், விழாத் தலைவர் உமா கண்ணனுக்கு மரியாதை செய்து, நினைவுப்பரிசு வழங்கிட, பொதுச் செயலாளர் S.ST. சுவாமிநாதன் நன்றியுரை வழங்கினார். விழா நிகழ்வுகளை அழகு தமிழில் இனிய குரலில் தொகுத்து வழங்கினார் கரிஷ்மா அருணாசலம். விழா நிறைவடைந்த பின்னர், செவிக்கு உணவு வழங்கிய கோவை நகரத்தார் சங்க நிர்வாகிகள், வந்திருந்தோர் வயிற்றுக்கும் இனிய உணவு வழங்கினர். மொத்தத்தில் பயனுள்ள பல தகவல்களைப் பரிமாறிய நல்லதொரு விழாவாக அமைந்தது கோவை நகரத்தார் சங்க மகளிர் தின விழா.

– மித்ரா

# திருச்சி நகரத்தார் சங்கம் பவள விழா மலர்

திருச்சி நகரத்தார் சங்கம் 1948 இல் தொடங்கப்பட்டது. சங்கத்தின் பவள விழா 05-10-2024 மற்றும் 06-10-2024 ஆகிய இரண்டு நாட்கள் திருச்சியில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பவள விழா நினைவாக பவள விழா மலர் 1948-2024 வெளியிடப்பட்டுள்ளது. இந்த மலர் பிற மலர்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாக வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கதாகும். 9 நகர கோயில்கள் மற்றும் 76 ஊர்களில் உள்ள நகர கோவில்களைப் பற்றிய முக்கிய விவரங்கள், இறைவன் இறைவியின் வண்ணப் படங்கள், நகர சிவன் கோவிலின் அழகிய தோற்றம், அந்தந்த ஊர்களில் உள்ள புள்ளிகள் எண்ணிக்கை விவரம் உள்ளிட்ட செய்திகளை கொண்டுள்ளது. நகரத்தார் திருப்பணி செய்த சிவன் கோயில்கள் விவரம், நகரத்தார் குலதெய்வங்கள் 108, நகரத்தார் ஊர்களின் புள்ளி விவரங்கள் கொண்ட முழுப் பட்டியல் ஆகியவையும் இந்த பவள விழா மலரில் இடம்பெற்றுள்ளது. மலர் வெளியீட்டில் இது ஒரு புதிய முயற்சியாகும். கெட்டி அட்டைக் கட்டுமானம், 290 பக்கம் 21×27.5 செமீ அளவு கொண்டு உருவாகியுள்ள இந்த மலர் ரூ. 500 விலையில் கிடைக்கின்றது. மலர் வேண்டுவோர் ரூ. 500 கீழ்க்கண்ட Gpay அல்லது Bank A/c-ல் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

Gpay Number 80120 55109

**Bank Account Details**

Nagarathar Sangam Karur Vysya Bank
A/C NO: 1195135000016467
IFSC Code KVBL0001195


1.இளையாற்றங்குடி
மாவட்டம் : சிவகங்கை
பின்கோடு : 630 205

தோன்றிய ஆண்டு : கி.பி 707
இளையாற்றங்குடி கோயில்
மொத்தப்புள்ளிகள் : 9194

கோயிலில் நடைபெறும் முக்கிய திருவிழாக்கள்

- மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனம், சிதம்பரத்துக்கு அடுத்து இங்கு தான் தேரோட்டம். ஆருத்ரா தரிசனத்திற்கு முதல் நாள் காலை மாணிக்கவாசகர் குதிரை வாகனத்தில் வருவார். இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா நடைபெறும்.
- கீரணிப்பட்டியில் பங்குனி 3வது ஞாயிறு பூச்சொரிதல், 4வது ஞாயிறு 10நாள் திருவிழா, காப்பு கட்டுதல் 9வது நாள் தேரோட்டம், 10வதுநாள் சப்தாவர்ணம், இளையாற்றங்குடியில் இருந்து சாமி கீரணிப்பட்டி சென்று திரும்பும்.

உ
தில்லையிலே காணுகின்ற தெய்வமதின் தரிசனமும்
ஆருத்ரா நாளிலிங்கும் நடக்கும்
எல்லையில்லா ஆனந்தமாய் எம்பெருமான் தேரோட்டம்
ஏற்றமிகு ஊர்வலமாய்ச் சிறக்கும்!
பொய்யின்றி மெய்கண்ட மாணிக்க வாசகரும்
குதிரையிலே புறப்பட்டு வருவார்!
கைலாச நாதரவர் கல்யாணி அம்மையுடன்
கண்குளிரக் காட்சிதந்து அருள்வார்!

பஞ்சமூர்த்தித் தெய்வமெலாம் பரவசமாய் சுற்றிவந்து
பக்தருக்கு அருளாசி புரிவார்
அம்மனவள் அருள்பெற்ற கீரணிப் பட்டியிலே
அற்புதமாய் பூச்சொரிதல் நடக்கும்
பத்தாம்நாள் திருநாளில் சப்தாவர்ணம் எழுந்தருளும்
விழாவதுவும் சிறப்புடனே நடக்கும்!
தொன்மைமிகு கோயில்தனை எந்நாளும் வணங்கிவந்து
தூயவருள் பெற்றுநாமும் உயர்வோம்!

நகரக்கோயில்

ஸ்ரீ கைலாசநாதர்

ஸ்ரீ நித்யகல்யாணி

தகவல் : சுப. சுப்பிரமணியன், தலைவர்,
திருச்சி நகரத்தார் சங்கம் செல் : 80125 10006



Innovative Homes & Developers Pvt. Ltd.
Creating Value & Lifestyles
SINCE 1999
25
YEARS OF EXCELLENCE
Bookings Open!
Virugambakkam
Chennai, S+5 floors.
K.K.Nagar
Chennai, S+5 floors.
Karaikudi
G+2 floors.
98410 12145
RERA NO:TN/29/Building/077/2023
www.innovativehomes.in
7/11,1-A, Bharathi Nagar 2nd Street,T.Nagar, Chennai - 17
இன்னோவேடிவ்
அண்ணாமலை

# வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க...

## 13 அண்டை நாடு – லாவ் (Laos)



சோமலெ சோமசுந்தரம்

### குருவிகள் மூலம் பரிகாரம்!



லுஅங் பிரபங் நகரில் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்களில் ஒன்றான லாவ் நாட்டை ஆண்ட அரசகுடும்பத்தின் அரண்மனையைப் பார்த்து விட்டு வெளியே வந்த போது லாவ் பெண்மணிகள் சிலர் எங்கள் கைகளில் இரண்டு குருவிகள் இருந்த ஒரு சிறு மூங்கில் கூண்டைக் கொடுத்து 50,000 கிப் (1 ரூபாயின் மதிப்பு 250 கிப்) மட்டுமே என்றார்கள். "இந்தக் குருவிகளை விலைக்கு வாங்கி நாங்கள் என்ன செய்யப் போகிறோம்?" என உடன் வந்த பயண வழிகாட்டியிடம் கேட்டோம்.

"செய்த பாவங்களுக்கு பரிகாரமாகவும், இனி வரும் காலத்தில் புண்ணியம் கிடைப்பதற்காகவும், பறவைகள், ஆமைகள், மீன்கள் போன்றவற்றை சுதந்திரமாக இயற்கையில் செல்ல விடுவது லாவ், கம்போடியா, வியட்நாம், தாய்லாந்து, மியன்மார் போன்ற நாடுகளில் புத்த மதத்தினரால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உங்களுக்கு நல்ல காலம் பிறக்க குருவிகளை விலைக்கு வாங்கி அவற்றை பறக்க விடச் சொல்கிறார்கள்" என்றார் அவர். வியப்போடு நாங்கள் சற்று தள்ளி நடந்த போது, மெல்லிய குரலில், "அதோ தெரியும் மரத்தைப் பாருங்கள், அதன் பின்புறம் உள்ள இப்பெண்களின் கணவர்கள் குருவிகளுக்கான உணவு உள்ள வலைகளைக் காட்டி அவற்றைப் பிடித்து, மீண்டும் அதே குருவிகளை அடுத்த சுற்றுலாப் பயணிகளுக்கு விற்க தங்கள் மனைவிகளிடம் கொடுப்பார்கள்" என்று குருவிப் பரிகார புராணத்தைச் சுவையாக விளக்கினார்.

நம் கிராமப் பகுதிகளில் ஒரு கிராமத்தில் குரங்குகளை பிடித்து அக்கிராம மக்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு, மற்றொரு கிராமத்தில் அந்தக் குரங்குகளை விட்டு, பிறகு அவர்களிடமும் பணம் வசூலித்து குரங்குகளை பிடிப்பது போன்று, இங்கே குருவித் தொழில் மும்முரமாக நடைபெறுகிறது! ஹாங்காங் புத்த கோவில்களில் மட்டும் வருடத்திற்கு ஆறு லட்சம் பறவைகள் பறக்க விடப்படுகின்றனவாம். தென் கிழக்காசிய நாடுகளில் இந்தக் குருவிப் பரிகாரம் ஒரு பெரிய தொழிலாகவே நடைபெறுகிறது.

### ஆறு... ஆறு

தென் கிழக்காசியாவின் மிக நீளமான ஆறு என்ற சிறப்புக்குரிய மேக்காங் (Mekong) ஆற்றின் மற்றொரு முக்கியமான அம்சம், இந்த ஆறு திபெத் பீடபூமியில் தொடங்கி சீனா, மியன்மார், லாவ், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம் என ஆறு நாடுகளைக் கடந்து கடலில் சேர்கிறது. இதன் மொத்த நீளம் 4900 கிலோமீட்டர். தமிழ்நாட்டின் மிகவும் நீளமான காவிரி ஆற்றை விட கிட்டத்தட்ட ஆறரை மடங்கும், இந்தியாவின் மிக நீளமான சிந்து நதியை விட கிட்டத்தட்ட ஒன்றரை மடங்கு அதிக நீளம்! "லாவ்" மற்றும் "தாய்" மொழிகளில் மேக்காங் என்றால் 'தண்ணீரின் தாய்' என்ற பொருள் இந்த ஆற்றுக்கு மிகவும் பொருத்தமானதே.



அமைதியான இந்த ஆற்றில், அரண்மனையில் இருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள "பக் ஓ" (Pak Ou) குகைக்கு ஒன்றரை மணி நேரப் பயணம். நாங்கள் சென்ற படகு உட்பட அங்குள்ள படகுகள் அனைத்தும் நவீன சொகுசுப் படகுகள் அல்ல. ஆனால், அந்தப் படகுப் பயணம் சொகுசாக இருந்ததற்குக் காரணம் ஆற்றின் ஒரு பக்கம் இருந்த மலைப் பகுதிகளும், மற்றொரு பக்கம் துணி துவைக்கும் மகளிர், நீச்சலடித்து விளையாடும் சிறுவர்கள் போன்ற கண்ணைக் கவரும் ரம்மியமான கிராமிய இயற்கை காட்சிகளும், ஆற்றின் நடுவே நாங்கள் அனுபவித்த மென்மையான தென்றல் காற்றுமே ஆகும். அந்தப் படகுப் பயணம் எங்களின் லாவ் நாட்டு பயண நினைவலைகளில் நிலைத்து நிற்கும் காட்சியாகும்.

### புத்தர் கொலு

அருமையான படகு சவாரியை அனுபவித்த பிறகு சுண்ணாம்புக் கல் பாறைகளில் உள்ள குகைக்குள் சென்றதும் பல்வேறு அளவுகளிலும், வகைகளிலும் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட புத்தர் சிலைகள்



நம்மை வரவேற்று வாழ்த்துகின்றன. பழங்காலத்தில் கடுமையான வானிலையின் போது மீனவர்கள் இக்குகைகளில் தஞ்சமடைந்து, ஆற்றில் தாங்கள் கண்டெடுத்த பழைய புத்தர் சிலைகளை அங்கு வைத்து வணங்கினராம். அதைத் தொடர்ந்து வீட்டில் இருந்து உடைந்த, பழைய புத்தர் சிலைகளை தூக்கிப் போடாமல் இந்த குகைகளில் கொண்டு வந்து மக்கள் வைக்க, காலப் போக்கில் இது புத்தர் கொலுவாக காட்சியளிக்கிறது. இங்குள்ள சிலைகள் அனைத்தும் புத்தர் சிலைகளாக இருந்தாலும், அவை ஒவ்வொன்றிற்கும் உள்ள தனித்துவத்தைப் பார்க்கும் போது வியப்பாக இருந்தது.

தமிழ் வருடப் பிறப்பை ஒட்டியே லாவ் வருடப் பிறப்பும் ஏப்ரல் மாதத்தின் மத்தியில் வருகிறது. இந்த இரண்டு குகைகளும் வருடப் பிறப்பின் போது உள்நாட்டு மக்களின் வழிபாட்டுத் தலமாகவும், மற்ற நாட்களில் வெளிநாட்டவரின் சுற்றுலாத் தலமாகவும் செயல்படுகின்றன.

### வெளியே போகும் இந்து மதம்

லாவ் 1354ஆம் ஆண்டு முதல் மன்னர் ஆட்சியில் இருந்தது. 1893 முதல் பிரெஞ்சு ஆளுகையின் கீழ் இருந்தாலும், லாவ் மன்னருக்கு கவின்மிகு அரண்மனை ஒன்று மேக்காங் ஆற்றங்கரையில் பிரெஞ்சு உதவியுடன் 1904இல் கட்டப்பட்டது. கம்யூனிஸ்ட்கள் மன்னர் பரம்பரையை 1975இல் வெளியேற்றி, பிற்காலத்தில் அரண்மனையை தேசிய அருங்காட்சியகமாக மாற்றினர்.



இங்குள்ள பிரம்மாண்டமான புத்தர் சிலை 2,000 வருடங்களுக்கு முன்பு இலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்டதாம். லாவ் புத்த நாடு, இந்து மதம் நாட்டை விட்டு வெளியேறிய மதம் போன்ற கருத்துக்களை உணர்த்துவது போல் அரண்மனையின் வெளிக் கதவுகளில் ராமாயணம் மற்றும் அப்சாரா நடனம் தொடர்பான ஓவியங்கள் உள்ளன.

### கை இல்லாமல் கைப் பந்து!

லாவ் நாட்டின் தேசிய விளையாட்டுக்குப் பெயர் கேட்டர் (kator). கைப் பந்து (volley ball) விளையாட்டுக்கு ஒப்பான இந்த விளையாட்டில் கையைத் தவிர, கால், முழங்கால், தோள்பட்டை, மார்பு, தலை போன்ற, உடலின் அனைத்து பகுதிகளையும் பயன்படுத்தி பந்தை அடிக்கலாம். மற்ற தென் கிழக்காசிய நாடுகளில் வெவ்வேறு பெயர்களில் விளையாடப்படும் இந்த விளையாட்டு கைப் பந்து மற்றும் கால் பந்து விளையாட்டின் கலவை எனலாம்.



### கோழிச்சண்டை

கோழிச்சண்டைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும், இந்தியாவைப் போன்று இங்கும் கிராமப்புறங்களில் அது மறைமுகமாக நடைபெற்று வருகிறது. அண்மையில் சிவகங்கை மாவட்ட கிராமப்புறங்களில் பயணம் செய்த போது, என்னுடன் வந்த உள்ளூர் ஓட்டுநர் ஒரு கிராமத்தைக் குறிப்பிட்டு அங்கு சண்டைச் சேவல் வளர்ப்பு அதிகம் என்றும், ஒரு சேவலின் விலை ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் இருக்கும் என்று கூறிய போது, லாவ் உட்பட உலகின் பல பகுதிகளில் இன்றும் மறைமுக கோழிச்சண்டை விளையாட்டுகள் நடைபெற்று வருவது நினைவில் வந்தது.

### வாங்க வாங்க லாவ் நாட்டிற்கு...




பயணம் செய்யும் போது அந்நாட்டு உணவு வகைகளைச் சுவைத்து பார்க்க வேண்டியது அவசியம். அதில் அதிகம் ஆர்வம் உள்ளவர்களுக்குக் கூட இடையிடையே எப்போதாவது ஒரு வேளையாவது நம் உணவு கிடைக்காதா என்ற ஏக்கம் வருவது இயல்பே. எங்களின் அந்த ஏக்கத்திற்கு விடை கொடுத்தது லுஅங் பிரபங் நகரில் ஒரு சிறு நதியின் கரையிலே இருந்த 'சென்னை உணவகம்'.

அதன் உரிமையாளர் அமானுல்லா காரைக்கால் பகுதியில் இருந்து பல்லாண்டுகளுக்கு முன்பு லாவ் நாட்டிற்குப் புலம் பெயர்ந்து அங்கு வாழ்ந்து வருபவர். தமிழ் பேசும் குரல்களைக் கேட்டதும் அவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. மிகவும் அன்போடும், பண்போடும் பேசிய அவர் "லாவ் அமைதியான, அருமையான நாடு, நம் ஊர் கிராமப்புறங்களைப் போன்று இங்கு இருக்கும். இயற்கை எழில் கொஞ்சும் எங்கள் நாட்டை மற்ற தமிழர்களையும் வந்து பார்க்கச் சொல்லுங்கள்" என்று பாசத்தோடு உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்!

(தொடரும்)



சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

### 119) திருக்கச்சி ஏகம்பம் – காஞ்சிபுரம்: (தொடர்ச்சி)

வைணவப் பெருமக்கள் போற்றி வழிபடும் அத்திகிரி அருளாளன் எனப்படும் வரதராஜப் பெருமாள் உள்பட பல பாடல் பெற்ற தலங்கள் காஞ்சியில் உள்ளன. ஏகாம்பரநாதர் ஆலயத்தில் உள்ள சிவலிங்கம் மண்ணால் ஆனது. இவருக்கு அபிடேகம் இல்லை. புனுகு மட்டுமே சார்த்தப்படும். உமையவள் கம்பை நதிக்கரையில் மணலால் பெரிய சிவலிங்கம் அமைத்து வழிபட்ட போது கம்பை நதியில் திடீரென்று வெள்ளம் வந்தது. உமையவள் இலிங்கத்தை இறுகக் கட்டித் தழுவிக் காப்பாற்றினாள். சிவபிரான் வெளிப்பட்டார். அவர் திருமேனியில் அன்னையின் முலைத் தழும்பும் வளைத்தழும்பும் பதிந்தன. அவர் தழுவக் குழைந்த தலைவரானார். இங்கு ஒற்றை மாமரத்தடியில் இறைவர் வீற்றிருக்கிறார். இங்குள்ள அம்பாள் உற்சவ மூர்த்தியின் பெயர் ஏலவார்குழலி. இங்குள்ள ஒன்பது நிலை ராஜகோபுரம் 1509-ல் கிருஷ்ண தேவராயரால் கட்டப் பெற்றது. கோயிலின் முன்புறம் திருக்கச்சி மயானம் என்ற தேவாரத் தலம் உள்ளது. இங்கு வேதமே மாமரம் ஆக உள்ளது. இதன் வயது 3600 ஆண்டுகள் என்கிறார்கள். திருமங்கையாழ்வார் பாடிய நிலாத் திங்கள் துண்டப் பெருமான் சந்நிதி சிவன் கோயிலுக்கு உள்ளேயே இருக்கிறது.

காஞ்சிபுரத்தில் எந்தச் சிவன் கோயிலிலும் தனியாக அம்பாள் சந்நிதி இல்லை. காமாட்சி தான் எல்லாச் சிவன் கோயில்களுக்கும் ஒரே தேவியாவாள். அம்பாள் உற்சவமூர்த்திகள் இருக்கும். மூலஸ்தான மூர்த்தி இல்லை.

திருக்கச்சி ஏகம்பம் எனப்படும் ஏகாம்பர நாதர் கோயிலில் தேவகோட்டை மேனா வகை மெ.ராம.அ. முத்தையா செட்டியார் என்ற இராமநாதன் செட்டியார், ராம.மெ. லெட்சுமணன் செட்டியார் ஆகிய இருவரும் இணைந்து இருபது லட்ச ரூபாய் செலவு செய்து திருப்பணி செய்தார்கள். விகாரி ஆண்டு, தை மாதம், 23-ஆம் நாள் (04.02.1900) மிகச் சிறப்பாகத் திருக்குட நன்னீராட்டு நடந்தது. இது மிகப் பெரிய திருப்பணியாகும்.

கண்டனூர் வயி.ராம. குடும்பத்தார் சில திருப்பணிகள் செய்து, துந்துபி ஆண்டு, வைகாசி மாதம், 25-ஆம் தேதி (07.06.1922) திருக்குட நன்னீராட்டுச் செய்தார்கள். திருப்பணிக் கைங்கர்யம் ரூ.70,000/- ஆகும். இதே குடும்பத்தார் ரூ.6,000/- செலவில் வேத பாடசாலை அமைத்தார்கள். தேவகோட்டை ராம.மெ.லெ. ரூ.10,000/- செலவில் ஆகம பாடசாலை வைத்தார்கள். கண்டனூர் ராம. வயி.அரு. ரூ.3,000/- செலவில் பசுமடம் கட்டினார்கள். நந்தவனமும் அமைத்தார்கள். தேவகோட்டை நா.ராம.அ., மெ.லெ.ராம. ஆகியோர் ரூ.10,000/- செலவில் குருபூஜை மடம் கட்டினார்கள்.

கண்டனூர் சி.ராம.சு. இராமன் செட்டியார் மனைவி சிவகாமி ஆச்சி எட்டாயிரம் ரூபாய் செலவில் சுரகரீஸ்வரர் கோயிலில் திருப்பணி செய்து நள ஆண்டு, (1916) திருக்குட நன்னீராட்டுச் செய்தார்கள்.

### 120) திருக்கச்சி நெறிக்காரைக்காடு (Pincode - 631 501):

காஞ்சிபுரத்தில் உள்ள பாடல் பெற்ற ஐந்து திருக்கோயில்களில் ஒன்றான இத்தலம் இப்பொழுது திருக்காலிமேடு என்று வழங்கப்படுகிறது. இது சம்பந்தர் பாடல் பெற்ற தலமாகும். காரைச் செடிகள் நிரம்பிய காட்டுப் பகுதியாக இருந்ததால் காரைக்காடு எனப்பட்டது. இறைவன் பெயர் சத்திய விரதேஸ்வரர். உற்சவ அம்பாள் பெயர் பிரமராம்பிகை. இந்த இறைவன் பெயராலேயே காஞ்சிக்குச் சத்திய விரதக்ஷேத்திரம் என்ற பெயர் ஏற்பட்டது. இங்குள்ள உற்சவத் திருமேனிகள் மிகமிக அழகானவை. மூலவர் செம்மண் நிறத்தில் காட்சியளிக்கிறார். இந்தச் சிவாலயம் தேவகோட்டை ராம.மெ. மெய்யப்பச் செட்டியாரால் எழுபதாயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்

பெற்றுச் சித்தார்த்தி ஆண்டு, தை மாதம், 21-ஆம் நாள் (03.02.1920) திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றது.

121) திருவோத்தூர் (Pincode - 604 407):

காஞ்சிபுரத்துக்குப் பக்கத்தில் உள்ள இத்தலம் இப்பொழுது திருவத்திபுரம் என்றழைக்கப்படுகிறது. இது சம்பந்தர் பாடல் பெற்ற தலமாகும். ஒத்து என்றால் வேதம் என்று பொருள். இறைவன் வேதத்திற்குப் பொருள் சொன்ன இடம் என்பதால் இப்பெயர் பெற்றது. சம்பந்தர் இங்குள்ள ஆண் பனை மரத்தைப் பெண் பனையாக்கிக் காய்க்கச் செய்தார். இறைவன் வேதபுரீஸ்வரர். இறைவி இளமுலை நாயகி. இங்குள்ள நந்தி இறைவனை நோக்காமல் கோபுரத்தை நோக்கித் திரும்பி இருக்கும். விசுவாவசு என்ற மன்னனிடம் தோற்றுப் போன தொண்டைமான் வேதபுரீஸ்வரரை வணங்கி வேண்டியதால், அவர் அவனுக்குத் துணையாக நந்தியெம்பெருமானை அனுப்பினார். அதனால் தொண்டைமான் மன்னன் வெற்றி பெற்றான். இதனால் நந்தி கோபுரத்தை நோக்கித் திரும்பியபடி இருந்து விட்டது. இத்தலத்துக்குக் கருணாகரக் கவிராயர் தலபுராணம் பாடி இருக்கிறார். இத்தலத்தில் தேவகோட்டை மெ.அரு.நா. இராமநாதன் செட்டியாரால் பத்தாயிரம் ரூபாய் செலவில் குருபூசை மடம் நிறுவப் பெற்றுள்ளது.

122) வன்பார்த்தான் பனங்காட்டூர் (Pincode - 604 410):

திருப்பனங்காடு என்று இப்பொழுது அழைக்கப்படும் இத்தலம் காஞ்சிபுரத்திலிருந்து கலவை, பெருங்காட்டூர் செல்லும் வழியில் உள்ளது. சுந்தரர் பாடல் பெற்றது இத்தலம். அவரிடம் இறைவன் "நான் பனங்காட்டுக்கும் வன்பாக்கத்துமாய் இருப்பவன்" என்று கூறினார். அதனால் இத்தலம் வன்பார்த்தான் பனங்காட்டூர் எனப் பெயர் பெற்றது. வன்பாக்கம் என்ற ஊர் இதன் அருகில் உள்ளது. இறைவன் சடாமுடியில் உள்ள கங்கை தீர்த்தமாக வெளிப்பட்டதால் இங்குள்ள குளம் சடாகங்கை எனப்படுகிறது.

இங்கு இரண்டு சுவாமி சந்நிதிகளும், இரண்டு அம்மன் சந்நிதிகளும் உள்ளன. அமிர்தவல்லி உடனாகிய தாலபுரீஸ்வரர், கிருபா நாயகி உடனாகிய கிருபாநாதேஸ்வரர் எனப்படும் இவர்கள் அகத்தியராலும், புலஸ்தியராலும் வழிபடப் பெற்றவர்கள். தலமரமான பனை கோயிலுக்கு உள்ளும் வெளியிலும் உள்ளது. இங்குள்ள தட்சிணாமூர்த்தி அமைப்பு அற்புதமானது. இங்கு வாலி, சுக்ரீவர் போரிடும் காட்சியும், இராமர் வில்லேந்தி நிற்கும் காட்சியும் ஒரு தூணில் உள்ளது. இராமரிடம் நின்று பார்த்தால் வாலியின் உருவம் தெரிகிறது. வாலிக்கு அருகில் நின்று பார்த்தால் இராமர் உருவம் தெரியவில்லை. கோயிலுக்கு வெளியில் கோட்டை முனீஸ்வரர் கோயில் உள்ளது. இந்தச் சிவாலயம், தேவகோட்டை பெரி.எ.சொ. மாணிக்கம் செட்டியார், பழனியப்ப செட்டியார் இருவராலும் ரூபாய் இரண்டு லட்சம் செலவில் திருப்பணி செய்யப் பெற்று, விபவ ஆண்டு, ஆனி மாதம், 22-ஆம் நாள் (05.07.1928) திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றது. இக்குடும்பத்துப் பெரியவர் ஏகப்ப செட்டியார் திருவுருவச் சிலை இறைவனைக் கைகூப்பி வணங்கும் நிலையில் சதாசேவைச் சிற்பமாக இக்கோயிலில் அமைக்கப் பெற்றுள்ளது. இந்தக் குடும்பத்தார் இக்கோயில் பணிகளைத் தொடர்ந்து செய்வது பாராட்டத்தக்கது. இத்தலத்திலுள்ள திருக்குளம் கல்லல் ஆ.மு.ஆ. முருகப்ப செட்டியாரால் இருபத்தைந்தாயிரம் செலவில் அமைக்கப் பெற்றுள்ளது. இங்கு 22 கல்வெட்டுகள் உள்ளன. சுவாமிக்குப் பனம்பழம் நைவேத்தியம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. ஏகப்ப செட்டியாரின் திருவுருவச் சிலைக்குப் பின்புறம் உள்ள தூண்களில் சிற்பங்கள் சிறப்பாக அமைந்துள்ளன.

123) திருமாற்பேறு (Pincode - 631 053):

காஞ்சிபுரம் - அரக்கோணம் இரண்டுக்கும் இடையில் உள்ள இத்தலம் இப்பொழுது திருமால்பூர் என்றழைக்கப்படுகிறது. திருமால் ஆயிரம் தாமரை மலர்களால் சிவபெருமானை வழிபட்ட போது ஒருநாள் ஒரு மலர் குறைந்து விட்டது. தாமரைக் கண்ணனாகிய திருமால் தன் கண்ணையே இடந்து அர்ச்சித்துச் சிவபெருமானிடம் சக்ராயுதம் பெற்றார். இதற்குச் சாட்சியாக இக்கோயிலில் திருமால் உற்சவத் திருமேனி ஒன்று, ஒரு கையில் தாமரை மலரும், மறுகையில் "கண்"ணும் கொண்டு நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறது. இதனால் இவ்வூருக்கு ஹரிச்சக்ரபுரம் என்ற பெயரும் உண்டு. இது சம்பந்தரும், அப்பரும் பாடிய திருத்தலமாகும். இறைவன் பெயர் மணிகண்டேஸ்வரர் என்ற மால்வணங்கீசர். அம்மையின் பெயர் அஞ்சனாட்சி என்ற கருணாம்பிகை. சிவலிங்கத் திருமேனி தீண்டாத் திருமேனி குவளை சார்த்தி அபிஷேகம் செய்யப்படுகிறது. இது கூம்பு வடிவில் உள்ளது. துர்க்கை எட்டுக் கரங்களோடு சங்கு சக்கரம் ஏந்தி அழகாகக் காட்சி தருகிறாள். மூலவருக்கு எதிரில் மகாவிஷ்ணு கூப்பிய கரங்களோடு நிற்கிறார். இவருக்குத் தீபாரதனை ஆன பின்பு சடாரி சார்த்தித் தீர்த்தம் தரும் மரபு உள்ளது. இக்கோயிலில் தேவகோட்டை அள.வீர.சித. லெட்சுமணன் செட்டியார், வீரப்ப செட்டியார், இராமநாதன் செட்டியார் ஆகியோர் தம் பொருள் கொண்டும் நகரத்தார் பொருளுதவி கொண்டும் திருப்பணி செய்து, ஈஸ்வர ஆண்டு, ஆனி மாதம், 15-ஆம் நாள் (28.06.1937) திருக்குட நன்னீராட்டுச் செய்தனர். இத்தலத்தில் உள்ள சிதம்பரேஸ்வரருக்கு ஐப்பசி மாதம் நடக்கும் அன்னாபிஷேகம் மிகச் சிறப்பானது.

(திருப்பணிகள் தொடரும்)




# திருத் தஞ்சை மாமணிக் கோவில் - [20]

நா. சௌரிராஜன், கோட்டையூர்



தஞ்சை மாமணிக் கோயிலே போற்றி!
தஞ்சை நாயகித் தாயே போற்றி!
தஞ்சை யாளி நரசிம்மா போற்றி!
அம்புஜ வல்லி மணிக்குன்றனே போற்றி!
செங்கமல வல்லி நாச்சியே போற்றி! போற்றி!

*****



எம்பிரானின் திருநாமமாகிய "நாராயணா" என்னும் நாமமே நான் கடைத் தேறக் கண்டு கொண்ட நாமம் - என்று திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட இத்தலம் தஞ்சை நகரைத் தாண்டியதும் அமைந்துள்ள வெண்ணாற்றங்கரை மீது உள்ளது.

சிவனிடம் வரம் பெற்று மிகுந்த செருக்குடன் தேவர்களையும், தவம் செய்யும் முனிவர்களையும் அச்சுறுத்திக் கொடுமைகள் பல புரிந்து வந்த அரக்கர்கள் தஞ்சன், தண்டகன், கஜமுகன் என்ற மூவரையும் பராசர முனிவர் அழைப்பின் பேரில் பக்தர்களைக் காக்கும் பரந்தாமனாக வந்த பெருமாள் போரிட்டு அழித்தார். தவறு உணர்ந்த தஞ்சகன் தன்னை மன்னிக்குமாறு பெருமாளிடம் வேண்டித் தன் பெயரிலேயே இந்நகரம் திகழ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். எனவே, தஞ்சகனூர் ஆகி தஞ்சகூராகி, தஞ்சாவூராயிற்று.

கஜமுகன் என்னும் அரக்கனைப் பெருமாள் நரசிம்ம ரூபம் எடுத்துக் கொல்ல, இறக்கும் தருவாயில் அவன் வேண்டுகோளை ஏற்றுப் பெருமான் திருநாடு அளித்தார். யாளியாகிய நரசிம்ம ரூபத்தில் நின்றதால், தஞ்சையாளி என்ற பெயராயிற்று. மூன்றாவதான தண்டகாசுரனையும் பெருமாள் அழித்து வீழ்த்த, அவன் பெயரால் தண்டகாரண்யம் எனும் பெயர் உண்டானது.

இந்த வெண்ணாற்றங்கரையில் இப்போது மூன்று கோயில்கள் உள்ளன. இந்த மூன்று கோயில்களிலும் மூன்று பெருமான்கள் எழுந்ருளி உள்ளனர். மூன்று தலங்கள் இருந்தாலும் ஒரே திவ்யத் தேசமாகவே மங்களாசசனம் செய்யப்பட்டுள்ளது. இம்மூன்றும் சுமார் 1/4 கி.மீ. சுற்றளவுக்குள்ளேயே அமைந்துள்ளன.

1) தஞ்சை மாமணிக் கோயில்: மூலவர்: நீலமேகப் பெருமாள் - கிழக்கு நோக்கி தஞ்சையை நோக்கி வீற்றிருந்த திருக்கோலம். தாயார்: செங்கமல வல்லி.

2) மணிக்குன்றம்: மூலவர்: மணிக்குன்றப் பெருமாள் - கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலம். தாயார்: அம்புசவல்லி

3) தஞ்சையாளி நகர்: மூலவர்: நரசிம்மன் கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலம். தாயார்: தஞ்சை நாயகி.

தஞ்சையைப் பார்த்த வண்ணம் விக்ரஹங்கள் அமைந்திருப்பதால், தஞ்சையைக் காத்தருளும் தெய்வம் தஞ்சை மாமணி என்று போற்றப்படுகிறது.

இந்நகரில் கருடனின் சக்தி இருப்பதாகவும், கருடன் பறந்து இந்நகரைக் காப்பதாகவும் ஐதீகம். கருடன் பறப்பதால் இந்நகரில் பாம்பு கடிக்காது என்பதும் பழமொழி.

*****

எம்பிராணெந்தை யென்னுடைச் சுற்றம்
எனக்கர சென்னுடை வானாள்
அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுந்தவெம் மண்ணல்
வம்புலாஞ் சோலைமாமதில் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

தஞ்சைக்குப் பெயர் கொடுத்த பெருமாளைத் திருமங்கை ஆழ்வார் இப்படிப் பாடுகிறார்.

வம்புலாஞ் சோலை மாமதில் சூழ் தஞ்சை மாமணிக் கோயிலில் உள்ள எம்பிரான்தான் எனக்குத் தந்தை, அவனே எனக்கு எல்லாம், என்னுடைய சுற்றமும் அவனே, என்னுடைய வாழ்நாளும் அவன்தான்! அரக்கர் குலத்தை அம்பால் அறுத்துக் குவித்த அண்ணலாகிய எம்பிரானின் நாமமாகிய "நாராயணா" என்னும் நாமமே நான் கடைத்தேறக் கண்டு கொண்ட நாமம்.

பிறவி என்பதுதான் பெருங்கடல். பிறவிப் பெருங்கடலைக் கடப்பது என்பது மிகவும் கடினம். நம் பிறவியிலே நாம் அடைந்த, அடைகின்ற துன்பங்கள் மிகப்பல. ஆனால், அதை நாம் கடந்து பிறவித் துன்பங்கள் நீங்கி நலம் பெற்றிட ஒரே வழி..... "நாராயணா!" என்னும் நாமமே! தஞ்சை மாமணிக் கோயிலை வணங்கி, திருமங்கையாழ்வார் கண்டு கொண்ட "நாராயணா" என்னும் நாமத்தை நாமும் கண்டு கொண்டு, அதுவே உய்ய வழி என உணர்ந்து, தினமும் நாராயணா நாமம் சொல்லி நலம் பெறுவோம்!

ஓம் நமோ நாராயணா!
ஓம் நமோ லட்சுமி நாராயணா!

(பயணம் தொடரும்)

# கண்டவராயன்பட்டி ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் மகாகும்பாபிஷேகம்






சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே உள்ள கண்டவராயன்பட்டியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலின் மகாகும்பாபிஷேக விழா மாசி மாதம், 26-ஆம் தேதி (10.03.2025) அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக 3 நாட்கள் நான்கு காலபூஜைகளாக, விக்னேஸ்வர பூஜை, மகா கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், கோபூஜை, லட்சுமி பூஜை உள்ளிட்ட பல வேறு பூஜைகள் யாகசாலையில் நடத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து மகா பூர்ணாகுதியுடன் தீப ஆராதனையோடு பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ பிச்சை குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் யாகசாலையில் வேத மந்திரங்கள் முழங்க விமான கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் கோவில் வளாகத்தில், அருகாமையில் அமைந்துள்ள நாச்சியப்ப ஐயா ஜீவசமாதி கோயிலுக்கும் கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக உயர் நீதிமன்ற முன்னாள் நீதி அரசர் டாக்டர் மெ. சொக்கலிங்கம், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன், சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் பிஆர். செந்தில்நாதன், பொருளாதார நிபுணர் சேதுராமன் சாத்தப்பன், நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத் தலைவர் லேனா நாராயணன், முன்னாள் தலைவர் லேனா காசிநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விழாக் குழு நிர்வாகிகளான N.S.S. சிவசுப்பிரமணியன், சே.குமரப்பன், நாச்சியப்பன், தேனப்பன் மற்றும் தெ.சி.நா.குடும்பத்தினர் செய்திருந்தனர். மேலும் நாட்டார் நகரத்தார்கள் மற்றும் கிராமப் பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்ட இவ்விழாவில் கோவில் நிர்வாகத்தின் சார்பில் சுமார் 5000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



# உலகமொழிகளில் திருக்குறள் பன்னாட்டுக் கருத்தரங்கம்

சேலம் பெரியார் பல்கலைக் கழகமும், தமிழ்த்துறையும் இணைந்து 'உலக மொழிகளில் திருக்குறள்' எனும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கை, மார்ச் 26, 27 தேதிகளில் நடத்தின. கருத்தரங்கில் எழுத்தாளர் "குறள் இனிது" நூலாசிரியர் சோம வீரப்பன் அவர்களுக்கு சிறப்பு செய்யும் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் இரா. கோவிந்தன். அவர்களுடன் மலேசியாவின் எழுத்தாளர் பெ. ராஜேந்திரன் மற்றும் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் தி. பெரியசாமி.



# “உத்தரகோசமங்கை நகரத்தார் திருப்பணி”

பழ.கைலாஷ்

“சீரார் பவளங்கால் முத்தம் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தாளிணை பாடிப்
போரார் வேற்கண்மடவீர் பொன்னூசலாடாமோ”

தமிழகத்தில் உள்ள அனைத்து சிவாலயங்களிலும் இரவு பள்ளியறை பூஜையில் பாடப்படுவது திருவாசகத்தின் திருப்பொன்னூசல் பதிகம். இது மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் வசிக்கும் காலத்தில் உத்தரகோசமங்கையை நினைத்து பாடியது.

சுவாமியையும் அம்பாளையும் இரவு பள்ளியறையில் ஊஞ்சலில் ஒரு சேர அமர வைத்து ஆராதனை செய்து திருப்பொன்னூசல் பதிகத்தை தாலாட்டாக பாடி பூஜிப்பது தொன்றுதொட்டு வரும் சைவ சமய மரபு. நாள் முழுவதும் எத்தனை பூஜைகளை பார்த்தாலும், இரவு பள்ளியறை பூஜையை கண்டு வழிபடுவது மிகுந்த புண்ணியமாக கருதப்படுகின்றது.

எத்தனை சிவாலயங்களில் பள்ளியறை பூஜைகள் பார்த்தாலும் அத்தனையையும் விட புண்ணியமாக கருதப்படுவது திருப்பொன்னூசல் பதிகத்தில் குறிப்பிடப்படும் உத்தரகோசமங்கை பள்ளியறை பூஜையே!

இவ்வளவு சிறப்பு வாய்ந்த உத்தரகோசமங்கை பள்ளியறை கல்திருப்பணி செய்தவர்கள் தேவகோட்டை நகரத்தார்கள்.

பாண்டிய நாட்டில் உள்ள சிவத்தலங்களுள் மிகப்பழமையான தலமாக சைவர்களால் நம்பப்படுவது உத்தரகோசமங்கை. ‘மண் முந்தியோ மங்கை முந்தியோ’ என்பது இத்தலம் குறித்து தொன்று தொட்டு வழங்கிவரும் பழஞ்சொல்.

“மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தரகோசமங்கை ஊராகவும்”

எனக் கீர்த்தித் திருஅகவலில் மாணிக்கவாசகர் பாடுகிறார்.


இதன் பொருள், பக்தி செய்கின்ற அடியவர்களுக்கு சிவன் முக்தியைக் கொடுக்கிறான். அத்தகையவன் பாண்டிய நாட்டை தன்னுடைய உறைவிடமாகவும் உத்தரகோசமங்கையை தனது ஊராகக் கொண்டிருக்கிறான்.

இத்தலம் திருவாசகத்தில் 38 இடங்களில் பாடப்பட்டுள்ளது. இது மாணிக்கவாசகர் மனதிற்கு நெருங்கிய தலம். மாணிக்கவாசகருக்கு திருப்பெருந்துறையில் காட்சியளித்து உபதேசித்த சிவபெருமான் மீண்டும் இத்தலத்தில் காட்சியளித்துள்ளார்.

உத்தரகோசமங்கை = உத்தரம்+கோசம்+மங்கை. உத்தரம் – உபதேசம்; கோசம் – ரகசியம்; மங்கை – பார்வதி. பார்வதி தேவிக்கு இறைவன் வேதாகமங்களின் ரகசியங்களை உபதேசித்தமையால் இத்தலம் உத்தரகோசமங்கை என்னும் பெயர் பெற்றது என்கிறது தலபுராணம்.

இத்திருத்தலத்தில் இறைவனும் இறைவியும் மங்களநாதர் – மங்களேசுவரி என்ற திருப்பெயர்களால் அருள்பாலிக்கின்றனர்.

இங்கு ஐந்தரை அடி உயர மரகதத் திருமேனியுடன் நடராசர் ஆண்டு முழுவதும் சந்தனக் காப்பில் அருள்பாலிக்கின்றார். மார்கழித் திருவாதிரையில் சந்தனக்காப்பு முழுவதும் களையப்பட்டு சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது. இத்தலம் சிதம்பரத்துக்கு இணையாக




*கோவையை சேர்ந்த அரன்பணி அறக்கட்டளை தற்போது உத்தரகோசமங்கையில் பெரும் பொருட்செலவில் பல திருப்பணிகள் செய்துள்ளார்கள். மங்களநாதர் சந்நிதி நந்தி மண்டபம், மங்களேசுவரி அம்மை சந்நிதி எதிரேயுள்ள திருக்கல்யாண மண்டபம், இவை இரண்டையும் இணைக்கும் மண்டபம் எல்லாம் கடற்பாறை கற்களால் ஆனது. இவை காலப்போக்கில் சிதிலமடைந்திருந்தன. இவற்றை பழமை குன்றாதவாறு கடுக்காய் சுண்ணாம்பு கலவை கொண்டு பூசி, வர்ணம் தீட்டி, புதிய தலவரிசைக்கற்கள் பதித்து புதுபித்துள்ளனர். மேலும் நந்திக்கு என புதிய கல் மண்டபமும், அம்மன் கோயில் முன் ஒரு புதிய கல்மண்டபமும், நடராஜர் சந்நிதி முன் ஒரு புதிய கல் மண்டபமும் கட்டியுள்ளனர். நடராஜர் கூரைக்கு புதிய பொன் ஓடும் பள்ளியறை ஊஞ்சலுக்கு பொற்தகடும் வேய்ந்துள்ளனர். திருக்குளத்தை தூர்வாரி புதுப்பித்து, சகஸ்ரலிங்கம் சந்நிதி, மாணிக்கவாசகர் சந்திதி உள்ளிட்ட கோயிலின் பெரும் பகுதியை திறம்பட அரன்பணி அறக்கட்டளை புதுப்பித்துள்ளனர்.*

போற்றப்படுகிறது. ஆதி சிதம்பரம் என்றும் அழைக்கப்படுகின்றது.

உத்தரகோசமங்கை கோயில் ஆதியில் பாண்டிய மன்னர்களால் கட்டப்பெற்றது. பின்னர் நாயக்க மன்னர்கள் மற்றும் சேதுபதி மன்னர்களால் பற்பல திருப்பணிகள் செய்யப்பெற்றுள்ளன. இது சேதுபதி மன்னர்களின் நிர்வாகத்திற்கு உட்பட்ட கோயில்.

சுமார் 130 ஆண்டுகளுக்கு முன், உத்தரகோசமங்கை கோயிலை சீரமைக்கும் பொறுப்பை மன்னர் பாஸ்கர சேதுபதி, நகரத்தாரிடம் கொடுத்துள்ளார்.

தேவகோட்டை ஜமீந்தார் அழ.அரு. அருணாச்சலம் செட்டியார் 1901-ஆம் ஆண்டு முதல் சில காலம் உத்தரகோசமங்கை கோயிலின் நிர்வாக மேலாளராக இருந்துள்ளார்கள்.

தேவகோட்டை அழ.சித.லெ.இராமசாமி செட்டியார் தம் பொருட்செலவிலும், மேலும் சில தேவகோட்டை நகரத்தார் பொருட்செலவிலும் சிதிலமடைந்திருந்த உத்தரகோசமங்கை அம்பாள் கோயிலை முழுமையாக பிரித்து, புதிய கருங்கற்களை கொண்டு மங்களேசுவரி அம்பிகைக்கு கருவறை, அர்த்த மண்டபம், அழகிய வேலைப்பாடுடைய பன்னிரண்டு தூண்களுடன் முன்மண்டபம், பன்னிரண்டு தூண்களுடன் திருச்சுற்று மண்டபம், வெள்ளி ஊஞ்சலுடன் சிறப்புமிக்க பள்ளியறை மற்றும் இரண்டு நிலைகள் கொண்ட கோபுரம் கட்டியுள்ளார். முன்மண்டபம் மற்றும் திருச்சுற்றில் கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்களும் வெளிநாட்டு மின்விளக்குகளும் நிறைந்திருக்கின்றன. இத்திருப்பணி வேலைகள் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடந்திருக்கின்றன.


அம்மன் கோயில் திருப்பணி நிறைவடைந்ததும், சிவன் கோயில் முன்மண்டபத்தை பிரித்துவிட்டு புதிய முன் மண்டபம், பெரிய திருச்சுற்று மண்டபம் மற்றும் மதில்சுவர் கட்டும் திருப்பணிகளை தொடங்கியுள்ளார் இராமசாமி செட்டியார். அப்போது முதலாம் உலகப்போர் ஆரம்பித்து விலைவாசிகள் ஒன்றுக்கு பத்தாக உயர்ந்துள்ளது. விலைவாசிகள் குறைந்து, பழைய நிலைக்கு வந்த பிறகு திருப்பணியை தொடரலாம் என்று காத்திருந்துள்ளார். அந்த சமயம் வயது மூப்பின் காரணமாக 1919-இல் அவர் இறந்துவிட திருப்பணிகள் பாதியில் நின்றுவிட்டன.

அக்காலத்தில் நகரத்தார் பொதுவாக திருப்பணி செய்த கோயில்களில் கல்வெட்டுகள் வைப்பதில்லை. அதுபோல் உத்தரகோசமங்கையிலும் இராமசாமி செட்டியார் செய்த திருப்பணி தொடர்பான கல்வெட்டுகள் ஏதும் இல்லை. அம்மன் கோயில் பெரிய மணியில் மட்டும் 'தேவகோட்டை நகரத்தார்' என்று பொறிக்கப்பட்டுள்ளது.

இராமசாமி செட்டியார் முன்னின்று திருப்பணிகளை செய்திருந்தாலும், திருப்பணி செலவுகளை அவருடன் தேவகோட்டை நகரத்தார் சிலர் பகிர்ந்துள்ளனர். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் 1953-இல் எழுதிய 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற நூலில் அழ.சித.லெ.இராமசாமி செட்டியாருடன் திருப்பணி செலவுகளை பகிர்ந்துகொண்ட தேவகோட்டை நகரத்தார் நால்வர் விலாசம் உள்ளது; அது பின்வருமாறு,

1. அரு.அரு.சோம (சத்திரம் சோம), 2. அரு.அரு.இராம (இரட்டை அரு), 3. அழ.அரு (ஜமீந்தார்),4. அழ.சுப.சு.

பாண்டிய மன்னரால் கட்டப்பெற்ற மங்களநாதர் கருவறை மற்றும் அர்த்தமண்டபம் நல்ல கருங்கற்களால் ஆனது. பின்னர் கட்டப்பெற்ற மண்டபங்கள் மற்றும் அம்பாள் கோயில் உள்ளிட்டவை கடற்பாறை கற்களால் ஆனது. கடற்பாறை என்பது கடற்கரை பகுதியில் கிடைக்கக் கூடியது. அது எளிதில் சிதையும் தன்மை கொண்டது. ஆகையால் தான் கடற்பாறைகளால் கட்டப்பெற்று சிதிலமடைந்திருந்த பகுதிகளை நகரத்தார் கருங்கற்களால் மறுகட்டுமானம் செய்துள்ளனர். இந்த உத்தரகோசமங்கை திருப்பணிக்காக அம்பாசமுத்திரம் அருகேயிருந்து கற்கள் கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகிறது. இராமசாமி செட்டியார் திருப்பணி வேலைகளை உத்தரகோச மங்கையிலேயே தங்கியிருந்து



மங்களேசுவரி அம்பாள் கோயில்

பார்த்து வந்துள்ளார். அதற்காக தெற்கு ரத வீதியில் ஒரு பங்களா கட்டியுள்ளார், அது திருப்பணி பங்களா என்று அழைக்கப்படுகிறது. மேலும் இராமசாமி செட்டியாரால் மேற்கு ரத வீதியில் ஒரு பசுமடமும், பெரிய நந்தவனமும் உருவாக்கப்பட்டுள்ளன. நந்தவனத்தின் உள்ளே பூக்கட்டும் மடமும் அருகே இரண்டு பிள்ளையார் கோயில்களும் கட்டப்பெற்றுள்ளன.

பின்னர் 1959-ஆம் ஆண்டு மன்னர் பாஸ்கர சேதுபதியின் பேரர் மன்னர் ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி தலைமையில் தேவகோட்டை இரட்டை அரு குடும்பத்தார் திருப்பணி குழுவினராக இருந்து, இராமசாமி செட்டியாரின் மூத்த மகன் வழிப்பேரர் அழ.சித.லெ.இராம.இராம. லெட்சுமணன் செட்டியார் திருப்பணி செயலாளராக இருந்து மீண்டும் திருப்பணிகள் தொடங்கப் பெற்றுள்ளது. அதற்கு அடிக்கல் நாட்டிய கல்வெட்டு ஒன்று அங்குள்ளது. அப்போது மங்களநாதர் சந்நதி முன் மண்டபம், மதில் சுவர் மற்றும் திருச்சுற்று மாளிகை கட்டும் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. லெட்சுமணன் செட்டியார் மறைந்ததும், மீண்டும் திருப்பணி பாதியில் நின்று விட்டது.

அழ.சித.லெ.இராமசாமி செட்டியார் பேரர் அரு.இராமசாமி செட்டியார் கூறுகையில் 'எங்கள் ஐயா இராமசாமி செட்டியார் வலையபட்டியில் பிறந்தவர்கள், எங்கள் பாட்டையா லெட்சுமணன் செட்டியாருக்கு ஆண் வாரிசு இல்லாததால் இராமசாமி செட்டியாரை பிள்ளைகூட்டி கொண்டார்கள். உத்தரகோசமங்கை கோயிலை சீரமைக்கும் பொறுப்பை மன்னர் பாஸ்கர சேதுபதி தேவகோட்டை சத்திரம் அருணாசலம் செட்டியாரிடம் கொடுத்தார்கள். அருணாசலம் செட்டியாரின் மகள் உண்ணாமலை ஆச்சியை எங்கள் ஐயா திருமணம் செய்திருந்தார்கள். மேலும் எங்கள் ஐயாவுக்கு இராமநாதபுரத்தில் தொழில் இருந்தது கடைகள் இருந்தன. ஆகையால் உத்தரகோசமங்கை திருப்பணி பொறுப்பை அருணாசலம் செட்டியார், தனது மாப்பிள்ளையான எங்கள் ஐயாவிடம் ஒப்படைத்தார்கள். எங்கள் ஐயாவும் சிறப்புற திருப்பணி செய்தார்கள்.'

மற்றொரு பேரர் அரு.சிதம்பரம் செட்டியார் கூறுகையில் 'உத்தரகோசமங்கை திருப்பணிக்காக தேவகோட்டை சத்திரம் சோம குடும்பத்தார் 250 ரூபாயும், இரட்டை அரு குடும்பத்தார் 250 ரூபாயும், ஜமீந்தார் அழ.அரு குடும்பத்தார் 250 ரூபாயும், அழ.சுப.சு குடும்பத்தார் 125 ரூபாயும், எங்கள் ஐயா அழ.சித.லெ.இராமசாமி செட்டியார் 125 ரூபாயும் என மொத்தமாக மாதத்திற்கு 1000 ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். வருடத்திற்கு 12,000 ரூபாய். 10 வருடங்கள் திருப்பணி நடந்துள்ளது. மொத்த திருப்பணிச் செலவு 1,20,000 ரூபாய். திருப்பணியை எங்கள் ஐயா முன்னின்று மிகவும் சிக்கனமாக நடத்தியுள்ளார்கள்.


## சுவீகாரம்

நன்கு படித்து வேலையில் இருக்கும் 25 வயது வரை உள்ள இரணிகோவிலைச் சார்ந்த ஆண் பையன் சுவீகாரத்திற்குத் தேவை. சுவீகார ஜாதகமாக இருப்பது அவசியம்.

தொடர்புக்கு 63697 95483


ஒருமுறை தேவகோட்டையில் இருந்து உத்தரகோசமங்கைக்கு மாட்டு வண்டியில் எங்கள் ஐயாவும் அப்பத்தாவும் செல்கையில் ஒரு திருடன் வண்டியை பின் தொடர்ந்து இருக்கிறான். அப்பத்தா 'திருடன் நம்மை தொடர்கிறான்' என்று சொல்ல, ஐயா 'அடி பைத்தியக்காரி அது திருடன் அல்ல மங்களநாதர் நமக்கு துணைக்கு வருகிறார்' என்று சொல்ல, அதைக் கேட்டு திருடனும் ஓடிவிட்டானாம். ஐயா எப்போதும் 'மங்களநாதா! மங்களநாதா!' என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள். உத்தரகோசமங்கை மங்களநாதர் மீது அளவுகடந்த பக்தி உடையவராய் இருந்தார்கள்.'

உத்தரகோசமங்கையில் திருப்பணி செய்ததின் காரணமாக தேவகோட்டையில் அழ.சித.லெ.இராமசாமி செட்டியார் வீட்டை உத்தரகோசமங்கை செட்டியார் வீடு என்று அழைக்கின்றனர்.

உத்தரகோசமங்கையில் இராமசாமி செட்டியாரால் தொடங்கப்பெற்ற சிவன் கோயில் திருப்பணி நீண்ட காலத்திற்கு பிறகு தற்போது கோவையைச் சேர்ந்த இரா.வசந்தகுமார் அவர்களால் திருச்சுற்று மாளிகை முழுமையாக கட்டப்பெற்று திருப்பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும், கோவை அரன்பணி அறக்கட்டளை மூலம் கோயிலின் மற்ற பகுதிகள் பழமை குன்றாதவாறு சிறந்த முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2025 ஏப்ரல் 4ஆம் தேதி இராமநாதபுர சமஸ்தான ராணி ராஜராஜேஸ்வரி நாச்சியார் அவர்கள் தலைமையில் வெகுசிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தன்று சிதம்பரம் நகர விடுதி ட்ரஸ்ட் உடன் உத்திரகோசமங்கை செட்டியார் வீட்டில் 'டென்னிஸ் அரு' குடும்பம் இணைந்து அவர்களின் பசுமடத்தில் அன்னதானம் செய்தார்கள். ♦

27 கிளைகள், 36 வருட அனுபவம்




## ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

Incredible India

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை-1

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



## SPECIAL TOURS

www.srimurugantravel.com

- 10 நாள் ஆக்ரா-காசி அயோத்தியா — மாதந்தோறும் 9,21 — Rs. 13500/-
- 13 நாள் டெல்லி-ஆக்ரா அயோத்தியா — மாதந்தோறும் 6,18,27 — Rs. 17500/-
- 6 நாள் ஸ்ரீரடி பண்டரிபுரம் — மாதந்தோறும் 1,8,15,22 — Rs. 8000/-
- 10 நாள் குஜராத்-துவாரகா பட்டேல்சிலை — மாதந்தோறும் 17 — Rs. 17000/-
- 17 நாள் பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி — மாதந்தோறும் 10,20 மே முதல் — Rs. 30000/-
- 13 நாள் பத்ரிநாத் கேதார்நாத் — மாதந்தோறும் 10,20 மே முதல் — Rs. 25000/-
- 14 நாள் முக்திநாத்-நேபாள் கொல்கத்தா — மாதந்தோறும் 18 — Rs. 27000/-
- 15 நாள் நவஜோதிர்லிங்கம் — மாதந்தோறும் 18 — Rs. 20000/-
- 10 நாள் சிம்லா-மணாலி ஆக்ரா — ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 — Rs. 18000/-
- 13 நாள் அமர்நாத் — ஜூலை முதல் — Rs. 16000/-

| | | | | |
|---|---|---|---|---|
| 2 நாள் மும்பை-ஸ்ரீரடி<br>தினந்தோறும்<br>Rs. 14990/- | 6 நாள் காசி அயோத்தியா<br>Rs. 34990/- | 6 நாள் சிங்கப்பூர் மலேசியா<br>Rs. 84,990/- | 5 நாள் ஸ்ரீலங்கா Special<br>Rs. 44,990/- | 5 நாள் துபாய் அபுதாபி<br>Rs. 74,990/- |
| 4 நாள் கோவா SPL<br>Rs. 24990/- | 8 நாள் பத்ரி-கேதார்<br>வாரந்தோறும் ஞாயிறு<br>Rs. 44990/- | 5 நாள் சிங்கப்பூர் மலேசியா<br>Rs. 74,990/- | 8 நாள் Exclusive ஸ்ரீலங்கா<br>Rs. 64,990/- | 7 நாள் சௌத்கொரியா<br>Rs. 1,69,990/- |
| 4 நாள் டெல்லி-ஆக்ரா ஜெய்ப்பூர்<br>வாரந்தோறும் வியாழன்<br>Rs. 26990/- | 12 நாள் பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி<br>வாரந்தோறும் திங்கள்<br>Rs. 54990/- | 10 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து<br>Rs. 1,34,990/- | 5 நாள் இந்தோனேசியா பாலி<br>Rs. 64,990/- | 7 நாள் கென்யா<br>Rs. 1,59,990/- |
| 5 நாள் அந்தமான் ஹேவலோக்<br>தினந்தோறும்<br>Rs. 29990/- | 6 நாள் முக்திநாத் நேபாள்<br>ஏப்ரல் 1,18 மே 1,10,18<br>Rs. 29990/- | 8 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து<br>Rs. 94,990/- | 6 நாள் வியட்நாம் கம்போடியோ கலாங் விரிகுடா<br>Rs. 94,990/- | 9 நாள் ஆஸ்திரேலியா<br>Rs. 2,94,990/- |
| 5 நாள் காஷ்மீர் குல்மார்க்<br>வாரந்தோறும் புதன்<br>Rs. 44990/- | 6 நாள் பூடான் SPL<br>வாரந்தோறும் செவ்வாய்<br>Rs. 44990/- | 5 நாள் பாங்காக் பட்டாயா Standard<br>Rs. 52,000/- | 7 நாள் Exclusive சீனா<br>Rs. 1,54,000/- | 11 நாள் ஆஸ்திரேலியா நியூசிலாந்து<br>Rs. 5,29,990/- |
| 5 நாள் டார்ஜலிங் கேங்டாக்<br>வாரந்தோறும் புதன்<br>Rs. 39990/- | 8 நாள் காஷ்மீர் லே-லடாக்<br>வாரந்தோறும் ஞாயிறு<br>Rs. 64990/- | 4 நாள் பாங்காக் பட்டாயா Basic<br>Rs. 37,990/- | 10 நாள் ஹாங்காங் மக்காவ்<br>Rs. 1,34,990/- | 9 நாள் ஜப்பான்<br>Rs. 2,94,990/- |
| 7 நாள் NORTH EAST<br>வாரந்தோறும் திங்கள்<br>Rs. 44990/- | 5 நாள் சிம்லா-குளு மணாலி<br>வாரந்தோறும் புதன்<br>Rs. 27990/- | 5 நாள் புக்கட் கராபி<br>Rs. 64,990/- | 6 நாள் ரஷ்யா Special<br>Rs. 1,34,990/- | 12 நாள் ஈரோப் Special<br>Rs. 2,74,990/- |
| 3 நாள் பூரி புவனேஸ்வர்<br>வாரந்தோறும் வெள்ளி<br>Rs. 24990/- | 5 நாள் லே-லடாக்<br>வாரந்தோறும்<br>Rs. 54990/- | 8 நாள் Exclusive தாய்லாந்து<br>Rs. 94,990/- | 4 நாள் எகிப்து Special<br>Rs. 1,29,990/- | 4 நாள் உஸ்பெகிஸ்தான்<br>Rs. 54,990/- |
| 7 நாள் குஜராத் துவாரகா<br>வாரந்தோறும் செவ்வாய்<br>Rs. 35990/- | 6 நாள் நைனிட்டால் முசௌரி-கார்பெட்<br>வாரந்தோறும் புதன்<br>Rs. 34990/- | 4 நாள் மாலத்தீவு Special<br>Rs. 59,990/- | 8 நாள் எகிப்து Cruise<br>Rs. 1,65,990/- | 4 நாள் கஜகஸ்தான் அல்மைட்டி<br>Rs. 74,990/- |

## அதிரடி ஆஃபர்

- 12 நாள் ஈரோப் SPL — ஏப்ரல் 30, மே 12 — ~~ரூ. 3,25,000/-~~ ரூ. 2,75,000/- முதல்
- 6 நாள் சிங்கப்பூர் மலேசியா — மாதந்தோறும் 1,10,18,25 — ~~ரூ. 95,000/-~~ ரூ. 88,000/- முதல்
- 5 நாள் துபாய் அபுதாபி — ~~ரூ. 75,000/-~~ ரூ. 70,000/- முதல்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குரூப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416



PALANI

## HOTEL PL GRAND

PLEASANT STAY



KARAIKUDI

98421 62416 / 97918 48265
www.hotelplgrand.com

# 6 உங்களுடன் உரையாடுங்கள்


எம். சிதம்பரம்

## எத்தனையோ முறை முயன்றும் கிடைக்கவே இல்லை எனக்கு அப்பாயிண்ட்மெண்ட் என்னிடமே...

உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். உங்களுக்காக மட்டுமே பிரத்தியேகமாக என்றாவது நீங்கள் நேரம் ஒதுக்கியிருக்கின்றீர்களா. உங்களுக்கே குட் மார்னிங் சொல்லியிருக்கிறீர்களா. ஹலோ, ஹாய் சொல்லியிருக்கிறீர்களா? உங்களுக்கு நன்றி சொல்லியிருக்கிறீர்களா? உங்களைத் தட்டிக் கொடுத்து, கட்டி அணைத்து முத்தமிட்டிருக்கின்றீர்களா? கோபித்துக் கொண்டு திட்டியிருக்கிறீர்களா? உங்களுக்கு நன்றி சொல்லி இருக்கிறீர்களா? நீங்கள் உங்களை, உங்களிடமே அறிமுகப்படுத்தி இருக்கிறீர்களா? உங்களை உங்களுக்குத் தெரியுமா? உங்கள் பெயர் தெரியும், ஊர் தெரியும், இனம், மதம் தெரியும், மொழி தெரியும். ஆனால், உங்களைத் தெரியுமா? உண்மையிலேயே தெரியுமா? உண்மையான உங்களை உங்களுக்கு உண்மையிலேயே தெரியுமா? உங்களுக்கே தெரியாத உங்களை உலகம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? உண்மையாக அறிந்து கொண்டு வாய்ப்பினை எவ்வாறு தர முடியும்? நீங்கள், உங்கள் பெயர் அல்ல. உங்கள் நிறமும் அல்ல? சரி அப்பொழுது உண்மையிலேயே யாருங்க நீங்க? தேடிக் கண்டுபிடிப்போமா? உங்களை உங்களுக்கே அறிமுகப்படுத்துவோமா?

என்னை நானே கண்டு கொண்டேன். என் புகைப்படத்தில் அல்ல. என் கண்ணாடியிலும் அல்ல. நான் செய்யும் இந்த வேலையில். ஆம், நீங்கள் செய்யும் வேலையே, நீங்கள் வாழ்வில் அன்றாடம் செயல்படும் விதமே நீங்கள். Your work has your signature all over it. சில வேலைகள் உங்களுக்குக் கைவந்த கலையாக இருக்கும். உதாரணத்திற்கு எழுதுவது, சித்திரம் தீட்டுவது இப்படி ஏதாவது ஒன்றாக இருக்கலாம். இவற்றைப் பலம் (strength) என்பார்கள்.

இன்னும் வேறு சில வேலைகளோ உங்களுக்கு வேப்பங்காய் ஆக, எட்டாக் கனியாக இருக்கும். உதாரணத்திற்கு, பாடுவது, மேடையில் பேசுவது போன்றவையாக இருக்கலாம். இவற்றைத் தான் பலவீனம் (weakness or limitations) என்பார்கள். நான் இவற்றை areas of improvement என அழைப்பேன்.

இவை தவிர இன்னும் சில அபூர்வமான விஷயங்களும் நம் வாழ்வில் நிகழும். பஸ்ஸுக்காக கால் கடுக்க வெகு நேரம் நின்றிருப்போம். பஸ் வரவே வராது. அப்பொழுது நமது நண்பர் ஒருவர் எங்கிருந்தோ வாகனத்துடன் வந்து நீங்கள் எங்கே போக வேண்டும் என சொல்லுங்கள் கொண்டு போய் இறக்கி விடுகிறேன் என்பார். இதைத்தான் வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் (opportunities) என்பார்கள்.

உங்களுக்கு ஒரு நல்ல தொழில் துவங்க யோசனை இருக்கும். ஆனால், அவற்றை உடனே செயலாற்ற பொருளோ அல்லது இடமோ இருக்காது. இதைத் தடை (threat) என்பார்கள்.

மேற்கூறிய நான்கு விஷயங்கள் அதாவது SWOT அல்லது SLOT தான் நீங்கள். உண்மையான நீங்கள். அவற்றை முதலில் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். வாய்ப்புகள் வரும் பொழுதெல்லாம் உங்கள் பலத்தினை, திறமைகளை பயன்படுத்தி சாதனை படையுங்கள். பலவீனங்களை எதிர்கொள்ள சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள். தடைகளை வெல்ல உங்கள் பலத்தினை பயன்படுத்துங்கள். இப்படி சிறப்பாக செயல்படும் போது யார் உங்களை பாராட்டுகிறார்களோ இல்லையோ நீங்கள் உங்களையே தட்டிக் கொடுத்து கட்டி அணைத்து முத்தமிட்டுக் கொள்ளுங்கள். பாராட்டிக் கொள்ளுங்கள். அதே போன்று தடைகள் வந்து நீங்கள் பலவீனங்களோடு தத்தளிக்கும் போது, உங்களைத் திட்டாமல் புன்னகையோடு அப்படியே உங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். இவ்வாறு நீங்கள் செய்கையில் நீங்கள் உங்களை அறிவதோடு மட்டுமல்லாமல் இப்புவியே உங்களுக்கு சலாம் போடும். வெற்றித் திலகமிடும்.

புதுவயல் திரு.S.வீரப்பன் அவர்களின் "பகவத்கீதை வேதாத்திரியம் கூறும் யோக நெறிகள்" என்ற முனைவர் பட்டத்திற்கான ஆய்வின் வாய்மொழித் தேர்வு 07.03.2025 அன்று ஆழியாறு அறிவுத் திருக்கோயிலில் நடைபெற்று முனைவர் பட்டமும் வழங்கப்பட்டது.





# தொழில் தொடங்கலாம் வாங்க 76

சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட் அப் உலகம்

## ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் (AI) ஸ்டார்ட் அப்-கள்

நாம் இந்தப் பகுதியில் எழுதும் பல ஸ்டார்ட் அப் கட்டுரைகளில் ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் (AI) பற்றி அதாவது தமிழில் செயற்கை நுண்ணறிவு என அழைக்கப்படும் கணினி அமைப்புகளைப் பற்றி தொடர்ந்து குறிப்பிட்டு வந்திருக்கிறோம். அது இன்றைய அளவில் பரவலாக பல ஸ்டார்ட் அப் கம்பெனிகள் உபயோகிக்கின்றன. இந்த கணினி அமைப்புகளை கம்பெனிகள் உபயோகிப்பது தவிர தனி நபர்களும் பெரும் அளவில் உபயோகிக்கிறார்கள். அதைப் பற்றி இந்த கட்டுரையில் பார்ப்போம்.

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) என்பது, மனிதனின் அறிவாற்றல் திறன்களைப் பிரதிபலிக்கும் திறனைப் பெற்ற கணினி அமைப்புகளை உருவாக்குவதாகும். இதில் கற்றல், பகுத்தறிவு, சிக்கலைத் தீர்ப்பது (problem solving), மொழியைப் புரிந்துகொள்வது போன்ற திறன்கள் அடங்கும். சிம்பிளாக சொல்லப் போனால் AI என்பது கணினி அமைப்புகளைக் கொண்டு, மனித நுண்ணறிவைப் போல செயல்பட செய்யும் ஒரு தொழில்நுட்பம். AI தொழில்நுட்பம், இன்றைய தினம் பல துறைகளில் புரட்சியை ஏற்படுத்தி, மனித வாழ்க்கையை எளிதாக்குகிறது

### AI யின் உபயோகங்கள் பல, எடுத்துக்காட்டாக:

இயந்திரக் கற்றல் (Machine Learning): நாம் கொடுக்கும் டேட்டாவிலிருந்து கற்றுக்கொள்ளும் திறனைப் பெற்ற அமைப்புகள்.

இயற்கை மொழி செயலாக்கம் (Natural Language Processing): கணினிகள் மனித மொழியைப் புரிந்து கொண்டு, பதிலளிக்கும் திறன்.

பேச்சு அங்கீகாரம் (Speech Recognition): மனித குரலை கணினிகளால் புரிந்து கொள்ளும் திறன். அதாவது நீங்கள் உதாரணமாக தமிழில் பேசினால் அதை அப்படியே கணினியில் கொண்டு வரும் திறன் கொண்டது. www.dictation.io என்ற பிரபலமான இணையதளத்தில் சென்று பேசிப் பாருங்கள். அப்படியே நீங்கள் பேசுவதை டைப் செய்யும்.

பட அங்கீகாரம் (Image Recognition): கணினிகள் படங்களை அடையாளம் காணும் திறன். கூகுள் லென்ஸ் மூலம் எந்த படத்தையும், பொருளையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறதே, அதற்கு இந்த AI தான் பின்புலமாக இருக்கிறது.

சுய-ஓட்டுநர் கார்கள் (Self-Driving Cars): AI மூலம் இயங்கும் கார்கள். உடனடியாக டெஸ்லா கம்பெனியின் டிரைவர் இல்லாத கார்கள் நமக்கு நியாபகத்திற்கு வரும்.

இவ்வளவு செயல்களை நமக்கு எளிமைப்படுத்தும் இந்த செயற்கை நுண்ணறிவின் தந்தையாக கருதப்படுபவர் அமெரிக்காவின் ஜான் மெக்கார்த்தி (John McCarthy) ஆவார்.

### வகை வாரியாக சிறந்த AI கருவிகள்

- AI அசிஸ்டெண்ட்: (Chatbots): ChatGPT, Claude, Gemini, DeepSeek, Grok, Perplexity, CoPilot
- வீடியோ உருவாக்கம் மற்றும் எடிட்டிங்: Synthesia, Runway, Filmora, OpusClip
- பட உருவாக்கம்: GPT-4o, Midjourney
- நோட் மேக்கர் மற்றும் மீட்டிங் அசிஸ்டெண்ட்: Fathom, Nyota
- ஆராய்ச்சி: Deep Research
- எழுத்து: Rytr, Sudowrite
- இலக்கணம் மற்றும் எழுத்து மேம்பாடு: Grammar, Wordtune
- சோஷியல் மீடியா மேனேஜ்மெண்ட்: Vista Social, FeedHive
- கிராஃபிக் வடிவமைப்பு: Canva Magic Studio, Louka
- ஆப் (app) பில்டர்கள் & கோடிங்: Bubble, Bolt, Lovable, Cursor, v0
- Project Management: Asana,ClickUp
- கஸ்டமர் சர்வீஸ்: Tidio AI, Hiver
- ரெக்ரூட்மெண்ட்: Textio, CVViZ
- நாலெட்ஜ் மேனேஜ்மென்ட்: Notion AI Q&A, Guru
- மின்னஞ்சல்: Hubspot Email Writer, SaneBox, Shortwave
- பிரசன்டேஷன்: Gamma, Presentations.ai
- மார்க்கெட்டிங்: AdCrative
- ஆங்கிலம் கற்க / சரிவர எழுத: ludwig.guru

மேலே கொடுத்திருக்கும் AI டூல்ஸை உபயோகித்துப் பாருங்கள். உங்கள் தினசரி வேலைகளை அது எவ்வளவு சுலபமாக்குகிறது என்று பாருங்கள்.

### AI பற்றி நீங்கள் இன்னும் நிறைய தெரிந்து கொள்ள விரும்பினால்.....

இன்னும் AI பற்றி நிறைய தெரிந்து கொள்ள நீங்கள் விரும்பினால் https://www.elementsofai.com என்ற இணையதளத்திற்குச் செல்லுங்கள். வேண்டிய அளவு உங்களுக்கு AI அறிவு விருந்து கிடைக்கும்.

### இந்திய அரசாங்கம் என்ன செய்கிறது?

இந்தியா. ஏஐ – https://indiaai.gov.in/ ஏஐ சம்பந்தமான செய்திகளை தொகுத்தளிக்கும் இந்திய அரசு இணையதளம். இதில் பல அரிய செய்திகள் கிடைக்கின்றது என்பது மிகவும் முக்கியமானதாகும். உலகளவில் இந்தியாவையும் ஏ.ஐ. துறையில் முக்கிய பங்களிக்க இந்த இணையதளம் நிச்சயம் உதவும்.

# இந்த மாத வழிகாட்டி
# காரைக்குடி எல்.என். ராமசாமி (கேலக்ஸி எண்டர்பிரைசஸ், சென்னை)



பல துறைகளிலும் நம்மவர்கள் இப்போது சிறப்பாக பரிணமித்து வருகிறார்கள். ஆனால் லேபிலிங், பார் கோடிங், அதற்கான சாப்ட்வேர், பிரிண்டர்கள் என்று எல்லாவற்றையும் ஒரே இடத்தில் இருந்து தரும் கேலக்சி எண்டர்பிரைசஸ் மேனேஜிங் டைரக்டர் திரு. எல்.என். ராமசாமி அவர்களை இந்த மாத வழிகாட்டி பகுதிக்காக பேட்டி கண்டோம்.

2010-களில் நடுப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஐடி நிபுணர் – அதில் ஒரு சிறந்த மெயின்ஃபிரேம் கட்டிடக் கலைஞர் – தயாரிப்புகளின் பார்கோடு லேபிளிங் தொழிலில் ஏன் இறங்க வேண்டும்? வாருங்கள் கட்டுரைக்குள் செல்வோம் .

**உங்களுடைய இளமைப் பருவம் பற்றி கூறுங்கள்...**

சென்னையில் தான் பிறந்து வளர்ந்தேன். பாலிடெக்னிக் படிப்பிற்கு பிறகு கேம்பஸ் இண்டர்வியூ மூலமாக 1990-ஆம் வருடம் TCSல் சேர்ந்தேன். 1992-ஆம் ஆண்டு, நான் சிட்டி வங்கிக்குச் சென்று அவர்களுடன் இரண்டரை ஆண்டுகள் பணியாற்றினேன். பின்னர் HCL கம்பெனியில் mainframe-ல் அமெரிக்காவில் சுமார் 6 வருடங்கள் பணிபுரிந்தேன்.

**நல்ல வேலையில் main frame-ல் இருந்த உங்களுக்கு தொழில் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எப்படி வந்தது?**

SPIC நிறுவனத்தில் பணிபுரிந்த என் அம்மா, 1987 ஆம் ஆண்டு அவர்களை விட்டு வெளியேறி, திருமுல்லைவாயலில் ஒரு அட்டைப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலையை (விக்டரி எண்டர்பிரைசஸ்) தொடங்கினார். நான் படிக்கும் போதும், நான் தொழிற்சாலைக்குச் சென்று அவருக்கு ஆதரவாக இருந்தேன். அந்த அனுபவமும், மேலும், நகரத்தார்களின் ரத்தத்திலேயே தொழில் செய்ய வேண்டும் என்று இருந்த ஆர்வமும் எனக்கு சொந்தத் தொழில் செய்ய வேண்டும் என்ற ஈர்ப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்

**கேலக்ஸி எண்டர்பிரைசஸ் எப்படி தோன்றியது?**

2015 -16 வாக்கில், எனது சொந்தத் தொழில் தொடங்க ஒரு நல்ல வாய்ப்பை நான் தேடிக்கொண்டிருந்தேன். பில்லிங் வேலைகளை மட்டுமே செய்து கொண்டிருந்த ஒரு நண்பரின் வணிகத்தில் முதலீட்டாளராக ஆனேன்.

இருப்பினும், அவருக்கு அந்த தொழிலில் ஆர்வம் குறைந்ததால் நான் கேலக்ஸி எண்டர்பிரைசஸ் 2016-இல் தொடங்கினேன். ஆரம்பத்தில், நாங்கள் ஸ்டிக்கர்களை வாங்கித் தான் விற்றோம்.

விரைவில், எங்களுக்குச் சொந்தமான ஒரு அச்சிடும் இயந்திரம் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன். நான் ஒரு எக்ஸ்போவில் கலந்து கொண்டு முதல் அச்சிடும் இயந்திரத்தை வாங்கினேன். இதனால் வாடிக்கையாளர்கள் அதிகமாக ஆரம்பித்தார்கள். நாங்கள் அவர்களுக்கு பிராண்டட் அச்சிடும் இயந்திரங்களையும், நுகர்பொருட்களையும் வழங்கத் தொடங்கினோம். பின்னர், ஒரு சில வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப, அவர்களின் குறிப்பிட்ட தேவைக்கு ஏற்ப மென்பொருள் தீர்வுகளை உருவாக்கத் தொடங்கினோம்.

இன்று, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் சுமார் 10,000 சதுர அடி பரப்பளவு கொண்ட உற்பத்தி வசதியுடன், டிசைன் லாப் ஆகியவைகளுடன் பார்கோடிங் சம்பந்தபட்ட எல்லா தீர்வுகளுக்கும் one stop இடமாக எங்கள் கம்பெனி இருக்கிறது.

இன்றைய தினம் பார் கோடிங் பெரும்பாலும் எல்லா துறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. எங்களிடம் இருக்கும் வாடிக்கையாளர்களில் ஆட்டோமொபைல் / ஜெனரல் இன்ஜினியரிங் 50 சதவீதம், ரீடெய்ல் 30 சதவீதம், மற்றவர்கள் 20 சதவீதம்.

இன்றைய தினம் பார்கோடிங் வாடிக்கையாளர்களுக்கு பில்லிங் சாப்ட்வேர், தெர்மல் பில்லிங்/பார்கோடு பிரிண்டர், RFID தீர்வுகள், ஸ்கேனர்கள், கஸ்டமர்கள் தேவைக்கேற்ப சாப்ட்வேர் அதாவது அவர்களுடைய SAP சிஸ்டத்துடன் இணைப்பது போன்ற அனைத்தையும் வழங்கும் ஓர் இடமாக எங்கள் கம்பெனி வளர்ந்திருக்கிறது.

**உங்களின் வாடிக்கையாளர்கள் யார் யார்?**

ITC ஹோட்டல், NIFCO, சூப்பர் ஆட்டோ ஃபோர்ஜ், யூகால் லிமிடெட், பார்க்கர் ஹன்னிஃபென், டைம்லர், எக்ஸ்போ ஃபிரைட் லிமிடெட், KPN மற்றும் ஸ்ரீ குமரன் சில்க்ஸ், வசந்த பவன் ஆகியோர் எங்களின் முன்னணி வாடிக்கையாளர்களாக இருக்கிறார்கள்.

**உங்கள் குடும்பம் பற்றி...**

அப்பா திரு. லெஷ்மி நாராயணன் செட்டியார் அவர்கள், அம்மா திருமதி தெய்வானை ஆச்சி. மாமனார்

# கம்ப சித்திரம் விழா




கடந்த 05-04-2025 அன்று ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற கம்பரையும் இராமனையும் கொண்டாடும் விழாவில் பிரபல கம்பராமாயண பேச்சாளர் மதுரை பாத்திமா கல்லூரி மேனாள் துணை முதல்வர் பேராசிரியை விசாலாட்சி சுப்பிரமணியன் அவர்களைப் பாராட்டி தமிழக ஆளுநர் மேதகு ஆர்.என். ரவி அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார். பேராசிரியைக்கு நமது செட்டிநாடு வாசகர்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். விசாலாட்சி சுப்பிரமணியன் நமது செட்டிநாடு ஆசிரியர் குழு உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.



14.03.2025, வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் போரூர் சேது ஷேத்திரத்தில் சென்னை வாழ் புதுவயல் நகரத்தார் சார்பாக விளக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது.

திரு. ஆவிச்சி செட்டியார் அவர்கள், மாமியார் திருமதி கண்ணம்மை ஆச்சி அவர்கள்.

மனைவி திருமதி அபிராமி. மகன் அரவிந்த், மூன்றாவது வருடம் மெக்கானிகல் இன்சினியரிங் படிக்கிறார். மகள் லெஷ்மி, M.D. Paediatrics மேற்படிப்பு இரண்டாம் வருடம் படிக்கிறார். மனைவி சிறப்பாக குழந்தைகளை பார்த்து கொள்வதால், என்னால் பிசினஸில் நன்றாக கவனம் செலுத்த முடிந்தது என்பதை கட்டாயம் நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**தொழில் செய்ய விரும்பும் இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

- உங்கள் முதலீட்டை முறையாகக் கையாளுங்கள்.
- வணிகத்தின் முதல் ஐந்து ஆண்டுகளில் கடினமாக உழைக்கவும். இது உங்கள் கம்பெனியை நிலை நிறுத்த மிகவும் முக்கியம்.
- தொடக்கத்தில் சில நஷ்டங்களை சந்திக்கும்போது நம்பிக்கை இழக்காதீர்கள். செயல்பாட்டில் கவனம் செலுத்துங்கள்.
- வணிகம் சீராக இயங்க மூன்று / ஐந்து ஆண்டுகள் ஆகலாம். Moving ball மட்டுமே வேகத்தை அதிகரிக்கும்.
- எல்லாவற்றையும் நீங்களே செய்ய முடியும் என்று கருத வேண்டாம். உங்களுடன் உழைக்க ஒரு வலுவான குழுவை உருவாக்குங்கள்.
- எப்போதும் கஸ்டமர் பக்கம் இருந்து அவர்களுடைய ப்ராப்ளத்தை புரிந்து கொள்ளுங்கள். அதற்கான சொலுஷன் எளிதாக உங்களுக்கு கிடைக்கும்.

**இவர்களின் வணிக தொடர்புக்கு:** போன் – 044 48597930, மொபைல் 99401 56831, ஈமெயில் galaxyinamb@gmail.co.

**மதுரையில் ஏப்ரல் 27-ஆம் தேதி ஏற்றுமதி, ஸ்டார்ட் – அப் கருத்தரங்கம்:** சேதுராமன் சாத்தப்பன் நடத்துகிறார். 400 ஸ்டார்ட் அப் தொழில்கள் அடங்கிய ரூபாய் 1200 மதிப்புள்ள 4 புத்தகங்கள், ஏற்றுமதி சம்பந்தப்பட்ட ரூபாய் 1500 மதிப்புள்ள 4 புத்தகங்கள் வழங்கப்படும். இது தவிர ரூபாய் 500 மதிப்புள்ள ஈ-புத்தகங்கள் வழங்கப்படும்.

முன்பதிவு விபரங்களுக்கு 98197 50966, 99940 29969 என்ற எண்களை அழைக்கவும்.

ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com,
மொபைல் 9820451259,
இணையதளம்
www.startupandbusinessnews.com


மகன்லால்
வைரம் & தங்கம்
We Offer Diamonds
Grade by
GIA
Authorised
Forevermark Jeweller
FOREVERMARK



Maganlal
a precious legacy
இனிய
சித்திரைத் திருநாள்
நல்வாழ்த்துக்கள்
நேசங்களோடு வளர்ந்த பந்தம்...
காலங்களோடு கலந்த பாரம்பரியம்...!
MAGANLAL MEHTA & CO
மகன்லால் மேத்தா & கோ
Diamond & Gold Jewellery Private Limited
#51, AVM Building, Kallukatti North, Karaikudi - 630 001
# 27/43, North Usman Road, T.Nagar, Chennai - 600 017
we@maganlalmehta.com
www.maganlaldiamonds.com
88 YEARS
CUSTOMER CARE
+91 888 111 5555
+91 888 111 4555


# இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு – 18



லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

## SP. மீனாட்சி சுந்தரம்

இஸ்ரோ நகரத்தார்களைப் பற்றி நகரத்தார் சமூகத்திற்கு அறிமுகம் செய்யும் வகையில் நான் எழுதி வரும் தொடர் கட்டுரைகளில் இந்த இதழில் இஸ்ரோவில் அரும்பணியாற்றிய ஒரு மூத்த விஞ் ஞானியைக்குறித்து எழுதுவதில் பெருமிதம் கொள்கிறேன். திரு. SP.M.சுந்தரம் என்ற மீனாட்சி சுந்தரம் அவர்கள் தேவகோட்டை தந்த மற்றொரு நல் மாணிக்கம்.



SP. மீனாட்சி சுந்தரம்
16.09.1931 - 28.06.2016

திரு. சுந்தரம் நம்மிடையே இல்லை என்றாலும் விண்வெளித் துறையில் மிக சிறப்பான தொண்டை நல்கிய அவரது பங்களிப்பு போற்றுதலுக்குறியது.


திரு. சுந்தரம் இந்திய விமானப் படையில் தேசத்திற்காக தன் பங்கை ஆற்றிய பிறகு இஸ்ரோவிற்கு வந்தவர்.

இவர் இந்திய விமானப் படையில் 1953 முதல் 1968 வரை Wireless Operator Mechanic I and II ஆக சேவை செய்யும் வாய்ப்பைப் பெற்றவர்.

இஸ்ரோவில் 1970ஆம் வருடம் மின்னணுவியல் Avionics பிரிவில் சேர்ந்திருக்கிறார்.

இங்கு அவர் ஆற்றிய பணிகளை விவரிக்கும் முன் அதன் தன்மையையும் முக்கியத்துவத்தையும் குறித்து வாசகர்கள் அறிந்து கொள்ள ஏதுவாக சில குறிப்புகள்.

Avionics பிரிவில் மிக முக்கியமான துறை Telemetry and Telecommand என்று அழைக்கப்படும் விண்ஊர்தி தொலைத் தொடர்பு சம்மந்தப்பட்ட துறையாகும்.



SP. மீனாட்சி சுந்தரம்
தேனம்மை ஆச்சி

ராக்கெட் விண்ணில் செல்லும்போது தொடர்ச்சியாக சமிக்ஞைகளை (Signals) அனுப்பிக்கொண்டே இருக்கும். இவை ராக்கெட்டுடைய திசை (Direction), வேகம் (Velocity), ஆரோக்யம் (Health), நடக்க வேண்டிய நிகழ்வுகள் சரியாக நடப்பதைப்பற்றிய விபரம் (Proper Command Execution), வெப்பநிலை (Thermal Data), அழுத்தம் (Pressure), போகும் பாதை (Trajectory), அதிர்வுகள் (Vibration and Shock), தவறுகள் எதுவும் நேர்ந்தால் அது குறித்து விபரம் (Failure Monitoring) ஆகியவை குறித்த மிக முக்கியமான தரவுகளாகும்.

இவை நிகழ்வுகள் நடக்கும் போதே கிடைக்கும் தரவுகளாகும் (Real Time Monitoring). ராக்கெட் குறித்த பாதையில் சென்று, சரியாக வேலை செய்வதை, இந்தத் தரவுகள் மூலம் தான் நாம் அறிந்து கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்ட தரவுகள் அனைத்தும் ராக்கெட்டில் பொருத்தப்பட்டுள்ள தரவு மானிகள் (Sensors) மூலம் அறியப்பட்டு, தரவு அனுப்பும் கருவிகள் (Telemetry Transmitters) மூலம் அனுப்பப்பட்டு, Radio Link மூலம் தரைக் கட்டுப்பாட்டு மையங்களுக்கு (Ground Control and Monitoring Stations) சென்று சேருகின்றன.

இந்தத் தரவுகள் மூலம் ராக்கெட் சரியாக செல்கின்றதா என்பதை அறிந்து, அது சுமந்து செல்லும் உபகிரஹம் சரியான நீள்வட்டப்பாதையில் (Intented Orbit) செலுத்தப்படுவதை நாம் அறிந்து ஒரு நீண்ட பெருமூச்சு விட முடியும்!



சரஸ்வதி – பாண்டியன்

அப்படி ராக்கெட் சரியாக வேலை செய்யாவிடில் இந்த தரவுகளைக் கொண்டுதான் அதை நிறுத்துவது (Termination), அல்லது அழிப்பது (Destruction) ஆகிய முயற்சிகளை மேற்கொண்டு, எந்தவித தீங்கும் நேராமல் Range Safety Agency மேற்கொள்வது சாத்தியமாகிறது.



சொக்கலிங்கம், சரஸ்வதி, ஜெயகிருஷ்ண பாலாஜி, மினு கிருத்திகா, ரஞ்சிதா, Dr. சேதுராமன்

## குடும்பம்

| | |
|---|---|
| பெயர் | SP.M.சுந்தரம் என்ற மீனாட்சி சுந்தரம் |
| பிறந்த தேதி | 16/09/1931 |
| ஊர் | தேவகோட்டை |
| வீட்டுப்பெயர் | சிட்டாள் இல்லம் (சொ. சுப. வீடு) |
| கோயில் | இலுப்பக்குடி |
| வகை | ஐந்து வீட்டு பங்காளிகளில் க.முரு. வகை |
| துணைவியார் | கங்காள் (எ) தேனம்மை ஆச்சி |
| தகப்பனார் | சொ. சுப்பிரமணியன் செட்டியார் |
| தாயார் | சிட்டாள் ஆச்சி |
| மூத்தமகன் | S. பாண்டியன் என்ற சுப்பிரமணியன் |
| மருமகள் | ரங்கநாயகி ஆச்சி, House Wife |
| இரண்டாவது மகன் | – S. சேகர் என்ற கருப்பன்செட்டி, Retired from OTIS Elevators, Trivandrum |
| மருமகள் | S. லெட்சுமி ஆச்சி, House Wife |
| பேத்தி | S. பிரியா, B. Tech., E.C.E., Lives in Canada. |
| பேத்தி கணவர் | – S. சௌரி நாராயணன், M.B.A., U.K., Lives in Canada |
| கொள்ளு பேத்தி | – மேக்னா, Canada. |
| பேரன் | S. பிரவீண் என்ற சுப்பிரமணியன், B. Tech., E.C.E., |
| மூன்றாவது மகன் | – S. சொக்கலிங்கம், Gulf Returned. |
| மருமகள் | சரஸ்வதி ஆச்சி, House Wife |
| பேரன் | ஜெயகிருஷ்ண பாலாஜி, B.D.S., Dentist in Abudhabi |
| பேரன் மனைவி | மினுகிருத்திகா, House Wife in Abudhabi |
| பேத்தி | ரஞ்சிதா, B. Tech., E.C.E., House Wife. |
| பேத்தி கணவர் | Dr. M. சேதுராமன், M.B.B.S., M.D., (Pulmonology Medicine), Medical Officer, CGHS, Avadi, Chennai |
| மகள் | S. சாந்தி, House Wife |
| மருமகன் | PC. சிவசுப்ரமணியன், Egypt |
| பேத்தி | S. Swetha Sri, B.D.S, in Germany |
| பேத்தி கணவர் | – சொக்கலிங்கம், M.S., in Germany |
| கொள்ளு பேத்தி | – உமையாள் சொக்கலிங்கம் என்ற அபிராமி, 6 Years |
| பேரன் | ஷண்முகனாதன், Student in Aeronautical Engineering. |



சாந்தி, சிவசுப்ரமணியன், ஷண்முகனாதன்



பிரவீண், லெட்சுமி, சேகர்



சௌரி நாராயணன், பிரியா, மேக்னா

இந்தத் தரவுகள் சேமிப்பு சாதனங்களில் (Storage Devices) சேமிக்கப்பட்டு, விண்வெளிப் பயணம் முடிந்த பிறகு வெவ்வேறு System Designers-களுக்கு அனுப்பப்பட்டு ராக்கெட் வேலை செய்த விதம் குறித்து பரிசோதனை (Post Flight Analysis)-க்கு உட்படுத்த ஏதுவாகிறது.

ராக்கெட் சரியாக வேலை செய்யாத பட்சத்தில், அதன் மூல காரணத்தை அறிவதற்கும், அவைகளை அடுத்த முயற்சியில் தவிர்ப்பதற்கும் (Failure Analysis and Corrective Measures) இஸ்ரோவிற்கு சாத்தியமாகிறது.



சுவேதா ஸ்ரீ என்ற தர்மாம்பாள் சொக்கலிங்கம் உமையாள் என்ற அபிராமி

நான் மேலே கொடுத்துள்ள விரிவான விளக்கத்திற்குப் பிறகு விண்வெளிப் பயணத்தில் Telemetry Systems-ன் முக்கியத்துவம் பற்றி தெளிவாக அறிந்து கொண்டிருப்பீர்களென எண்ணுகிறேன்.

SP. M. சுந்தரம் அவர்கள் இந்தியாவில் இந்த தொழில் நுட்பம் இல்லாத காலத்திலேயே மேலே குறிப்பிட்ட System -த்தின் மூளையாக கருதப்படுகிற Telemetry Transmitters தயாரிப்பதிலும் அதை SLV, ASLV, PSLV ராக்கெட்களில் உபயோகித்து அவைகளை விண்ணில் செலுத்தி வெற்றிகரமாக சோதனை செய்யும் முயற்சிகளிலும் தன் அநுபவத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.

திரு. சுந்தரம் தன் கடமைகளை சரிவர நிறைவேற்றிய திருப்தியோடு 30.09.1991 அன்று இஸ்ரோ பணியிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிறார்.

திரு. சுந்தரம் நம்மை விட்டு பிரிந்த நாள் 28.06.2016. அவருடைய துணைவியார் கங்காள் (எ) தேனம்மை ஆச்சி அவர்களும் மிக இனிமையாக பழகும் தன்மை கொண்டவர்கள். அவர்களும் இன்று நம்மிடையே இல்லை.

திரு. சுந்தரம் தம்பதியினருக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். அவர்களும் தேவகோட்டையிலும், திருவனந்தபுரத்திலும் வசித்து வருகின்றனர். ♦

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 45





# நகரத்தார்களின் மீட்சி 1500 முதல் 1600 வரை

மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

பல நூற்றாண்டுகள் கடலில் காற்று வீசும் திசையெல்லாம் சென்று வந்தவர்கள், பிறரின் அனுமதிக்காகக் காத்திருந்து கலம் செலுத்தும் நிலைக்கு ஆளானார்கள். இந்த நிலை ஏன் நேர்ந்தது?

இந்தக் கேள்வியுடன் சென்ற தொடர் முடிந்திருந்தது.

இந்தக் கேள்விக்கான பதில் நகரத்தார்கள் உள்ளிட்ட அனைத்து வணிகக் குடியினருக்கும் பொருந்தும். நாம் ஏன் சறுக்கினோம்? என்ற கேள்வியை நம்மை நோக்கிக் கேட்டுக் கொள்வது நல்லது. கல்வி தொழில் நுட்பம் போன்ற துறைகளில் நாம் கவனம் செலுத்தவில்லை. நம்மிடம் இந்தத் துறைகளே இல்லை. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டவை அத்துறைகள். அறிவியல் ஆய்வுகள் மூலம் போர்த்துகீசியர்கள் உள்ளிட்ட ஐரோப்பியர்கள் வலிமையான பெரிய கப்பல்களை உருவாக்கினர். திசையறியும் நவீன கருவிகள் உருவாக்கப்பட்டன. ஆற்றல் மிக்க வெடிப் பொருட்கள், பீரங்கிகள் கப்பல்கள் மீது பொருத்தப்பட்டன.

எல்லாவற்றையும் விட போர் மீது மிகுந்த நாட்டம் உடையவர்களாக இருந்தனர். தங்களின் வணிகத்திற்கு. ஆதிக்கத்திற்கு இடையூறாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அழிப்பதற்குத் தயங்கவில்லை. அறம் சாராத போர் முறையாக இருந்தாலும், அம்முறையை எதிரிகள் மீது பயன்படுத்தினர். அதே நேரத்தில் இந்திய வணிகர்கள் அறம் சார்ந்த வணிகத்தை மட்டுமே மேற்கொண்டனர். போர் செய்வதை அவர்கள் விரும்பவில்லை. தற்காப்புக்காகப் படைகள் வைத்திருந்தனரே தவிர போர் செய்ய அல்ல. அறவழியில் வணிகம் செய்தோர், ஐரோப்பிய வணிகர்களின் வெடிப்பொருட்களை எதிர்கொள்ள இயலவில்லை. (Essays in Maritime Studies - Edited by B.Arunachalam, Maritime History Society, Mumbai 1998 2nd imprint - 2016 Page IX An Introduction).

இந்தியர்களின் கடற்போர் முறைகள் ஐரோப்பியர்களுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் தொடக்க நிலையில் இருந்தன எனலாம். சிறிய கப்பல்கள், போர்க் கருவிகள் ஏதும் பொருத்தப்படாத கப்பல்கள் - போர் முறைகளுக்கு ஏற்றவையாக இல்லை. மேலும், நம் நாட்டுக் கப்பல்கள் ஆழ்கடலில் போர் செய்யும் திறனற்றவையாக இருந்தன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலம் என நாம் வரையறை செய்கின்ற காலத்தில் ஒப்பற்ற கடலோடிகளாகத் தமிழ்நாட்டினர் மட்டுமல்ல இந்தியாவில் பல மொழியினச் சமூகத்தினர் இருந்தனர். அவர்களின் தங்கு தடையின்றி கடலோடும் பகுதிகளாக இருந்த வங்கக் கடலும், இந்தியப் பெருங்கடலும், அரபிக் கடலும் 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது.

கடலில் வல்லாண்மை செய்ய இயலாத சூழ்நிலையில் வணிகமும் ஐரோப்பியர்களின் பொறுப்பிற்குச் சென்று விட்டது. (Essays in Maritime Studies: Portugeese Seak power in the Indian Ocean 1498 to 1662 - Rear Admiral K.Sridharan AVSM, Indian Navy (Retd) Page - 3).

கடலில் வலிமை என்பது போர்க் கப்பல்களால் மட்டும் உறுதி செய்யப்படுகின்றன. வணிகக் கப்பல்களும் கடல் வணிகர்களும் அச்சமின்றி கடலில் செலுத்தினால் மட்டுமே ஒரு நாட்டின் செல்வச் செழிப்பு நிறைவாக இருக்கும். ஒரு நாடு வலிமையான கடற்படை, செழுமையான கடல் வணிகர்களைப் பெற்றிருக்க வேண்டும். அந்நாட்டின் அரசியல் சூழ்நிலைகள் குறிப்பாக நிலையான வலிமையான அரசு இருந்தால் மட்டுமே அந்நாடு வலிமையானதாக இருக்க இயலும்.

ஆனால், போர்த்துக்கீசியர்கள் கேரளக் கரையை 1498-ல் அடைந்த போது தென்னிந்தியாவின் நிலை, வலிமையானதாக இல்லை. நிலையான அரசுகள் இல்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் சோழர்களின் ஆட்சி வரலாற்றின் பக்கங்களில் இருந்து மறையும் காலத்தை அடைந்து விட்டது. சோழர்களின் கடல் ஆதிக்கமும் குறைந்து விட்டது. சோழர்களுக்குப் பின், இந்தியாவின் கடல் வலிமை மீண்டும் வலுப்பெறத் தொடங்கியது. இந்திய விடுதலைக்குப் பின்னரே. அதாவது 1947-ஆம் ஆண்டுக்குப் பின்புதான்.

கடற்போரில் சோழர்கள் வெற்றிகளை மட்டுமே கண்டனர். சோழர்களுக்குப் பின் 800 ஆண்டு காலம் வெற்றிக்கான நூற்றாண்டுகளாக இல்லை. இந்தியத் துணைக் கண்டம் பல சிற்றரசுகளாகப் பிரிந்து கிடந்தது. வடக்கே இருந்து வந்த இசுலாமியப் படையெடுப்புகளால் தென்னிந்தியா வீழ்ச்சியுற்று விட்டது. பொது எதிரியை எதிர்க்கும் சூழ்நிலையில் நாடு இருக்கவில்லை.

கேரளாவின் கடற்பகுதி சோழர்களின் ஆளுகையில் இருந்தது. சோழர்களின் வீழ்ச்சிக்குப்பின் அரபுக்களின் ஆளுகையின் கீழ் வந்து விட்டது. அரபுக்களுக்கும் கேரளாவை ஆண்ட அரசுகளுக்கும் இடையே நிலவிய

உறவு இணக்கமாகவே இருந்துள்ளது. 1498-ல் போர்த்துக்கீசியர்களின் வருகைக்குப் பின் நிலைமை மாறியது. (The Portugeese - Kunjali Conflicts of the Sixteenth Century - Some Naval Lessons) எனவே, வணிகத்திற்காக இங்கே வந்த போர்த்துக்கிசீயர்கள், தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தவும் முயன்றனர். வலிமையான போர்க்கருவிகள் வெடிமருந்துகளுடன் வந்த போர்த்துக்கீசியர்களை இங்கே இருந்த அரசுகளால் எதிர்த்துப் போரிட இயலவில்லை. வலுவிழந்த சோழர்கள், நிலை பெற்ற ஐரோப்பியர்கள், பற்றிக் கொள்ள எதுவுமே இல்லாத சூழ்நிலையில் இந்தியச் சமூகங்கள். நகரத்தார்களின் நிலை என்னவாக இருந்தது? அலை கடந்த நகரத்தார்கள், தங்கள் வாழ்க்கை நிலை பெற போராடவே செய்தனர். வென்றனர். நகரத்தார்கள் தங்களது வணிகத்தைத் திறம்படவே நடத்தி இருக்கின்றனர்.

### உலகம் மாறியது, நகரத்தார்கள் என்ன செய்தார்கள்?

போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் இந்தியாவில் கால் பதித்தவுடன், இந்தியா மாறத் தொடங்கி விட்டது. மாறிய காலங்களுக்கு ஏற்ப சமூக அமைப்புகளும் மாற்றங்களுக்கு ஆளாகின. மக்கள் கூட்டத்தின் மாறுதல் தானே, ஒரு நாட்டின் மாறுதல்! நகரத்தார்களும் மாறினர். சமூகப் பொருள் நிலைகள் மாறின, மாறாதது - என்றும் அவர்கள் கடைப்பிடித்த வாழ்வின் உயரிய விழுமியங்கள். அறக்கோட்பாடுகளை தாண்டிச் செல்லவில்லை.

வாழும் முறை, அறப்பணி, சைவப்பணி, தமிழ்ப் பணி, சமூகக் கடமை, இறைப்பணி, தொழில்முறை என அவர்கள் வாழ்க்கையின் முகங்கள் பல. வாழ்க்கையின் கட்டமைப்புகளின் ஒவ்வொரு நிலையையும் மிக நேர்த்தியாக அமைத்துக் கொண்டனர் நகரத்தார்கள். நேர்த்தியாக அமைக்கப்பட்ட வாழ்வு- நிறைவான வாழ்வு - இதுவே நகரத்தார்களின் அடையாளம்.

### 1500 முதல் 1600 வரை செட்டிநாட்டுச் சூழ்நிலை :

1500 முதல் 1600 வரையிலான காலத்தில் தமிழகம் பெரிய மாற்றங்களைச் சந்தித்த வேளையில் செட்டிநாட்டுப் பகுதியிலும் மற்ற பகுதியிலும் நகரத்தார்களின் வாழ்க்கை எவ்வாறு இருந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள நமக்குப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. இராங்கியம், விரையாச்சிலை, காளையார் கோயில், கோனாபட்டு, சுந்தர சோழபுரம் ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் மூலம் சில செய்திகளைத் தான் தெரிந்து கொள்ள முடிகிறது.

வடதமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளில் போர்த்துகீசியர்கள் நிலை கொள்ளத் தொடங்கியிருந்தனர். பழவேற்காடு போன்ற துறைமுகங்களில் நகரத்தார்கள் பற்றிய குறிப்புகள் கிடைத்தாலும், செட்டிநாட்டுப் பகுதியில் கடல் வணிகம் பற்றிய அடையாளங்களைக் காண இயலவில்லை. 1500-க்குப் பின்னரான 7 கல்வெட்டுகள் மட்டுமே இங்கு குறிப்பிடப்படுகின்றன. 13, 14, 15-ஆம் நூற்றாண்டுகளின் தொடர்ச்சியாகவே, அக்கல்வெட்டுகள் உள்ளன.

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்
**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**
எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும், எல்லா வகை பொடி வகைகளும், வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.
தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590
ADVT

பெரும் மாற்றங்களை அனைத்து நகரத்தார் சமூகங்களும் சந்தித்து இருக்கின்றன என்பதை உணர முடிகிறது.

1508-ல் அருவியூர் நகரத்தார் கல்வெட்டும் 1697-ல் சுந்தர சோழபுர நகரத்தார் கல்வெட்டும் கிடைத்திருக்கின்றன. இந்த ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் தொடர்பான கல்வெட்டுகள் கிடைக்கவில்லை.

### விரையாச்சிலையும், அருவியூர் நகரத்தார்களும்:

விரையாச்சிலை கிராமத்தில் கிடைத்த அருவியூர் நகரத்தார்கள் செய்த அறப்பணி தொடர்பான கல்வெட்டு. கல்வாசல் நாட்டில் அரசநாராயணப் பெருந்தெருவில் வசிக்கும் சுந்தர பாண்டியபுரத்தைச் சேர்ந்த அழகிய திருச்சிற்றம்பலமுடையார் என்பவர் செய்த அறப்பணி. விரையாச்சிலையில் அஞ்ஞூற்றுவன் (ஐநூற்றுவன்) ஊரணி கட்டிக் கொடுத்ததாகப் பதிவு உள்ளது. கொடுத்தவர்கள் அருவியூரைச் சேர்ந்த நாலு நகரத்தார் ஆவர். அருவியூர் நகரத்தார்களில் வடக்கு வளவு, தெற்கு வளவு என இரு பிரிவுகள் மட்டுமே தற்பொழுது உள்ளன. நாலு நகரத்தார் என்ற குறிப்பு ஆய்வுக்கு உரியதாக உள்ளது. அஞ்ஞூற்றுவன் ஊருணி என்ற பெயரைச் சூட்டியுள்ளதால் பொ.பி. 1500-ல் நகரத்தார்கள் இடையே அதாவது நாட்டுக்கோட்டை, அருவியூர் என ஏற்பட்ட பிரிவுகள் வலுவானதாக இருக்கவில்லை என்பதும் புலனாகிறது. அரச நாராயணப் பெருந்தெரு சுந்தரபாண்டியபுரம் என இங்கே குறிக்கப்படும் இடம் பில்லமங்கலம் ஆகும்.

### இராங்கியத்திலும் காளையாற் காலப் பெருந்தெரு:

“கல்வாசல்நாட்டு இளையாத்தக்குடியான குலசேகரபுரத்து காளையகாலன் பெருந்தெருவில்” என்ற குறிப்பைக் கொண்ட கல்வெட்டு (ஆண்டு 1501 - பு.ச.க. எண். 835, கி.பி.1530 - பு.ச.க. 854 இராங்கியம் பூமீசுவரர் கோயில்) இராசசிங்கமங்கலம் என்று இராங்கியம் என இக்கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. குறைந்தது 500 ஆண்டு கால பழமையான ஊராக இராங்கியம் உள்ளது. 500 ஆண்டுகளுக்கும் மேலாக இராங்கியத்தில் நகரத்தார்கள் வாழ்ந்து வருவது பெருமைக்குரியதே.

இராங்கியம் பூமியீசுவரர் கோயிலில் உள்ள குறிப்பின்படி ‘கல்வாசல் நாட்டு இளையாத்தங்குடியான குலசேகரபுரத்து

காளையார் காலப் பெருந் தெருவில் திருவேட்பூருடையான் இன்பவனப் பெருமாள்' என்பவர் இக்கோயிலுக்கு நன்கொடைகள் அளித்திருக்கிறார் எனத் தெரிய வருகிறது. இக்கல்வெட்டின் மூலம் இளையத்தாக்குடியில் இரணியூர் அல்லது பிள்ளையார்பட்டி நகரத்தார்கள் கி.பி.1530-ல் வாழ்ந்தார்கள் எனத் தெரிகிறது. மலையடிப்பட்டிக் (செவலூர்) கல்வெட்டிலும் காளையார் காலப் பெருந்தெரு என்ற குறிப்பின் மூலம் நகரத்தார்கள் வாழ்விடத்தை அடையாளம் காண்கிறோம்.

### இரணியூர் அல்லது பிள்ளையார்பட்டி கோயில் நகரத்தார்கள் செய்த பெரும்பணி - 1511-ல்

இசுலாமிய ஆட்சி 1378-ம் முடிவுக்கு வந்தது. நாயக்கர்களின் ஆட்சி அமைகிறது. அலங்கோலங்களும், அழிவுகளும் முடிவுக்கு வந்தன. மக்கள் இயல்பான வாழ்க்கையை வாழத் தொடங்கினர். செட்டிநாட்டுப் பகுதிகளும் மலர்ச்சியைக் காணத் தொடங்கின. நகரத்தார்களும் தங்களின் இயல்பான அறப்பணிகளைத் தொடங்கினர் என்பதற்குச் சான்றாக காளையார் கோயில் கல்வெட்டுகள் உள்ளன. காளையார் கோயில் ஊரில் உள்ள காளீசுவரர் கோயில் என்ற சோமனாதர் கோயிலில் உள்ள கல்வெட்டு, 1511-ம் ஆண்டைச் சேர்ந்தது. மறுமலர்ச்சிக் காலத்தை எடுத்துக்காட்டுகிறது. (SII vol. 8, year 1937, pg 182, கல். எண். 587/1902)

'இன்னாயனார் திருக்கோயில் திருமடைப்பள்ளி துலுக்க வாணத்திலே சரிந்து கிடக்கையிலே' என்பது கல்வெட்டு வரி. இந்த வரி இசுலாமியர் ஆட்சியில் நடைபெற்ற கலகத்தில் இக்கோயிலின் மடைப்பள்ளி இடிந்துவிட்ட செய்தியைப் பதிவு செய்கிறது. இசுலாமியர் ஆட்சி முடிவுக்கு வந்த 1378-க்குப் பின் ஏறத்தாழ 133 ஆண்டுகள் கழித்துத் தான் இக்கோயிலைச் சீர் செய்ய முடிந்திருக்கிறது. அதாவது கி.பி. 1511-ல் இடிந்து கிடந்த கோயில் மடைப்பள்ளியை எடுத்துக் கட்டினர். இந்த மடைப்பள்ளியை இன்றும் காணலாம். 500 ஆண்டுகளுக்கு முன் அப்பணியைச் செய்தவர்கள் நகரத்தார்கள், திருவேட்பூருடையார் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். திருவேட்பூருடையார் என்று குறிக்கப்படும் பெயரானது இரணியூர் மற்றும் பிள்ளையார்பட்டி கோயில் நகரத்தார்களுக்குப் பொருந்தும். எனவே, இரு கோயில்களில் ஒன்றைச் சேர்ந்தவர்களே இத்திருப்பணியைச் செய்திருக்கின்றனர். காலத்தை வென்ற பெரும் பெருமைக்கு உரிய பெருமக்களாவர். இக்கல்வெட்டின் மூலம் செட்டிநாட்டுப் பகுதியில் மகிழ்ச்சியான சூழ்நிலை 1511-ல் நிலவியதும் உறுதியாகிறது.

(வரலாறு வளரும்)


## சுவீகாரத்திற்கு பையன் தேவை

கோவில் : இளையாத்தங்குடி
கழனிவாசல்
வயது : 30 வயதிற்குள்
படிப்பு : டிகிரி
தொடர்பு எண் : 9444796751
9176559242


## தனமும் நலமும் தரும் தன்வந்திரி பெருமாள் திருக்கோயில் உருவாக்கம்



புதுக்கோட்டை மாவட்டம், கூழிபிறையில் தனிச் சன்னதியாக தனமும் நலமும் தரும் தன்வந்திரி பெருமாள் திருக்கோயில் முழுக்க கருங்கற்களால் கருவறை மண்டபமும், அர்த்தமண்டபமும் உருவானவை. கல் முகப்பு நிலையில் கஜலட்சுமி தாயார் கருணை வழங்க, விமானப்பணி மூன்று நிலை ஒரு கலசம் என வேகம் எடுத்துள்ளது. முன்புற மகா மண்டபம் அங்கே தேக்கு மரத்தால் கொடிமரம் நெடுங் கதவு அதற்கான பணிகளும் விரைந்து நடக்கின்றன. கருடாழ்வார், ஆஞ்சநேய பகவான் சன்னதிகளும் வர உள்ளன. மடப்பள்ளி, நூலகம், மூலிகைத் தோட்டம், ஓய்வறைகள் என பணிகள் நடைபெற உள்ளன.

விரும்புபவர்கள் கைங்கரியத்தில் பங்கு பெற்று தன்வந்திரி பெருமாள் கருணை பெற.

தன்வந்திரி பெருமாள் டிரஸ்ட், இந்தியன் பாங்க், கூழிபிறை - 622402

கணக்கு எண் : 7492523213, IFSC IDIB000K170

தொடர்பு கொள்ள: 9842490447, 9385886315,
9343936606, 9944436815.

ரூ. 25,000 மற்றும் அதற்கு மேலும் திருப்பணிக்கு கொடுக்கும் கொடையாளர்கள் பெயர் கல்வெட்டில் இடம்பெறும். பரம்பரையாய் பெயர் சொல்லும். கர்நாடக மாநிலத்தில் ஏழு அடி உயர தன்வந்திரி எம்பெருமாள் திருமேனி பெரும் பொருட்செலவில் ஆகம விதிமுறைகள் உடன் உருவாகிக் கொண்டு உள்ளது. மிக விரைவில் திருப்பணிகள் நிறைவேறி கும்பாபிஷேகம் அவன் அருளால் கூடிவரும்.



# ஏழிளந்தமிழ்

## 2 கொன்றை வேந்தன்

### உரை - செம்மல் வ.சுப.மாணிக்கனார்



சென்ற இதழ் தொடர்ச்சி

41. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு

குடும்பத்தில் துன்பங்கண்டும் மனம் பதைக்காத பெண் மடியில் கட்டிக்கொண்ட நெருப்பை ஒப்பாள்.

42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்

கணவன் மேல் பழி சொல்லித் தூற்றும் பெண் அவனுக்கு எமன் ஆவாள்.

43. தெய்வம் சீறில் கைதவ மாளும்

கடவுளின் வெறுப்புக்கு ஆளானால் செய்த தவப்பயன் அழியும்.

44. தேடா தழிக்கின் பாடாய் முடியும்

செல்வத்தைப் பெருக்காமல் உள்ளதைச் செலவு செய்யின் பின்பு துன்பமாக முடியும்.

45. தையும் மாசியும் வையகத் துறங்கு

பனிபெய்யும் பருவத்தில் வைக்கோலால் வேய்ந்த கூரை வீட்டில் உறங்கு.

46. தொழுதூண் சுவையின் உழுதுாணினிது

பிறர்க்கு அடிமை செய்து உண்பதைக் காட்டிலும் தானே உழுது உண்பது இன்பந்தரும்.

47. தோழ னோடும் ஏழைமை பேசேல்

நண்பனிடங் கூட உன் வறுமை முதலிய எளிமையை வெளிப்படச் சொல்லாதே.

48. நல்லிணக்க மல்லது அல்லல் படுத்தும்

தீய நட்பு பெருந் துன்பத்தைத் தரும்.

49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை

நாடு முழுவதும் வாழ்ந்தால் யாருக்கும் துன்பம் இல்லை.

50. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை

நிலைபெறக் கற்றலாவது சொல்லும் சொல் தவறாமையாம்.

51. நீரகம் பொருந்திய ஊர கத்திரு

நீர்வளம் பொருந்திய ஊரின்கண் வாழ்.

52. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி

சிறிய காரியத்தையும் ஆராய்ந்து செய்க.

53. நூல்முறை தெரிந்து சீலத் தொழுகு

அறநூலில் சொல்லப்பட்ட முறைகளைத் தெரிந்து நல்வழியில் நட.

54. நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை

நம் மனத்திற்குத் தெரியாத வஞ்சகம் இல்லை.

55. நேரா நோன்பு சீரா காது

மனம் ஒன்றுபடாத தவம் செம்மையாக அமையாது.

56. நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்

நலிந்தவரிடத்தும் சிறுமையான சொற்களைக் கூறாதே.

57. நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்

உருவத்தால் சிறியவரும் நல்ல காரியத்தால் எல்லோராலும் விரும்பப்படுவர்.

58. நோன்பென் பதுவே கொன்று தின்னாமை

எந்த உயிரையும் கொல்லாமையும் அதன் ஊனைத் தின்னாமையுமே விரதமாகும்.

59. பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்

பயிர் விளைச்சலின் மூலம் செய்த நன்மை தெரியும்.

60. பாலோ டாயினுங் காலம் அறிந்துண்

பால் உணவானாலும் உரிய காலத்திற் குடி.

61. பிறன்மனை புகாமை அறமெனத் தகும்

பிறன் மனைவியை விரும்பாமை தலைசிறந்த அறம் ஆகும்.

62. பீரம் பேணிற் பாரந் தாங்கும்

தாய்ப்பால் குடித்து வளர்ந்த குழந்தை எப்பாரத்தையும் தாங்கும்.

63. புலையுங் கொலையுங் களவுந் தவிர்

புலால் உண்ணல், கொலை செய்தல், திருடுதல் ஆகிய குற்றங்களை நீக்கு.

64. பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்

கீழ்மக்களிடத்தில் சிறப்பான ஒழுக்கம் அமைவதில்லை.

65. பெற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்

மெய்ஞ்ஞானம் பெற்றவர்க்கு உறவும் இல்லை, வெறுப்பும் இல்லை.

66. பேதைமை என்பது மாதர்க் கணிகலன்

அறியாதவர் போல் இருத்தல் பெண்களுக்குச் சிறப்பாகும்.

67. பையச் சென்றால் வையந் தாங்கும்

பண்பாக நடந்து கொண்டால் உலகத்தார் பாராட்டுவர்.

68. பொல்லாங்கு என்பவை யெல்லாந் தவிர்.

தீயன என்று கூறும் அனைத்தையும் நீக்கிவிடு.

69. போனக மென்பது தானுழந் துண்டல்

உழைத்து உண்ணும் உணவே சிறந்த உணவாகும்.

70. மருந்தே யாயினும் விருந்தோ டுண்

அமுதமாயினும் விருந்தினரோடு சாப்பிடு.

(தொடரும்)

# திறந்த முனைக் கேள்விகள்



டாக்டர் சோம வள்ளியப்பன்

2009-ஆம் ஆண்டு சென்னை புத்தககாட்சி. சங்கரன் என்ற இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் ஞானி அவரது -'ஓ பக்கங்கள்' மூலமாக பிரபலமாக இருந்த காலம். அவை புத்தகங்களாகவும் வந்திருந்தன. ஞானி அவருக்கென்று தனியாக ஒரு ஸ்டால் எடுத்திருந்தார்.

அவர் புத்தகங்கள் அனைத்தும் அங்கே வைக்கப்படிருந்தது. புத்தக விற்பனை தவிர அவர் அங்கு வாசகர்களுடன் உரையாடவும் செய்வார். மேலும் அவரது ஸ்டாலில் பல்வேறு வேலைகள் செய்வார். அப்படிப்பட்ட ஒரு வேலையை அந்த ஆண்டு செய்தார்.

"நீங்கள் அணிய விரும்பும் உடை என்ன?" என்று கேள்வியை பெரிதாக எழுதிவைத்து, அதன் அருகில் இரண்டு பானைகளும், வாக்குகள் போல போட சின்ன ஒரே அளவிலான துண்டு சீட்டுகளும் வைத்தார். ஒரு பானையில் வேஷ்டி என்று எழுதியிருந்தார். மற்றொரு பானையில் பேண்ட் என்று எழுதி இருந்தார்.

ஸ்டாலுக்குள் வரும் பார்வையாளர்கள் அந்தக் கேள்விக்கான தங்கள் பதிலாக அங்கே வைக்கப்பட்டிருக்கும் ஒரு துண்டுச் சீட்டை அவர்கள் தேர்வு செய்யும் பானைக்குள் போட வேண்டும்.

எந்தப் பானையில் எவ்வளவு சீட்டுகள் வருகின்றன என்பதை எண்ணி சொல்வது சுவாரசியமாக இருக்கும் என்று நினைத்திருக்கலாம். அந்த 'தேர்தல்'லின் முடிவு என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனால், 'ரிசர்ச் மெத்தடாலஜி' என்பதை முது நிலையில் ஒரு பாடமாக படித்திருந்த என் மனதில் ஒரு கேள்வி தோன்றியது.

வேட்டி, பேண்ட் தவிர பைஜாமா, அரை கால்சட்டை போடுகிறார்கள் எந்தப் பானையில் போடுவது? இவை ஐந்தும் தவிர வேறு ஏதும் அணிபவர்கள் கூட இருக்கலாம்.

அவர் கேட்டிருந்த கேள்வி, 'இதுவா? அல்லது அதுவா?'

வேறு எந்த பதில்களுக்கும் வாய்ப்பு கொடுக்காத கேள்வி. இப்படிப்பட்ட கேள்விகள், 'க்ளோஸ் எண்டெட் கேள்விகள்'.

இது குறித்து இன்னும் பார்ப்பதற்கு முன்னால் ஒரு நிகழ்வை பார்த்து விடலாம்.

நான் ஒரு அடுக்ககத்தில் குடியிருக்கிறேன். என்னுடைய பிளாட் இருக்கிற மாடியில் இருந்து லிப்ட் மூலம் கீழே இறங்கி கட்டிடத்திற்கு உள்ளாகவே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற என்னுடைய காரை எடுத்துக் கொண்டு அலுவலகம் போய் விடுவேன்.

இந்த அடுக்ககத்தில் இருக்கும் பல்வேறு குடித்தனக் காரர்களின் கார்களை முத்து என்கிற ஒரு இளைஞர் மாதச் சம்பளத்திற்கு துடைத்து வந்தார். காலையில் துடைத்து விடுவார். நான் என் அலுவலகம் போவதற்காக காலை 8:45-க்கு என் பிளாட்டில் இருந்து கார் நிறுத்தும் தரை தளத்திற்கு வருவேன் என்பது அவருக்குத் தெரியும். அதனால் அதற்கு முன்பாக என்னுடைய காரை துடைத்து வைத்திருப்பார்.

ஒருநாள் காலையில் நான் போன போது என்னுடைய கார் துடைக்கப்படாமல் இருந்தது. 'சரி. இன்று முத்து வரவில்லை' என நினைத்துக் கொண்டு அலுவலகம் போய்விட்டேன். மாலை வந்து, என் ஷெட்டில் காரை நிறுத்திவிட்டு வீட்டுக்குப் போய்விட்டேன்.

மறுநாள் வழக்கமன நேரத்திற்கு கீழே போய் காரை எடுக்கப் பார்க்கிறேன். கார், முதல் நாள் விட்ட நிலையிலேயே இரண்டு நாள் தூசியுடன் இருக்கிறது. நான் துடைத்துவிட்டு எடுத்துப் போக நேரமில்லை அப்படியே காரை எடுத்துக் கொண்டு போய்விட்டேன். 'என்ன இது! முத்து இப்படி சொல்லாமல் விடுப்பு எடுக்கிறாரே!! என்று நினைத்துக் கொண்டேன். தூசி படிந்த காரை அலுவலகம் கொண்டு செல்லுமாறு ஆகிவிட்டதே என்று கொஞ்சம் வருத்தமும் கூட.

மறுநாள் காலையும் அதே நிலையில் காரைப் பார்க்க எனக்கு கோபம் வந்தது. மனிதவளத் துறையின் தலைவராக இருக்கிற நான், மற்றவர்களுக்கு புத்திமதி சொல்லிக் கொண்டிருக்கிற நான், என்னுடைய காரை அப்படி எடுத்துக் கொண்டு போய் நிறுத்துவதற்கு விருப்பப்படவில்லை. ஆனாலும், அலுவலகத்திற்கு நேரத்திற்கு போகவேண்டும் என்பதால், அந்த நிலையிலேயே ஓட்டிப் போய் விட்டேன்.

நான்காம் நாள். காலை 8 மணிக்கு வாசல் கதவு மணி அடித்தது. திறந்தேன். முத்து நின்று கொண்டிருந்தார். காரைத் துடைப்பதற்காக கார் சாவி கேட்டு, கையை நீட்டினார்.

சில நாட்களாக வராமல் இருந்ததற்காக அவர் மீது கோபமாக இருந்த நான், ஏதோ பேச எத்தனித்தேன். தற்செயலாக முத்துவின் முகத்தை கவனித்த போது, எனக்கு முத்து மிகவும் சோர்வாகவும், கவலையாகவும் இருப்பதாகப்பட்டது.

"ஏன்.என்ன ஆச்சு?"என்று கேட்டேன்.

"வைஃப் முழுவாம இருக்காங்க சார். கல்யாணி ஆஸ்பத்திரில சேர்த்திருக்கேன். திங்கட்கிழமை டெலிவரி ஆகியிருக்கணும். இன்னும் ஆகல. மூணு நாள் ஆயிடுச்சு. பயமா இருக்கு. அதான் சார் வர முடியல"

"அடடா! அப்படியா? சில சமயங்கள்ல கர்ப்பமான நாளை லேடீஸ் தப்பா குறிச்சு வச்சிருப்பாங்க. அதனால கூட இப்படி நடக்கும். ஒன்னும் பயப்பட வேண்டாம். சுகப்பிரசவம் ஆயிடும்"

“ஆமா சார். நீங்க சொன்னதையேதான் டாக்டர் அம்மாவும் சொன்னாங்க. சாரி சார். மூணு நாளா வரல. கார் அழுக்கா இருக்கு. இன்னைக்கு கழுவி விடுறேன் சார்”

“யோசிக்காதப்பா. எதாவது ஹெல்ப் வேணுமின்னா கேளு”

“தேங்க்ஸ் சார்”

கார் சாவியை வாங்கிக் கொண்டு ஓடினான்.

அவன் மீது கோபமாக இருந்த நான், அன்றிலிருந்து அவனை கார் துடைக்க வர வேண்டாம் என்று சொல்லலாம் என்று யோசித்து இருந்த நான், அப்படிச் சொல்லாமல், அவன் மீது கரிசனம் காட்டியது, அந்த விதமாகப் பேசியது எப்படி?

ஒருகால், நான் அப்படி கோபமாக பேசியிருந்தால், அவன் இருந்த வருத்தத்தில், சிரமமான சூழ்நிலையில் “வேண்டாம் சார். நானே நின்னிடலாமின்னுதான் நினைச்சேன்” என்று சொல்லி அவனும் அந்த வேலையை விட்டுவிட்டிருக்கலாம்

அப்படி போயிருக்க வேண்டிய ஒரு உரையாடலும், நடவடிக்கைகளும் முற்றிலும் மாறாக, இணக்கமாக இருவருக்குமே உதவியாக மாறியது எப்படி? எந்த இடத்தில் அந்த மாற்றம் நிகழ்ந்தது?

கதவைத் திறந்து அவனைப் பார்த்ததும், அவன் முகத்தில் இருந்த சோர்வைக் கண்டு, “ஏன் என்ன ஆச்சு?” என்று கேட்ட இடத்தில்தான்.

முன்பு ஞானி விஷயத்தில் அந்தக் கேள்வி எப்படிப்பட்ட கேள்வி என்று சொன்னது நினைவிருக்கிறதா?

‘இதுவா? அதுவா?’ என்று இரண்டு பதில்களை கேள்வி கேட்பவரே சொல்லி, அதில் ஏதாவது ஒன்றை நீங்கள் தேர்ந்தெடுங்கள் என்று பதில் சொல்பவரை நிர்ப்பந்திக்கும் விதமான ‘க்ளோஸ் என்டட்’ கேள்வி அது.

‘க்ளோஸ் எண்டட்’ என்றால் வேறு வாய்ப்புகள் கொடுக்காமல் இந்த இரண்டு விரலில் ஒன்றைத் தொடு என்பது போன்ற கேள்விகள்.

ஒருகால் நான், முத்துவை பார்த்ததும், “ஏன்பா நாலு நாளா வரல? உனக்கு வேலை செய்ய பிடிக்கலையா? அல்லது வேறு எங்கேயும் வேலைக்கு போயிட்டியா?” என்று கேட்டிருந்தால்?

அல்லது

“நீ என்னதான் நினைச்சுகிட்டு இருக்க? நீ எப்ப வந்தாலும் சரின்னு சொல்ல எங்களுக்கு வேற ஆள் இல்லைன்னா?” என்பது போல கேட்டிருந்தால்?

அதற்கு என்ன பொருள்?

நான் ஏற்கனவே முத்து குறித்து, அவன் வராததற்கு காரணம், அவனது அலட்சியம், பொறுப்பில்லாத தன்மை என்பது போல முடிவு செய்து விட்டது போல. அந்த நினைப்பில் கேட்கிற கேள்விகள் அவை.

அப்படி நான் முடிவு செய்துவிட்ட காரணத்தினால் அவையெல்லாம் ‘குளோஸ் என்டெட்’. காரணம் அவனிடம் கேள்வி கேட்கிறேனே தவிர, ஏற்கனவே நான் அவன் குறித்து ஒரு முடிவு செய்து விட்டேன். ஒன்று அது அல்லது இது என்ற வகையில்தான் மேலே பார்த்த கேள்விகள், கற்பனையாக சொன்ன கேள்விகள் இருக்கின்றன.

சில சமயங்களில் நாம் விசாரிக்கிறோம் என்கிற பெயரில் இப்படி கேள்விகள் கேட்பது தவறு. அதனால், உண்மை வெளிவராமல் போய்விடலாம். நியாயம் கிடைக்காமல் போய்விடலாம்.

என் நல்ல நேரம் அல்லது சற்று இது போன்ற விடயங்களில் அனுபவம் ஏற்பட்டு இருக்கிற காரணத்தினால், தற்செயலாக “ஏம்பா.. என்ன ஆச்சு?” என்று கேட்டிருக்கிறேன்.

அந்தக் கேள்வி ஒரு ‘ஓபன் என்டெட்’ கேள்வி. இந்தக் கேள்வியில் எந்த விதமான அபிப்ராயமும் இல்லை. அதனால் பதில் சொல்பவர் அவர் நினைத்ததை, எதை வேண்டுமானாலும் சொல்லலாம். அந்த சுதந்திரம் அவருக்கு இப்படிப்பட்ட திறந்த முனை கேள்விகளில் கிடைக்கிறது.

அதனால்தான் முத்து, நான் சற்றும் எதிர்பாராத ஒரு நிகழ்வை கூற வாய்ப்பு கிடைத்தது.

பல சமயங்களில் நாம், அதிலும் குறிப்பாக கோபமாக இருக்கிற போது, ஒருவரைப் பற்றி தவறான நினைப்பில் இருக்கிற போது, விசாரிக்கிற போது, ‘க்ளோஸ் என்டெட்’ கேள்விகள்தான் நம் வாயில் வரும்.

கவனமாக அவற்றைத் தவிர்க்க வேண்டும். முனைந்து, ‘ஓபன் என்டெட்’ கேள்விகளை கேட்க வேண்டும். அது சூழ்நிலையை சமூகமாக மாற்றும். நாம் எதிர்பாராத பதில்கள் வரலாம்.

- ஏன் அப்படி சொல்கிறீர்கள்?
- எதனால் அப்படி செய்தீர்கள்?
- ஏன் செய்யவில்லை?
- ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?
- எதற்காக கேட்கிறீர்கள்?

என்பது போல என்ன பதில் வேண்டுமானாலும் சொல்லக் கூடிய விதத்தில் எந்த முன் அனுமானமும், அபிப்பிராயமும் இல்லாத கேள்விகள், பெரும் உதவி.

மற்றொரு முறை நான் ‘ஓப்பன் என்டெட்’ கேள்வி கேட்டு பலனடைந்த அல்லது சிரமத்தைத் தவிர்த்த நிகழ்வு இது. வீட்டிற்கு வந்திருந்த உறவினர் ஒருவர் கேட்டதால், காலையில் நடைப்பயிற்சிக்குப் போய்விட்டு திரும்புகையில், பெட்டிக்கடை ஒன்றில் அன்றைய நாளிதழ் கேட்டேன்.

“இல்லை” என்றார் கடைக்காரர்.

தீர்ந்துவிட்டது என்று எண்ணிக் கிளம்புகையில், கடைக்கு வெளியில் அமர்ந்திருந்த ஒருவர் “நாளைக்கு வரும்” என்றார்.

நாளைக்கு வரும் என்பது எனக்குத் தெரியாதா என்ன? கிண்டலாகச் சொல்கிறாரே! என்று எனக்கு கோபம் வந்தது. அவரைப் பார்த்து சற்று கடுமையாக “ஏன்?” என்றேன்.

“நேற்று ஆயுத பூசை. அதனால் இன்று எந்தப் பேப்பரும் வரவில்லை” என்றார்.

அவர் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார். நான் ‘ஏன்?” என்ற பொதுவானதொரு கேள்வி கேட்டது நல்லதாகப் போயிற்று. ♦



# அழகப்பரின் பிள்ளைகள்

மு. இராமநாதன்



அந்த நகருக்கு நான் போனது அதுதான் முதல் முறை. அங்கே அரசாங்க ஆலையொன்று இருந்தது. பள்ளியில் உடன் படித்த நண்பன் அதில் பணியாற்றினான். வேதியியல் ஆய்வகத்தில் முக்கியப் பொறுப்பில் இருந்தான். அந்த நகருக்குப் போகக் கிடைத்த வாய்ப்பில் நண்பனின் வீட்டிற்கும் போனேன். அது புதிய வீடு. புது வீடுகளுக்குப் போனால் வீட்டைச் சுற்றிக் காட்டுவார்கள். அது ஒரு சடங்கு. வரவேற்பறையில் தொடங்கிய உலா, அடுப்படி, சாப்பாட்டுக் கூடம், பிள்ளைகளின் அறை, படுக்கையறை, பால்கனி வழியாக மீண்டும் வரவேற்பறைக்கு வந்தது. ஓர் அறை பாக்கி இருந்தது. அது சாப்பாட்டுக் கூடத்திற்கும் வரவேற்பறைக்கும் இடையில் இருந்தது. அதை அறையென்று சொல்ல முடியாது. அலமாரி என்றும் சொல்ல முடியாது. மணிக் கதவம் பொருத்தியிருந்தது. தாழ் இல்லை. ‘சாமியறை’ என்று சொல்லியபடியே கதவைத் திறந்தார் நண்பனின் மனைவி. திருச்செந்தூர் முருகன், திருப்பதி வெங்கடாசலபதி, காரைக்குடி கொப்புடையம்மன் படங்களுக்கு அருகே அந்தப் படத்தை நான் எதிர்பார்க்கவில்லை. பள்ளி நாட்களில் கையேடுகளிலும், ஆண்டு மலர்களிலும், ஆசிரியர் அறைகளிலும் பார்த்து நெஞ்சில் பதிந்த படம். பட்டமளிப்பு உடையில் வள்ளல் அழகப்பரின் நின்ற கோலம்.

நண்பனின் ஊர் காரைக்குடிக்கு ஐந்தாறு கிமீ தொலைவில் ஒரு கிராமம். கடை, கண்ணி, மருந்து, மாத்திரை எல்லாவற்றுக்கும் காரைக்குடிக்குத்தான் வர வேண்டும். அப்படியான எண்ணற்ற கிராமங்கள் காரைக்குடியைச் சுற்றி இருந்தன. அந்நாளில் முறையான பேருந்து வசதி கிடையாது. சைக்கிள் ஓர் ஆடம்பரம். எல்லோராலும் வாங்க முடியாது. நண்பனின் தந்தை ஒரு வாடகை சைக்கிள் கடை வைத்திருந்தார். சைக்கிள்களைப் பழுதும் பார்ப்பார். நண்பன் பள்ளிக்கு நடந்துதான் வருவான். ஆறாம் வகுப்பில் அழகப்பா உயர்நிலைப் பள்ளியில் தொடங்கிய பயணம், அழகப்பா கலை அறிவியல் கல்லூரியில் புகுமுக வகுப்பு, இளங்கலை, முதுகலை வரை தொடர்ந்தது. அரசுப் பணியில் சேர்ந்த பிறகு முனைவர் பட்டமும் பெற்றான்.

நான் அழகப்பரின் படத்தைப் பார்த்து மெய்சிலிர்த்து நிற்பதைக் கண்ட இணையர்கள் ஒன்றும் பேசவில்லை. நண்பனின் மனைவி கதவை மென்மையாகச் சாத்தினார். நண்பனின் கண்களில் நீர் திரண்டிருந்தது. செய்நன்றி அங்கேயே தேங்கி நின்றது, கீழே விழவில்லை. அன்று நாங்கள் பள்ளி நாட்களைப் பற்றித்தான் பேசினோம். நாங்கள் பிறப்பதற்கு முன்னரே இறந்து போன வள்ளல் அழகப்பரைப் பற்றியும் பேசினோம்.

### மாணவர் அழகப்பர்

க.வீ.அள.ராம. அழகப்பச் செட்டியார் (1909-1957) காரைக்குடிக்கு அருகில் கோட்டையூரில் பிறந்தார். அங்கிருந்து மாட்டு வண்டியில் வந்து காரைக்குடி மீனாட்சி சுந்தரேஸ்வரர் பள்ளியில் படித்தார். அழகப்பரின் அப்பாவுக்கு மலேயாவில் வட்டிக் கடை இருந்தது. பள்ளிப் படிப்பு முடித்ததும் அழகப்பரைப் பெட்டியடியில் கைபழக வருமாறு பணித்தார். அழகப்பருக்கு ஆர்வம் கல்வியில் இருந்தது. ஆனாலும் அப்பாவை மீற முடியவில்லை. சென்னையில் கப்பலேறினார். நல்வாய்ப்பாகக் கப்பலில்

அவருக்குக் காய்ச்சல் கண்டது. நாகப்பட்டினத்தில் இறக்கி விடப்பட்டார். காய்ச்சல் குறைந்தது. மகனில் தகிப்பது சுரம் மட்டுமல்ல, கல்வி வேட்கையும்தான் என்பது தந்தைக்குப் புரிந்தது. அழகப்பர் சென்னை மாநிலக் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்தார். ஆங்கில இலக்கியத்தில் FA, BA என்று தொடர்ந்து MA-இல் முடித்தார். ஆண்டு: 1930. பிறகு லண்டன் போனார். பார்-அட்-லா தேறி வழக்கறிஞரானார். சார்ட்ட் வங்கியில் பயிற்சியும் பெற்றார். அப்படிப் பயிற்சி பெற்ற முதல் இந்தியர் அழகப்பர்தான். எல்லாம் மூன்றாண்டுகளில் நடந்தது. தாயகம் திரும்பினார்.

### வணிகர் அழகப்பர்

கொச்சியில் நூற்பாலை தொடங்கினார். திருச்சூர், கண்ணூர், ஆலுவா ஆகிய நகரங்களில் நெசவாலை தொடங்கினார். வணிகம் வளர்ந்தது. மருந்து, ரப்பர், நட்சத்திர விடுதி, திரையரங்கு, இரும்பு, ரியல் எஸ்டேட், வங்கி, காப்பீடு என்று பல துறைகளைத் தொட்டார். அவை துலங்கின. மும்பையில் பங்கு வணிகத்தில் ஈடுபட்டார். அங்கு முக்கியப் புள்ளியானார். அழகப்பர் வாங்கியதாலேயே பல பங்குகளின் மதிப்பு உயர்ந்தன. ஆனால் அந்தச் சந்தையின் கரடி முகம் மேலெழுந்தபோது அழகப்பரின் கைவசமிருந்த பங்குகள் மட்டுமல்ல, அவர் கட்டி எழுப்பிய பல தொழிற்கூடங்களின் அடித்தளமும் ஆட்டம் கண்டன. ஆனால் அவர் வீழவில்லை. மீண்டார். உயர்ந்தார். எனில், அழகப்பரின் பெயர் நிலை பெற்றிருப்பது அவர் வெற்றிகரமான வணிகர் என்பதனால் அல்ல, அவர் மனிதநேய மிக்க வள்ளல் என்பதால்.

### 'பித்துக் கொடையாளன்!'

அழகப்பர் வழங்கிய கொடைகளின் பட்டியல் பெரிது. ஒரு பவுன் தங்கம் 25 ரூபாய்க்கு விற்ற காலத்தில் அவர் வழங்கிய கொடை லட்சங்களிலும் பல்லாயிரங்களிலும் இருந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழக பொறியியற் கல்லூரி (ரூ.5 லட்சம்), சென்னை அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி (ரூ. 5 லட்சம்), திருவிதாங்கூர் பல்கலைக்கழகத் தமிழ் இருக்கை (ரூ.1 லட்சம்), கொச்சி குழந்தைகள் பகலுணவு (ரூ. 1.5 லட்சம்), மதுரை டோக் சீமாட்டி கல்லூரி (ரூ.25 ஆயிரம்), சென்னை சேவா சதனம் (ரூ.75 ஆயிரம்), எர்ணாகுளம் மகராஜா கல்லூரி (ரூ.80 ஆயிரம்), தில்லி தென்னியந்தியக் கல்விக்குழு (ரூ. 75 ஆயிரம்), சென்னை தக்கர் பாபா தொழிற் பள்ளி (ரூ.1.17 லட்சம்), தமிழ்க் கலைக்களஞ்சியம் (ரூ.10 ஆயிரம்) என்று அந்தப் பட்டியல் நீள்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நிறுவிய அண்ணாமலை அரசரே அழகப்பரை வள்ளல் என்று போற்றியிருக்கிறார். எனில், மக்கள் மனதில் அவர் வள்ளலாக நிலை பெற்றதற்குக் காரணம் காரைக்குடிக் கல்விச் சாலைகள். அதற்குக் கால்கோள் நாட்டப்பட்ட நாள் ஜூலை 3, 1947.

### 'எடுத்தான் பல பள்ளி ஈங்கு!'

அன்றுதான் அடையாறில் அன்னிபெசண்ட் அம்மையாரின் நூற்றாண்டு விழா நடந்தது. சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் லெட்சுமணசாமி முதலியார் உரை நிகழ்த்தினார். 'நாம் அரசியல் விடுதலை பெறப் போகிறோம். நமது நாடு அறியாமையிலிருந்தும் விடுதலை பெற வேண்டும். அதற்குக் கல்விக் கூடங்கள் வேண்டும். நாடெங்கும் செல்வந்தர்கள் அவற்றைத் தோற்றுவிக்க வேண்டும்' என்று பேசினார். அரங்கிலிருந்த அழகப்பர் அந்த அறைகூவலை ஏற்றார். அங்கேயே காரைக்குடியில் கல்லூரி தொடங்குகிறேன் என்றார். பல்கலைக்கழகத்திற்கு வைப்புத் தொகையாக அப்போதே ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கினார்.

கல்லூரிக்குக் கட்டடம் வேண்டுமே? ஊராட்சிக் கட்டடம் தற்காலிகக் கல்லூரி ஆகியது. ரயில்வே பீடர் சாலையில் அமைந்திருக்கும் அந்தக் 'காந்தி மாளிகை' இப்போது அரசு மருத்துவமனையாக இயங்கி வருகிறது. நாடு விடுதலை பெற்ற அதே நாளில் அழகப்பாக் கல்லூரியும் இயங்கத் தொடங்கியது. அப்போது தொடங்கிய ஓட்டம் அடுத்த பத்தாண்டுகளுக்கு, அழகப்பர் கண் மூடுகிறவரை, நிற்கவில்லை. அழகப்பா ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி (1950), அழகப்பா பொறியியற் கல்லூரி (1952), அழகப்பா மகளிர் கல்லூரி (1953), அழகப்பா பாலிடெக்னிக் (1955), அழகப்பா உடற்கல்விக் கல்லூரி (1956) என்று பட்டியல் வளர்ந்தது.

கல்லூரிகளுடன் பள்ளிகளும் நாட்டினார் அழகப்பர். முதலாவதாக, அழகப்பா மாதிரி உயர்நிலைப் பள்ளி (1951). இந்தப் பள்ளியில் படிக்கிற பேறு எனக்கு வாய்த்தது. மருத்துவக் கல்லூரிகள் மருத்துவமனைகளுடன் இணைக்கப்படுவதைப் போல் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது தான் எம். அழகப்பா மாதிரி உயர்நிலைப் பள்ளி. ஆசிரியப் பயிற்சி பெறும் மாணவர்கள் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியை குறிப்பிட்ட கால அளவில் (2 முதல் 3 வாரம்) எங்களுக்குப் பாடம் எடுப்பார்கள். இது ஆண்டிற்கு ஒரு முறை, சமயங்களில் இரு முறை நடக்கும். பயிற்சி ஆசிரியர்கள் பாடம் நடத்துவதை, அவர்களது ஆசிரியரும் எங்களது ஆசிரியரும், கூடவே நாங்களும் மேற்பார்ப்போம்.

மாதிரிப் பள்ளியைத் தொடர்ந்து வந்த பள்ளிகள்: அழகப்பா மாண்டிசோரிப் பள்ளி (1953), அழகப்பா தொடக்கப் பள்ளி (1954), அழகப்பா ஆதாரப் பள்ளி (1955), அழகப்பா ஆயத்தப் பள்ளி (1956), அழகப்பா இசைப் பள்ளி (1956) முதலியன.

கல்வியைப் போலவே ஆய்வும் முக்கியமானது என்று கருதினார் அழகப்பர். அப்படி உருவானதுதான் 'சிக்ரி'- மத்திய மின் வேதியியல் ஆய்வு மையம் (Central Electro Chemical Research Institute, CECRI). இதற்காக 300 ஏக்கர் நிலமும் ரூ.15 லட்சம் நிதியும் அரசுக்கு வழங்கினார். நேருவே காரைக்குடிக்கு வந்து மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். ஆண்டு:1948. அப்போது அவர் அழகப்பருக்கு வழங்கிய பட்டம்தான் 'சோசலிச முதலாளி'.

(தொடரும்)

# தெய்வீக ராகம்...

அரியக்குடி “ ஸ்ரீ” – சபாரத்தினம்
(garudasaba@gmail.com)



எஸ்.பி.டி பிலிம்ஸ்.. சாங்க் நம்பர் ஒன்.... டேக் நம்பர் ஒன்.... ஓகே... பின்னணியில் பாடகி “ஹம்” செய்யத் தொடங்கினார். கரண்ட் கட். போன கரண்ட் வரவேயில்லை.

புதிய இசையமைப்பளாரின் முதல் திரைப்படம்... முதல் பாடல் பதிவு... சுற்றி நின்ற எல்லோர் முகத்திலும் சொல்ல முடியாத சோகம். நல்ல நேரம்... நல்ல சகுனம் என சென்டிமென்டிலேயே திளைக்கும் திரை உலகம், தயாரிப்பாளர் காதுபட பேசியது “ஆரம்பமே சரியில்லையே” மொட்டாய் வந்த இளம் இசையமைப்பாளர் முகம் வாடிப் போனது.

கரண்ட் வந்தது. அடுத்த டேக்... பின்னணிப் பாடகியின் வசீகரக் குரல், ஒருங்கிணைந்து இணைந்த இசைக் கருவிகள் எல்லோரையும் மெய் மறக்கச் செய்தது. இப்போது கூடியிருந்தவர்கள் “நல்லா வந்திருக்கு அண்ணன்” என்று சொல்லி கைதட்டி மகிழ்ச்சியை பதிவு செய்தார்கள்.

அது மோனோ ரெக்கார்டிங் காலம். எடுத்த பாட்டை ஒழுங்காக வந்திருக்கிறதா அல்லது மீண்டும் அடுத்த “டேக்” போக வேண்டுமா என தீர்மானிக்க பதிவு செய்யப்பெற்ற இசையோடு இணைந்த பாடலை போட்டுக் காட்டச் சொல்லுவார்கள். “ரெக்கார்டிஸ்ட்” ஒலிக்க விட்டார். ம்ம்ம்.... என்கிற “ஹம்மிங்ல்” வரும் சொல் தவிர எதுவுமே பதிவாகவில்லை. ரெக்காரடிஸ்ட் “டேக் ஆரம்பிக்கும் பொழுது ரிக்கார்ட் எனும் சுவிச்சை ஆன் செய்யாது விட் டுவிட்டேன்” என்றார் சாதாரணமாக. தயாரிப்பாளர் தரப்பில் முணுமுணுப்பு அதிகமாகியது. பாடலாசிரியர் மட்டும் சலனமே இல்லாது அடுத்த “டேக்” போவோம் என்று சொல்லி, பாடலைப் பதிவு செய்து முடித்து விடுகிறார்.

கவிதைக்கு, பாடலுக்கு பொய்யழகுதான். கவிஞர்கள் உதிர்த்த பொய்கள் மெல்ல உயிர் பெற்று, மெய்யாய் மலர்ந்த கதைகள் ஏராளம். ஒரு இசைக் கலைஞன் சொன்ன சுய குறிப்புகளை பாடல் வரிகளாக்கி, அவர் வாழ்நாள் கனவை மெய்யாக்கிய விதம் பாருங்களேன்.

நதியோரம் பிறந்தேன்
கொடிபோல வளர்ந்தேன்
மழையோடும் வெயிலோடும்
மனம் போல நடந்தேன்
உறங்காத கண்களுக்கு
ஓலை கொண்டு மையெழுதி
கலங்காம காத்திருக்கேன்
கைபிடிக்க வருவாரோ....

“கைபிடிக்க வருவேனே” என்று கை நீட்டிய அந்தப் பாடலாசிரியர் பஞ்சு அருணாசலம் அவர்கள். உங்கள் யூகம் சரிதான்... அந்த இளம் இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜாதான். பாடகி ஜானகி அம்மா அவர்கள். இந்த அறிமுகம் 1976-ல்.... இளையராஜா அவர்களின் 33-ஆவது வயதில்.

பலருக்கு இட்ட பெயரைவிட ஊர் உலகம் வைக்கும் பெயர் நிலைத்து விடும். மகாத்மா, மனித குல மாணிக்கம், தமிழ்க் கடல், கம்பன் அடிப்பொடி எனச் சில உதாரணங்கள்.

இப்படி “ஞானதேசிகனாக” வந்த ராஜாவை, இளையராஜா எனப் பெயரிட்டிருக்கிறார் கவிஞர் பஞ்சு அருணாசலம் அவர்கள். பல நூறு வெற்றிப் படங்களைத் தந்த கவிஞர் பஞ்சு அண்ணன் அவர்களை, மணமகளே மணமகளே வா வா, பொன்னெழில் பூத்தது புதுவானில், என்னை மறந்ததே தென்றலே, சின்னக் கண்ணன் அழைக்கிறான் போன்ற மிக மிக அழகான 400-க்கும் அதிகமான திரையிசைப் பாடல்களைத் தந்த கவிஞர் பஞ்சு அண்ணன் அவர்களை, பலர் அறிமுகப்படுத்தும் பொழுது, இசைஞானியை திரையுலகிற்குத் தந்தவர் என்பதையே முத்தாய்ப்பாய் சொல்லத் தொடங்கினர்.

சுமார் 1400 படங்கள், பல்லாயிரக்கணக்கான பாடல்கள் என உச்சம் தொட்ட இசைஞானி தனது துணிச்சல் என்று பொருள்படும் முதல் சிம்பொனியான “வேலியன்டை” உலக இசைப் பிரயர்களுக்கு லண்டனில் சமீபத்தில் வழங்கியிருக்கிறார். இசை ஜாம்பவான்களின் வரிசையில் மொஸார்ட், பீத்தோவன், சாய்கோவ்ஸ்கி வரிசையில் நான்காவதாக இணைந்திருக்கிறார் இசைஞானி. பண்ணைப்புரம் எனும் கிராமத்துக் கலைஞன், சிம்பொனியை அரங்கேற்றிய ஆசியக்கண்டத்தின் முதல் நபர் எனும் பெருமையைப் பெற்றிருக்கிறார்.

பல்வேறு இசைக் கருவிகள் ஒத்திசைத்து பெய்யும் இந்த இசை மழையை, லண்டன் இவென்டிம் அப்பல்லோ அரங்கில் 3341 ரசிகர்கள் இருக்கைகளிலும், 5300 ரசிகர்கள் நின்று கொண்டும் ரசித்திருக்கிறார்கள்.

நிகழ்ச்சியில் பங்கு பெற குறைந்தபட்ச நுழைவுக் கட்டணம் இந்திய மதிப்பில் ரூ 15,000/-, அதிக பட்சமாக ரூ.62,000/-, நின்று கொண்டு ரசிப்பதற்கு ரூ.9,500/-.

சினிமா பாடல்கள்.... இசை என்ற கூண்டுக்குள்ளிருந்து விடுதலை அடைந்த பறவையாக இளையராஜா உணர்வில் மாறிப் போயிருந்தார் என்று பத்திரிக்கைகள் விமரிசனங்களை வைத்தன. லண்டனைத் தொடர்ந்து இளையராஜா 13 நாடுகளில் சிம்பொனியை அரங்கேற்ற இருக்கிறார்.

நமது செட்டிநாட்டு வழக்கப்படி புதுக் கணக்கு போடுவதற்கு குழந்தை மனம் படைத்த ஒரு பெரியவரை அல்லது ஆகச் சிறிய குழந்தையை அழைத்து வருவார்கள். அவர்கள் இடும் “உ” சிவமயம் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமான வரவுகளைச் சேர்த்து வைக்கும் என்று சொல்லுவார்கள். கவிஞர் பஞ்சு அருணாச்சலம் அவர்கள் ஒரு கிராமத்துக் கலைஞனுக்கு 1976-ல் “ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தாராம்“ என மஞ்சள் தொட்டு வைத்து போட்டுக் கொடுத்த, “உ” சிவமயம், 1980-ல் அவரின் 100-ஆவது படத்தில் “என் இனிய பொன் நிலாவே” எனும் பாடலை திரையிசையாக எட்ட வைத்தது. 1983-ல் 200-ஆவது படம். 1987-ல் 400-ஆவது படம் என உயர் கோட்டு சித்திரமாக வளர்ந்தது.

கவிஞர் பஞ்சு அருணாச்சலம் எழுதிய புதுக்கணக்கு 7000-த்துக்கும் அதிகமான பாடல்களை திரை உலகத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. சுயாதீனமாக How to name it, nothing but wind, திருவாசகம் oratorio, திவ்விய பாசுரங்கள் இன்னும் இசைக் காவியங்களை இசைஞானியின் வழியாக நமக்கு வழங்கியிருக்கிறது.

திரைத்துறையில் கால் பதித்த காலங்களில் “பாதிப் படம் பஞ்சு” என்று கவிஞரைப் பேசிய திரையுலகம் “தொட்டதெல்லாம் பொன்னாக்கிய படைப்பாளி பஞ்சு அருணாச்சலம்” (A Creator with Midas Touch) என்று ஒரு ஆவணப் படம் தனஞ்செயன் இயக்கத்தில் எடுத்து அவரின் சாதனையை, புகழைப் பேசியிருக்கிறது .

தெய்வீக ராகம்
தெவிட்டாத பாடல்
கேட்டாலும் போதும் – இள
நெஞ்சங்கள் வாடும்...
செந்தாழம் பூவைக் கொண்டு
சிங்காரம் பண்ணிக்க கொண்டு
செந்தூர பொட்டும் வைத்து
சேலாடும் கரையில் நின்றேன்....
பாராட்டவா..... சீராட்டவா...

பெரும் பெயரைப் புகழை இன்னும் அடைய இருக்கிற இசைஞானியை, வாழும் பொழுதே வாழ்த்தியிருக்கிறார் கவிஞர் பஞ்சு அருணாச்சலம் அவர்கள்.

சித்திரை வருஷம் பிறக்கப் போகுது.... குழந்தையைப் போன்ற பஞ்சு அருணாச்சலம் அண்ணன்கள் உங்கள் கையால் ஏறுமுகத்தில் மஞ்சள் தொட்டு வைத்து,

“ஆனந்தத் தேன் சிந்தும் பூஞ்சோலையில் ஆயிரம் சீர் கொண்டு வந்தேனம்மா” என “உ” சிவமயம் போட்டுப் புதுக்கணக்கைத் தொடங்குங்கள். தேசமெங்கும் திறமையிருந்தும் வெளிச்சத்திற்கு வர இயலாத ராஜாக்களைக் கண்டுபிடித்து திரையுலகத்திற்கு மட்டுமல்ல, தொழிலுகத்திற்கும் கொண்டு வந்து சேருங்கள்.

கவிஞர் வாலி அவர்கள் சொல்லுவது போல...

“பல நூல் படித்து நீயறியும் கல்வி – பிறர்
நலம் நினைந்து நீவழங்கும் செல்வம்
பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம்
இவை அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்”. ♦




Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு வருகை தாருங்கள்.

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923



# குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் – 40 (கல்வி)

400) கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.
கேடில் லாத செல்வம் யாதெனில்
கிடைத்தற் கரிய கல்விச் செல்வமே
கோடி செல்வம் கூர்த்த அறிவுதான்
கூர்த்த அறிவினால் யாரையும் வெல்லலாம்
எத்தனை கோடி பணமிருந் தாலும்
இணையில் லாதது கல்விச் செல்வமே
எத்தனை முறைநீ கற்றுக் கொடுப்பினும்
இம்மியும் குறையுமோ கல்விச் செல்வமே.

அதிகாரம் – 41 (கல்லாமை)

401) அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.
நிரம்பப் படித்த நூல்அறி வற்றவன்
நிரம்பிய நூலறிவு உடையார் சபையில்
திறம்படப் பேச நினைப்பது அரங்கின்றித்
தெளிவாய் ஆட எண்ணுவது போலாம்.
அரங்கின்றி எந்த ஆட்டமும் நிகழுமோ
அறிவற் றவரா அன்றோ சபையில்
திறம்படப் பேசுவார் நாட்டியக் கலைஞன்
திறமையும் தெரியுமா அரங்கின்றி ஆடினால்.

403) கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.
கல்லா தவரும் நல்லவ ரேஅவர்
கற்றார் முன்சொல் லாடா திருந்தால்
சொல்லா டாதா கல்லா தவரை
சொல்வார் கற்றோர் நல்லவ ரென்றே
அறிவிற் சிறந்தவர் பேசலாம் யாரும்
அறிவில் குறைந்தால் அமைதியாய் கேட்கலாம்
அறிவற் றவர்கள் நாவை அடக்கினால்
அவர்களை நல்லார் என்பர் அறிஞரே.

406) உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.
களர்நிலம் தனில்எந்த விளைச்சலும் இல்லை
கல்லா தவரால் பயனிலை யார்க்கும்
உளன்இவன் உயிரோ டிருக்கிறான் அன்றி
ஒருபயன் உண்டா கல்லா தவரால்
கற்றவர் மிகுந்தால் சமூகம் வளரும்
கல்லா தவரெனில் சமூகம் தளரும்
உற்ற பயன்எனில் சமூகம் மேம்பட
ஒருவன் கற்ற கல்வியே துணைவரும்.

# திருமந்திரச் சுவை – 45

## திருவடி



பூங்குன்றம் இராமசாமி

இறைவன் திருவடியை அடைதலே நம் இறுதி நிலை. அதனை நோக்கியே அனைத்தும் நடக்கின்றன. வீடுபேறு (முத்தி) என்பது இதுவே.

'திருவடி' என்பதன் பொருள் என்ன?

நடராசர் உருவில் இறையின் திருவடியைக் காணலாம். அதுவும் தத்துவமே!

எங்கும் நிறைந்துள்ளது இறையது திருவடி (திருவருள்). அனைத்தையும் தாங்குவது அது. ஆக, நாம் இன்று காண்பன, உணர்வன அனைத்தும் அவனது திருவடியின் நீட்சியே (நீழலே)! எனவே, இறையடிக்குள் நாம் இருக்கின்றோம். எங்கும் நிறைந்துள்ள திருவடி (திருவருள்) நம்முள்ளும் உள்ளது. இதுவே திருவடி (திருவருள் நீட்சி) உணர்த்தும் பொருளாகும்.

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே (10.1598)

திருவடி ஞானம் ஒன்றே சீவனைச் (உயிர்) சிவம் ஆக்குவிக்கும்: உயிரைச் சிவலோகம் சேர்ப்பிக்கும். உயிரைச் சிறைப்படுத்தியுள்ள ஆணவ மலத்தினின்று அதனை மீட்கும். அதுவே மிக உயர்ந்த சித்தியாகிய முத்திப் பேற்றை கூட்டுவிக்கும். ஆகத் திருவடி ஞானமே முத்திப்பேறாகும்.

திருவடி ஞானம்: தன்முனைப்பு இன்றி அஃதாவது, 'தன்செயல் எதுவும் இன்றித் திருவருள் வயப்பட்டு, அதன் நிறைவுள் தானும் ஒன்றி, இறைசெயலே (அவனருளே) அனைத்தும்' என இருத்தல். சிவம் ஆக்குவிக்கும்: சிவத்தோடு இணைப்பிக்கும். சிவலோகம்: வீட்டுலகம், மேலுலகம். சிறைமலம்: ஆணவமலம்.

திருமூலரோ அனைத்தையும் திருவடியாய்க் காண்கின்றார். 'அனைத்தும் திருவடியே' என்கிறார். ஞானி அல்லரோ அவர்? அதனையுங் காண்போம்.

மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்க ளாவதும்
சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே (10.1604)

நினைப்பவரைக் காப்பது மந்திரம். மந்திரங்கள் அனைத்தும் இறைவன் திருவடி நீழலே.

நோய் (பிணி) தீர்ப்பது மருந்து. பிறவிக்கு வித்தாகும் 'அறியாமை' என்னும் பிறவிப் பிணியைத் தீர்ப்பது மாமருந்து ஆகிய திருவடியே (திருவருளே). தன்னடியை அடையத் தந்திரங்களை (உபாயம்) உணர்த்துவதும் திருவடியே. அறவழி வந்த பொருளைத் தக்கோர்க்கு அளிப்பதே தானம். அதனால் விளையும் பயன் திருவடிப்பேறே.


'நாம் இணைய வேண்டிய அழகிய பொருள் இறைவன் திருவடியே' இவ் எண்ணத்தைத் தருவதும் இணையடியே (திருவருளே).

தூயநெறி (பேரின்பம்) திருவடிப் பேறே!

எனவே, இவை எல்லாமாவதும் திருவடிப்பேறு ஒன்றே. ✶

# இராம காவியம்

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)



## சுக்ரீவன் படையுடன் செல்லல் - 14

வருவதாய் சொன்னவன், படையுடன் வராமல் இருக்கவே
பெருமையாய் நினைத்தவன் பெரும் பிழை செய்ததால்
கோபம் கொண்டனன் சுக்ரீவன் குணமறிந்து
அடைய கிடைக்காத அரண்மனை வாழ்வு எளிதில் கிடைத்ததால்
தடைகள் இல்லையென தன்னிலை மறந்து
மதுவும் மங்கையுமாய் கிடப்பான் என்றான்
இளவலை அழைத்து அவன் நிலை அறிந்து வா என்றான்
வனம்தனில் காவலாய் இருந்த அங்கதன்
சினம்மிகு தோற்றமாய் தெரிந்த இளவலை
எதிர்பட பார்த்ததும் மிரண்டு போனான்
படையுடன் வருவேன் என்றவன்
உடைகளை களைந்து கிடந்தான்
இந்நிலை இளவல் கண்டால்
என்னாகும் அவன் விதி என்று
அனுமனை காண அங்கதான் ஓடினான்
எல்லாம் சொன்னான் விவரமாய் சொன்னான்
பொல்லா நிலையை புரிந்த அனுமனும்
வில்லின் மைந்தனின் வீரத் தம்பியை
சொல்லின் வேந்தன் வாழ்த்தி வணங்கினான்
படைபலம் சற்று பறந்து கிடக்க
இடைப்பட்ட நாளில் இணைக்கவே முயன்றோம்
எல்லாம் சரியாய் இணைந்து நடக்க எதிர்பட்டீர்
வல்லமை பெற்றோம். இளைப் பாறுவீர் எனச்
சொல்லிச் சென்றான் சுக்ரீவனை காண
குடித்து கிடந்தவன் இடத்தை சரி செய்து
பிடித்து தூக்கி பெரும் பணிசெய்து
அழைத்து வந்தான் அண்ணலின் தம்பி முன்
நடித்தனன் சுக்ரீவன் நல்ல பெயர் காக்கவே
இருக்கும் பெரும்படை என் உடன் வரட்டும்
சேரும் தனிப்படை உன்னுடன் வரட்டும்
என்று ஆணையாய் அனுமனிடம் சொல்லி
நன்று புறப்பட நாள் இதுவே என
இலக்குவனுடன் இணைந்தான் படைகள் பின்தொடர.

## அசோகவனத்தில் சீதையை காணல் - (15)


அங்கதன் தலைமையில் அனைவரும் செல்ல
எங்கோ இருந்து சம்பாதி வந்தான்
சடாயுவின் அண்ணன் தானென சொன்னான்
சடாயு இறந்ததை அனுமன் சொல்ல
கண்ணீர் விட்டான் கதறி அழுதான்
என்னில் உறைந்தவன் இல்லையே என்றான்
ராமனை வணங்கி நற் செய்தியும் சொன்னான்
சீதை நல்லாள் சிறைப்பட்டாலும்
இலங்கையில் உள்ளாள்
பிரிந்த துயர் அன்றி பெரிதாய் வேறில்லை
அன்னையை கண்டறிய அனுமனே உகந்தவன்
அவனை அனுப்புக அனைத்தும் சரியாகும்
மகனை ஒத்த ராமனை வணங்கியே
மாதவம் புரிந்தேன் என்றான்
புறப்பட்டான்
வீட்டையும் நாட்டையும் விட்டவன் கையில்
கணையாழி மட்டும் விரலோடு வந்தது ஏன்
இன்று ஒரு நிலை வரும்
என்று இவனுடன் வந்ததோ!
இலங்கை செல்ல இவனே உகந்தவன் என்று
விலங்கினும் வேந்தன் சுக்ரீவனும் சொல்ல
அஞ்சனை புத்திரன் இவனருள் பெற்றவன்
நெஞ்சிலே நிறுத்தினான் இட்ட பணி ஏற்க
கணையாழி கொடுத்து ராமன் சொன்னான்
இணையாளை காண்பாய் அவளிடம் கொடுப்பாய்
பூமியில் மலர் பாதம் தொட்டு ராமனென்றே
மேவி விண்ணில் பறந்தான்
விண்ணுக்கும் மண்ணுக்கும்
இடைப்பட்டு விரைந்து பறந்தான்
இலங்கை நோக்கி
தடைகள் பல விண்ணிலே தகர்த்தெறிந்தான்
கண்கள் மட்டும் அங்கும் இங்குமாய்
கீழும் மேலுமாய் பார்த்த வண்ணமே
ராமனை துதித்தே விரைந்து பறந்தனன்
அடர்ந்த காட்டின் மேல் அழகிய கொலுசு
படர்ந்து தொங்க பார்த்தவன் மகிழ்ந்தான்
"கண்டேன் சீதையை" என்றே கதறினார்
விண்ணும் சற்றே வியந்து பார்க்க
அன்னையைக் காணும் ஆவலில் இருந்தான்
தன் நிலை மறந்து ராம நாமத்தால் பறந்தான்
தங்கம் நடுவே மின்னும் வைரமாய்
எங்கும் சிறந்த இலங்கையை கண்டான்
மலையி லிருந்து பார்த்தவன் மயங்கிப் போக
நிலை அதுமாற நேரம் ஆனது
ஊருக்குள்ளே நுழைய முயல பருத்த
உருவில் சினந்த அரக்கி பின்னுக்கு இழுத்தாள்
இலங்கையை காக்கும் லங்கினி என்றாள்
விலங்கே வீண் செயல் வேண்டாம்
வெளியேறு என்றவள் அனுமனை தாக்கினாள்
உளிபோன்ற நகத்தால். பெண் என்று நினைத்தது
பெரும் தவறென்று எண்ணி அனுமன்
மூர்க்கமாய் தாக்கினான். முடங்கிப் போனாள்
வானர வீரனால் வதைபடும் நாளில்
இலங்கையும் அழியும்
நானும் இல்லாமல் போவேன்
என்பதை உணர்ந்தாள் வேதனை மறந்தாள்
பிரம்மாவின் ஆசியை வரமாய் பெற்ற
கந்தர்வ கன்னியவள்
காற்றிலே கரைந்து போனாள்
அன்னையை தேடி அலைந்தவன்
முன்னும் பின்னுமாய் மரங்களில் தாவ
சோலை ஒன்றில் சோகமாய் நலிந்தவள் கண்டான்
மாலை பொழுதில் மங்கலாய் தெரிய
தாவி குதித்து அன்னை முன் நின்றான்
ஏவியவன் யாரோ இவன் யார் என்றாள்
பருத்த உடலுடன் பலபேர் நடுவே
சிறுத்த இடையுடன்
அன்னை மெலிந்து தோன்றினாள்
கணையாளியை காட்டி ராமதூதன் என்றான்
அகம் மகிழ்ந்து அன்னை அவனை வாழ்த்தினாள்
நாவிலே சுட்டு நகரையும் எரித்து
நான் வெளி வருவேன்
ஆயின் என்னவர் புகழுக்கும் வில்லுக்கும்
இழுக்கென்று இருக்கிறேன் என்னவர்
வருவாரென்று
கண்மணி ஒத்த சூடாமணி தந்து
என்னவருக்கு எடுத்துச் செல் என்றாள்
மண்ணிலே விழுந்து
அன்னையை வணங்கினான்
விண்ணிலே திரும்ப விடையும் பெற்றான்.

(தொடரும்)

# நகரத்தார் 113 சிகரத்தார்



காரைக்குடி நாராயணன்



அயல்நாட்டிலிருந்து பிள்ளைகள் எல்லாம் வரப்போகின்றதை நினைத்து ஆச்சி பரபரப்பாக இருந்தார். நாச்சியார்புரத்தில் மாப்பிள்ளையும், பொண்ணும் பார்த்து முடிவு செய்ததைப் பற்றிச் சொன்னார்.

இல்லாத வீட்டுல பொண்ணை எடுக்கணும். இருக்குற வீட்டுல பொண்ணை கொடுக்கணும்.

செட்டியார் கேட்டார்.

எல்லாம் சரிதான். பொண்ணை மாப்பிள்ளையும், மாப்பிள்ளையைப் பொண்ணும் பாக்க வேண்டாமா?

அதெல்லாம் நம்ம காலம். இப்போ பசங்க வீடியோவில விடிய விடியப் பேசிடுறாங்க. தாலி கட்டுறது மட்டும்தான் ஊருக்காகச் செய்யுறாங்க. அவங்க வந்ததும் நம்ம குடும்பக் கோயில்ல வச்சுப் பொண்ணு மாப்பிள்ளைன்னு சொன்னாப் போதும்னு நெனைக்குறேன்.

ஆச்சி, அதனாலதான் உங்க ஒம்பது கோயில்ல ராஜசபை நடந்துக்கிட்டிருக்கு.

அதுல என்ன சந்தேகம். அதனால தான் நாங்க தாயாக அம்மனை, தந்தையாகச் சிவனை, சகோதரர்களாகப் பிள்ளையார், முருகனை, குருவாகத் தட்சிணாமூர்த்தியை, வழிகாட்டியாகப் பார்த்தசாரதியை, மருத்துவராகத் தன்வந்திரியை, நன்னடத்தைக்கு ராமரை, கூப்பிட்ட குரலுக்குக் கிருஷ்ணரை, பக்திக்கு ஆஞ்சநேயரை, செல்வத்துக்கு வெங்கடாசலபதியை, வீட்டுக் காவலுக்குப் பைரவரை, ஊர்க்காவலுக்கு ஐயனாரை, அன்னத்துக்கு அன்னபூரணியை அந்தக் காலத்திலேருந்து இந்தக் காலம் வரை ஆராதித்துக் கும்பிடுறோம்.

ஆச்சி, உங்க நகரத்தார் திருமணச் சடங்குகளைப் பத்திச் சொல்லுங்களேன். டைரியில எழுதிக்குறேன்.

ஆச்சி சிரித்துக் கொண்டே சொன்னார்.

அதுதான் இன்னம் கொஞ்ச நாள்ல நம்ம வீட்டுக் கல்யாணத்தையே பாக்கப் போறீங்களே.

அதை நான் வீடியோவுலேயும் எடுத்துக்குவேன். இருந்தாலும் சொல்லுங்களேன்.

தம்பி. ஒரு காலத்தில எங்க வீட்டுக் கல்யாணங்கள்லாம் ஏழு நாள் கல்யாணம். இப்போ ஒரே நாள்ல முடிஞ்சு போகுது.

கல்யாணத்துக்கு முன்னாலே முகூர்த்தக்கால் நடும் குழியில நவதான்யங்களைப் போட்டுப் பால் ஊத்தி ஈசான்ய திசைன்னு சொல்லப்படுற வடகிழக்கு மூலையில் நடுவார்கள். இதை முகூர்த்தக்கால் ஊன்றதும்பாங்க. இதைத் தனித்தனியாக மாப்பிள்ளை மற்றும் பெண் வீடுகளில் சுபமுகூர்த்த வேளையில் செய்வாங்க. இந்த நிகழ்வுக்கு முந்தைய காலங்கள்ல அரசர்களுக்கே அழைப்பு கொடுத்திருக்காங்க. அரசர்கள் வர முடியாத நிலையில தன் ஆணைக்கோ-லை அனுப்பி வைப்பாங்களாம். அதுதான் அரசாணைக்கால்ன்னு ஆகி அங்கீகரிக்கப்பட்ட திருமணமாகியிருக்கு.

ஆச்சி மொஃபைல் அடிக்க அதை எடுத்துப் பேசினார். செட்டியார் மீதியைச் சொன்னார்.

டைரக்டர் சார். திருமணத்தன்று காலை வேளையில் மாப்பிள்ளையை கோவிலிலிருந்து அழைத்து வந்ததும் சில சம்பிரதாய சடங்குகள் செய்த பின், முகூர்த்த நேரத்தில் மனையின் மேல் பொண்ணும் மாப்பிள்ளை கீழே நின்றும் திருப்பூட்டுதல் (தாலி கட்டுவது) நிகழ்வும், அதன் பிறகு ஒருத்தருக்கொருவர் மாலையை மாத்திக்குவாங்க. பொண்ணு, மாப்பிள்ளை மணவறையைச் சுத்தி வந்து சாமி வீட்டுக்குள்ள போயிச் சாமி கும்பிட்டு நெத்தியில விபூதி பூசிக்குவாங்க. திரைச்சீலையில முடியுறது, மாப்பிள்ளைக்குச் சோறு போடுறது, மஞ்ச நீராடுறது. கும்பிட்டுக்கட்டிக்குறது, பெரியவங்ககிட்ட ஆசிர்வாதம் வாங்கிக்குறது, குலம் வாழும் பிள்ளையை மணப்பொண்ணுட்ட கொடுத்து வாங்குறது, சொல்லிக்குறது, பொண்ணை அழைச்சு விடுறது, மாப்பிள்ளை அயலூருன்னா கட்டிச்சோறு கட்டிக் கொடுத்து வழியில் உள்ள ஊருணிக்கரையில உக்காந்து சாப்பிடுறது, பொண்ணழைச்சு விடுறது. இப்படி எத்தனையோ சடங்குகள் இருந்தது. காலப்போக்குல பல சடங்குகள் இல்லாமப் போச்சு.

செட்டியார் வெத்திலையை மென்றபடி கொஞ்சம் கோபமாகப் பேசினார்.

எல்லாம் சரிதான். இப்போ எல்லா மாப்பிள்ளைகளும் தாடியையும், மீசையையும் வச்சுக்கிட்டு காபூலி வாலாக்கள் மாதிரி வர்றாங்க. இனிமே வர்ற மாப்பிள்ளைகள் தாடியையும், மீசையையும் வச்சுக்கிட்டு வந்தா முடிவெட்டுறவனைக் கூப்பிட்டு மனையில வச்சே அதை எடுக்கச் சொல்ல வேண்டியதுதான்.

ராஜ்மோகன் வாய்விட்டுச் சிரித்தார்.

ஆச்சி சொல்ல வந்ததைச் சொன்னார்.

தம்பி, எங்க வீடுகள்ல முகப்பு, பட்டாளை, பத்தி, வளவு, ஆலு வீடு, ரெண்டாம் கட்டு, மூனாங்கட்டு எல்லாம் இருக்குறதால எவ்வளவு கூட்டம் வந்தாலும் சமாளிக்கலாம். எங்கே பாத்தாலும் சடப்பிரம்பாய், ஜமுக்காளம், பந்திப்பாய் எல்லாம் விரிச்சுக் கெடக்கும்.

என்னைக் கொஞ்சம் சொல்ல விடுறியா?

உங்களுக்கு ஒன்னும் தெரியாது. கொசு அடிக்கக் கோடாலி எடுப்பீங்க. சரி. சொல்லுங்க.

டைரக்டர் சார். நாங்க பொண்ணுக்குப் பரப்புற வெள்ளிச் சாமான், சேலை, துணிமணி, செருப்பு வரைக்கும் ஒரு கடை மாதிரிப் பரப்புவோம். எங்க காலத்தில ஆட்டுக்கல்லு, அம்மி எல்லாம் பரப்புவோம்.

ராஜ்மோகன் புரியாமல் கேட்டார். ஆட்டுக்கல்லு, அம்மின்னா?

அதுதான் கிரைண்டர், மிக்ஸி, தேங்காய் திருகுறது, மத்து, பீரோ, கட்டிலு, மெத்தை, தலையணை, விளக்குமாறு, குப்பைத் தகரம் வரைக்கும் பரப்புவோம்.

ராஜ்மோகன் பெருமூச்சு விட்டார்.

அய்யா கேக்குறதுக்கே மூச்சு வாங்குது. இதைச் சேக்குறதுக்கு எத்தனை வருஷமாகும். அய்யா இப்பவும் அப்படித்தானா,

ஆச்சி குறுக்கிட்டுச் சொன்னார்.

இல்லை தம்பி. ரொம்ப ரொம்பக் குறைஞ்சிடுச்சு எல்லாத்துக்கும் சேத்து ரொக்கம் கொடுக்க ஆரம்பிச்சிட்டோம்.

ஏன்?

அரண்மனை மாதிரி வீட்ல யாரு இருக்காங்க. இதை எல்லாம் வாங்கி வச்சு யாரு பாதுகாக்குறது. வீட்டுல கரையான் வந்தா யாரு பாக்குறது. ஆனாலும் எங்க பலகாரம், சாப்பாடு எங்கேயும் இருக்காது. காலையில பலகாரம் 9 வகை. ஆப்பம், அல்வா, வடை, கவுனரிசி, வெள்ளப் பணியாரம், பொங்கல், இட்லி, பொடி தோசை, பூரி, கும்மாயம், சீயம், கந்தர்ப்பம், தாளிச்ச இடியாப்பம், தொட்டுக்கச் சாம்பார், சட்னி, கோஸ்மல்லி, திரக்கல், கள்ள வீட்டு அவியல்.

மத்தியானம் .........................

ராஜ்மோகன் கை காட்டினார்.

ஆச்சி. இவ்வளதுக்கப்புறம் மத்தியானம் வேறயா?

தம்பி. முந்தி எல்லாம் செட்டு சமையல்காரங்க அமெரிக்கன் நடேசன், காரைக்குடி பெரியய்யா, நெடுங்குடி சின்னையா, மேலவட்டை மெய்யப்பன், உக்கிரான உமையாள், பந்தி விசாரிக்கும் பாகனேரிப் பழனியப்பன் இப்படித்தான் இருந்தாங்க. இப்போ இதை இழுத்துப் போட்டு வேலை செய்ய முடியலே. கான்ட்ராக்ட்ல கொடுத்திடுறோம்.

ஆச்சி பேசும் போதெல்லாம் பேரன், பேத்திகள் காரில் வந்து கொண்டே மொஃபைலில் மாற்றி மாற்றிப் பேசினார்கள். ராஜ்மோகன் இனிமேல் ஆச்சியிடம் நகரத்தார்கள் பற்றிய விவரங்களை அடிக்கடி கேட்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார்.

ஆச்சி. நாளையிலேருந்து நீங்க பேரன் பேத்திகளோட பிஸியாயிடுவீங்க. நானும் ஒரு முடிவுக்கு வந்திட்டேன்.

என்னது?

நீங்க சொன்ன நகரத்தார்கள் பெருமைகளை எல்லாம் வரிசைப்படுத்தி நகரத்தார் சிகரத்தார்ங்குற தலைப்பில ஒரு நாவலா வெளியிட்டு அதையே ஆவணப்படமாக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்.

நல்ல முடிவுதானே. தமிழ்நாட்டுல தலைசிறந்த நாவல்கள்லாம் 150-க்கும் மேல திரைப்படங்களாகியிருக்குதே.

என்னென்னன்னு சொல்ல முடியுமா?

எங்கிட்ட உள்ள அந்த விவரத்தை நான் உங்களுக்குத் தர்ரேன். படிச்சுப் பாத்து எழுதுங்க.

சொல்ல நினைக்குறதை எனக்காகக் கொஞ்சம் சுருக்கமாச் சொல்லுங்க ஆச்சி ப்ளீஸ். பேரன் பேத்திகள் வந்திருவாங்க. நான் ஊரை விட்டுப் போறதுக்குள்ள சொல்லுங்க ஆச்சி.

சிகப்பி ஆச்சி சிரித்தபடியே சில விவரங்களைச் சொன்னார்.

தம்பி. இத்தாலி விமர்சகர் கானுடோங்குறவரு சினிமாவை ஏழாவது கலைங்குறாரு. ஓவியம், கட்டடம், நடனம், இசை, நாடகம், இலக்கியம், சினிமா. இந்தச் சினிமாவுல உலகின் தலைசிறந்த நாவல்கள்லாம் படமாகியிருக்கின்றன. நாவல் – சிந்தனை வழி, நாடகம் – வாய்மொழி, திரைப்படம் – காட்சி மொழிங்குறாரு. உலகப் புகழ் பெற்ற நாவல்தான் டைட்டானிக் (ஆங்கிலப்படம்) முதல் ரெண்டு தடவை படம் தோல்வி. மூனாவது தடவை மிகப் பெரிய வெற்றி.

முதமுதலா எந்த நாவல் படமாச்சுன்னு விவரம் இருக்கா?

இருக்கு தம்பி. 1800-ல் எழுதிய THE COURT OF MONTE CRISTO-ங்குற பிரெஞ்சு நாவல்.

தமிழ்ப் படங்கள்ல வந்த நாவல்கள்ல முக்கியமானதைக் கொஞ்சம் சொல்லுங்க ஆச்சி.

1935-ல கே.ஆர். ரெங்கராஜ் எழுதுன ராஜாம்பாள்.

1936-ல வை.மு. கோதைநாயகி எழுதுன அனாதைப் பெண். மௌனப் படமா வந்துது.

மேனகா, பாலாமணி, மைனர் ராஜாமணிங்குற நாவல்கள், வடுவூர் துரைசாமி அய்யங்கார் எழுதுனது 1937-ல் வந்தது. கல்கி எழுதுன தியாகபூமி 1939. வெஸ்மிஸரபிள்ங்குற பிரெஞ்சு நாவல் விக்டர் ஹீகோ எழுதுனது. ஏழை படும் பாடுன்னு 1950-ல வந்துது.

தாகூர் எழுதுன கண்கள் 1952-லேயும், மாதர் குல மாணிக்கம்ங்குற பேர்ல வந்த புயல் 1957-ல வந்துது. சரத் சந்திரர் எழுதுன எங்க வீட்டு மகாலெட்சுமி 1957.

ராஜ்மோகன் அவசரம் அவசரமாக மொஃபைலில் பதிவு செய்து கொண்டார். ஆச்சி சொல்லச் சொல்ல, அவர் நினைவாற்றலை ராஜ்மோகன் பாராட்டினார். ஆச்சி வேக வேகமாச் சொன்னார்.

லியா டால்ஸ்டாய் எழுதுன அன்னகரீனா 1953, சரச்சந்திர சட்டர்ஜி எழுதுன தேவதாஸ் 1953, நாமக்கல் கவிஞர் எழுதுன மலைக்கள்ளன் 1954, கொத்தமங்கலம் சுப்பு எழுதிய தில்லானா மோகனாம்பாள் 1968, கல்கி எழுதுன பொய்மான் காடு 1954, கள்வனின் காதலி 1955, பார்த்திபன் கனவு 1960, அகிலன் எழுதிய பாவை விளக்கு 1960, மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் 1978, ஜெயகாந்தன் எழுதிய உன்னைப் போல் ஒருவன் 1968, காவல் தெய்வம் 1969, சில நேரங்களில் சில மனிதர்கள் 1977, கருணையினால் அல்ல, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் 1978, யாருக்காக அழுதான். கண்ணதாசன் எழுதிய அதை விட ரகசியம் 1978, சிவப்புக்கல் மூக்குத்தி 1979, ராஜாஜி எழுதிய திக்கற்ற பார்வதி 1974.

கலைஞர் மு. கருணாநிதி எழுதிய திரும்பிப்பார் 1953, புதையல் 1957, நெஞ்சுக்கு நீதி 1979, ஒரே ரத்தம் 1987.

அறிஞர் அண்ணா எழுதிய ரெங்கோன் ராதா 1956, காதல் ஜோதி 1969, வண்டிக்காரன் மகன் 1978.

ஆச்சி கொஞ்சம் மூச்சு விட்டுக் கொண்டார். ராஜ்மோகன் தனக்குத் தெரிந்த நாவல் ஆசிரியர்களைப் பற்றிச் சொன்னார்.

கி, ராஜ நாராயணன், இந்திரா பார்த்தசாரதி, தி. ஜானகிராமன், தேவன் - லட்சுமி, புதுமைப்பித்தன், மு.வ., சுஜாதா, சிவசங்கரி, அனுராதா ரமணன், ஜாவர், சோ, மணியன், மெரினா, திலகவதி, ரா.கி. ரெங்கராஜன், எல்லார்வி. கோவி. மணிசேகரன், சமுத்திரம், புஷ்பா தங்கதுரை, உமா சந்திரன், மகரிஷி, ஜெயமோகன், நீல. பத்மநாபன்.

ஆமா. தம்பி இவங்கள்லாம் எழுதுன நாவல்கள் திரைப்படமாகியிருக்கு. அதுமாதிரி நீங்க எழுதப் போற நகரத்தார் சிகரத்தார் நாவலாகிச் சீக்கிரம் ஆவணப் படமாகி, நீங்க விருது வாங்கணும். என் வாழ்த்துக்கள்.

ராஜ்மோகன் நன்றி சொன்னார். வீட்டு வாசலில் நான்கு கார்களும் வந்து நின்றன. ஆச்சியும், செட்டியாரும் வாசலுக்கு ஓடி வந்து பிள்ளைகளை வரவேற்றார்கள். (தொடரும்)

# ஓவியம்

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்



ஆதியில் மனிதன் காய் கனிகளையும், விலங்குகளின் மாமிசத்தையும் பச்சையாகவே சாப்பிட்டான். நெருப்பின் இருப்பைத் தெரிந்து கொண்ட பிறகு உணவை வேகவைத்துச் சாப்பிட்டான். ஆனாலும் நாடோடியாகவே உணவைத் தேடி அலைந்தான். விலங்குகள் கூட்டம் கூட்டமாக இடம் பெயர்ந்த போது உணவுக்காக அவற்றின் பின்னாலேயே மனிதனும் ஓடினான். மண்ணில் பயிர் வைத்து விவசாயம் செய்யும் முறை அவன் அறிவுக்குப் புலப்பட்ட பிறகு உணவுக்காக அலைந்து திரிவதை நிறுத்தி விட்டு ஓரிடத்தில் குடியமர்ந்து சக மனிதர்களுடன் கூடி வாழத் தொடங்கினான்.

### ஓவியக் கலையுணர்வின் உதயம்:

அப்போது கிடைத்த ஓய்வு நேரத்தில் தங்களைச் சுற்றி உள்ள இயற்கை எழிலை, மரஞ்செடி கொடிகளை, மலர்களை, மலைத் தொடர்களை, பரந்து கிடந்த சமவெளிகளை மக்கள் ரசித்துப் பார்க்கத் தொடங்கினார்கள். அவர்களுக்குள் அழகியல் உணர்வு (aesthetic sense) அரும்பி மலரத் தொடங்கியது.

அந்த அழகியல் உணர்வு கலை உணர்வாகப் பரிணமித்தது. அழகை ரசிக்கையிலே தங்களுக்குள் உற்சாகம் பிறப்பதையும், ஒருவிதமான பரவச நிலை அடைவதையும் உணர்ந்தார்கள்.

### முதல் ஓவியம்:

மனித இனத்தின் தொட்டில் என்று ஆப்பிரிக்காவைத் தானே சொல்வார்கள்! அங்கிருந்துதானே மனித இனம் உலகின் பல பகுதிகளுக்குக் குடிபெயர்ந்தது. ஆப்பிரிக்கர்களின் மேனி இயற்கையில் அடர் கருப்பானது. அவர்களுக்குத் தங்களைச் சுற்றி இருந்த இலைகளின் பசுமையும், மலர்களின் நிறங்களும், மண்ணின் சிவப்பும் கவர்ச்சிகரமாகத் தோற்றம் தந்தன. தங்கள் மேனியிலும் வேறுவேறு நிறங்கள் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அதனால் செம்மண் காவியை அள்ளி மேனியில் பூசிக் கொண்டார்கள். மலர்களையும், இலைகளையும் அரைத்து மேனியில் புள்ளிகள் இட்டுக் கொண்டார்கள். இந்த மேனி அலங்காரந்தான் மனிதர்களின் முதல் ஓவியங்கள்.



### வண்ணங்களும், வடிவங்களும்:

அடுத்த நிலையில், தரையிலும், பாறைகள் மேலும், ஓவியங்கள் இணை கோடுகளாகவும் (parallel lines), குறுக்கும், நெடுக்குமான கோடுகளாகவும் (zig-zag lines), வளைவுகளாகவும் (curves) வரையப்பட்டன. வண்ணங்களைப் பற்றியும், வடிவங்களை(patterns)ப் பற்றியும் சிந்தனைகள் வளர்ந்தன.

இதன் தொடர்ச்சியாக, கண்ணால் பார்த்த உருவத்தின் நீள அகலத்தையும், உருவ அமைப்புகளையும், இரு பரிமாணத்தில் (2D) வரையத் தொடங்கினார்கள். பிறகு உருவங்களின் அடர்த்தியையும், ஆழத்தையும் தெளிவாகக் காட்ட முப்பரிமாண (3D) முறையையும் பயன்படுத்தினார்கள்.

### கலைஞனும், ரசிகனும்:

இப்படிக் காட்சிகளைச் சித்திரமாக வரையும் ஆற்றல் எல்லோருக்கும் வாய்க்கவும் இல்லை. வரையத் தெரிந்தவர்கள் தாங்கள் நினைத்ததை வரைவதை விட, சுற்றி உள்ளவர்கள் ஆசைப்பட்டுக் கேட்ட உருவங்களை வரைந்து கொடுப்பதில் ஆர்வம் அதிகமாகக் காட்டினார்கள். இதனால் ஓவியர்கள், அவர்களின் ரசிகர்கள் என்று இரு வேறு கூட்டங்கள் பெருகின.

### குழு அடையாளங்கள்:

மனிதர்கள் தனித் தனிக் குழுக்களாகவும், இனங்களாகவும் பிரிந்து வாழ்ந்த போது, அந்தந்த இனங்களின் சடங்கு சம்பிரதாயங்களிலும், பண்பாட்டின் குறியீடுகளிலும் ஓவியங்கள் முன்னணியில் இருந்தன.

ஸ்வஸ்திக் மாதிரியான ஒரு வடிவமோ, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு விலங்கின் உருவப்படமோ ஒரு குழுவின் அல்லது ஒரு பழங்குடியினத்தின் அடையாளமாக மாறியது.

**கலை வாழ்வின் பிரதிபலிப்பு:**

மனித இனம் கலை உணர்வை ஆராதிக்கத் தொடங்கிய போது, ஓவியங்களும், சிலைகளும் மனிதர்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களின் பிரதிபலிப்பாக உருவெடுத்தன. கி.மு. 300 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட வீனஸ் (VENUS) உருவங்கள் காதல், கருவுறுதல் ஆகியவற்றின் அடையாளங்களாகக் கருதப்பட்டன. பனி யுகத்தின் (Ice Age) பஞ்ச காலத்தில் இருந்து மனித இனம் மீண்ட போது, வீனஸ் உருவங்கள் செழிப்பின் அடையாளமாகவும் போற்றப்பட்டன.

**குகை ஓவியத்தின் பிறப்பு:**

ஓவியங்கள் மனித வாழ்க்கையின் இன்றியமையாத பகுதியாக ஒன்றிவிட்ட பிறகு, பாதுகாப்பில்லாத நிலத்திலும், பாறைகளிலும் ஓவியம் வரைவதைத் தவிர்த்து, சித்திரம் வரைந்து, வண்ணம் தீட்டுவதற்கு மலைகளில் உள்ள குகைகளின் உட்புறச் சுவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.



குகைச் சித்திரங்கள் 30000 வருடங்கள் பழமையானவை. இன்றைய மனிதனின் உடலமைப்பின் சாயலில் இருந்த ஹோமோ சேப்பியன், நியண்டர்தால் மனிதன் காலத்தில் தோன்றியவை. அந்தச் சித்திரங்களில் காட்டெருமைகள், கரடிகள், புலிகளின் உருவங்கள் வரையப்பட்டிருந்தன. ஆனால் கண்ணால் காணும் காட்சிகளைத் தாண்டிக் கற்பனையான சிந்தனைகளில் (abstract) வரையப் பட்டிருந்தன.

**வண்ணங்களின் பிறப்பு:**

ஓவியங்களுக்கு வண்ணம் தீட்டுவதற்கு டெம்பெரா (Tempera) என்ற வண்ணப்பூச்சை (paint) உபயோகித்தார்கள். வண்ணச் சாயங்களுடன் முட்டையின் மஞ்சள் கருவையும், தண்ணீரையும் கலந்து டெம்பெரா தயாரிக்கப்பட்டது. இதற்கு ஒட்டும் பசையாக (binder) தேன் மெழுகு, தாவர எண்ணெய்கள், விலங்கு கொழுப்புகள் பயன்பட்டது. பல வண்ணச் சாயங்களுக்குச் சிவப்பு நிறத்தில் இருந்த இரும்பு ஆக்ஸைட் மற்றும் கரி, தாவரத்தின் சாறுகள், பொடியாக அரைத்த கற்கள், சுண்ணாம்புக் கட்டிகள், அரக்கு ஆகியவற்றை உபயோகித்தார்கள்.

விலங்குகளின் ரோமங்கள், மரக் கிளைகள் இணைந்து தூரிகைகள் ஆகி இருக்கின்றன. மனித இனத்தில் மொழி தோன்றுவதற்கு முன்பு, தாங்கள் மற்றவர்களுக்குச் சொல்ல விரும்பியதை ஓவியங்கள் மூலம் சொல்லி இருக்கிறார்கள்.

**தமிழ் நாட்டில் குகை ஓவியங்கள்:**

தமிழ்நாட்டில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் படியேந்தல், கடலூர் மாவட்டத்தில் ஆலம்பாடி, திண்டுக்கல் மாவட்டத்தில் கோம்பைக்காடு, விழுப்புரம் மாவட்டத்தில் கீழ்வளை, நேஹனுர்பட்டி, புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் குகை ஓவியங்களைக் காணலாம்.

**சித்தன்னவாசல் குகை ஓவியங்கள்:**

சித்தன்னவாசல் குகை ஓவியங்கள் 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இங்கே சமணர்கள் புகழோடு வாழ்ந்த காலத்தில் தோன்றியவை. மூலிகையால் உருவான வண்ணங்களைக் கொண்டு சமணர்களால் வரையப்பட்டவை. தாமரைப் பூக்கள் மலர்ந்திருக்கும் குளங்களும், குளங்களில் நீராடி மலர் பறிக்கும் மாந்தர்களும், குளத்தில் நீந்தும் வாத்துக்களும், கரையில் நிற்கும் யானைகளும் மனம் கவரும் தன்மையுடைய ஓவியங்கள்.

தமிழ்நாட்டில் பிற இடங்களில் உள்ள ஓவியங்கள் போபாலில் உள்ள பீம்பெட்கா குன்று ஓவியங்களின் பாணியில் அமைந்துள்ளன.

**கோலங்களில் ஓவியம்:**

இந்தியப் பெண்களின் ஓவியக் கலை ஆர்வத்திற்குச் சான்றாகத் திகழ்பவை அவர்கள் வரையும் கோலங்கள். வண்ணங்களைக் கூட்டி வரையும் சித்திரங்களின் அழகோடு போட்டியிடுபவை, புள்ளிகளை அணைத்து வளைந்து நெளிந்து இசைபாடும் வாயிற் கோலங்கள். செட்டிநாட்டு இல்லங்களை அலங்கரிக்கும் 'நடுவீட்டுக் கோலங்கள்' அழகூட்டுபவை மட்டுமல்ல; நகரத்தார் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் பறை சாற்றுபவை.

**செட்டிநாட்டுக் கோலங்கள்:**

செட்டிநாட்டுக் கோலங்கள் சூரியன், சந்திரன், பன்னிரு ராசிகளின் குறியீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியவை. கோலத்தில் பொதிந்துள்ள பறவைகள், விலங்குகள், இலைகள், பூக்கள் இயற்கையோடு இணக்கமாக வாழும் நம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன. கீழ்நோக்கி வரையப்படும் முக்கோணங்கள் பெண்களையும், மேல் நோக்கிய முக்கோணங்கள் ஆண்களையும் குறிக்கின்றன. வட்டம் இயற்கைக்கும், சதுரம் கலாச்சாரத்துக்கும் அடையாளம்.

தாமரைப்பூ ஈன்றெடுக்கும் தாயாரின் கருவறையின் வடிவம். ஐங்கர நட்சத்திரம் வீனஸைக் குறிக்கிறது. செட்டிநாட்டுக் கோலங்கள் வெறும் சித்திரங்கள் அல்ல. பல தலைமுறைகளாக நம் வாழ்க்கையோடு இணைந்து பயணம் செய்பவை.

(தொடரும்)

# நியூசிலாந்து நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்




நியூசிலாந்தில் உள்ள நகராத்தார்களிடையே ஒற்றுமை மற்றும் உறவு முறை உணர்வை வளர்த்தெடுத்தல். உறுப்பினர்களுக்கிடையே நல்ல தொடர்பு, வலையமைப்பு மற்றும் ஒருவருக்கொருவர் ஆதரவு அளித்தல். உதவித்தொகை மற்றும் கல்வி திட்டங்கள் உள்ளிட்ட சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் முயற்சிகளை ஆதரித்தல்.நியூசிலாந்திற்குள்ளும் வெளியேயும் உள்ள நம் சமூகத்தின் நலனுக்காக தார்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுதல். இளைய தலைமுறையினரை அவர்களின் கலாச்சார வேர்களுடன் இணைக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல்.நகராத்தார் இளைஞர்களுக்கு தலைமைத்துவ மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குதல். உள்ளிட்ட நடவடிக்கைகளை குறிக்கோளாகக் கொண்ட நியூசிலாந்து நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தில் 55 உறுப்பினர்கள் உள்ளனர். ஆன்மீக வளர்ச்சி மற்றும் சிந்தனை, சமூகப் பிணைப்பை வலுப்படுத்துதல், பாரம்பரியம் மற்றும் பண்பாடு, உடல் நலத்தை மேம்படுத்துதல், மன அமைதியை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களுக்காக சங்கத்தின் நிர்வாகக் குழுவிற்கு தலைவர் – ராமநாதன் நாச்சியப்பன் (பிள்ளையார்பட்டி கோயில் – ஆத்தங்குடி), செயலாளர் – ராமநாதன் கருப்பையா (இளையாத்தங்குடி கோயில் – கழனி வாசல் – கல்லல்), பொருளாளர் – வீரப்பன் நாராயணன் (மாத்தூர் கோயில் – உறையூர் – காரைக்குடி), நிர்வாகக் குழு உறுப்பினர் – ரத்னா மாணிக்கவாசகம் (இலுப்பைகுடி கோயில் – பள்ளத்தூர்) ஆகியோர் உள்ளனர். சங்கத்தின் சார்பாக 22 பிப்ரவரி 2025, காலை 9:00 மணி – மதியம் 2:00 மணி, நடைப் பயணமாக திருமுருகன் கோவில் (145 சர்ச் தெரு, ஓட்டாகு, ஒக்லாந்து 1062), இருந்து திரு சுப்பிரமணியர் ஆலயம் (69 டைடல் ரோடு, மான்கிரே, ஒக்லாந்து 2022) வரை மேற்கொள்ளப்பட்டது. தென்னிந்திய பாணியில் ஒரு விருந்து உணவு பங்கேற்பாளர்கள் மற்றும் குடும்பத்தினரால் தயாரிக்கப்பட்டு, வாழை இலையில் பரிமாறப்பட்டது.







# ஆழ்ந்த இரங்கல்



சிவகங்கை மாவட்டம், மகிபாலன்பட்டியை சேர்ந்தவரும், சிவநெறிச் செல்வருமான பூங்குன்றம் இராமசாமி என்ற **சி.ராம. நா. இராமசாமி செட்டியார்** அவர்கள் கடந்த 18.03.2025, செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற வேண்டுகிறோம். அவர்களின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் நேரிலும், தொலைபேசியிலும் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி – இராம. சிட்டு கலாதேவி, மகன் – இராம. நாகப்பன்
மகள் – டாக்டர் இராம. அன்னபூரணி, மதுரை

ADVT.

## நமது செட்டிநாடு சந்தா படிவம்

திரு/திருமதி..............................................................................................................................

முகவரி.......................................................................................................................................

.....................................................................................................................................................

கோவில்..................................................பிரிவு.................................சொந்த ஊர்..................................

கைபேசி....................... தொலைபேசி.......................... ⏩ இமெயில் ..................................................

⏩ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No.....................................................................

செலுத்திய சந்தா ரூபாய் ஓராண்டு 300/- இரண்டு ஆண்டு 500/- ஐந்து ஆண்டு 1250/-

☐ மணியார்டர் ☐ காசோலை ☐ RTGS ☐ GOOGLE PAY மூலம் செலுத்தி விவரம் தெரிவிக்கவும்.

வங்கி............................................................./ எண்................................./ நாள்........................

அனுப்ப வேண்டிய முகவரி: “நமது செட்டிநாடு” (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 3வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை 600 006. தொ.பே.எண்: 04442951888

வெளிநாடு சந்தா விவரம்: சிங்கப்பூர், மலேசியா ஆண்டிற்கு SG $ 40/ பிற நாடுகள் ஆண்டிற்கு US $50/

**Cheque to be drawn in favour of**

| | | |
|---|---|---|
| Chettinad Print Media P Ltd,<br>A/C No: 6412480441<br>Indian Bank, Thousand Lights Branch,<br>Chennai - 600 006. IFSC : IDIB000T020, | Or | Chettinad Print Media P Ltd.<br>A/C No:57500000199320<br>HDFC Bank, R.K.Salai Branch,<br>Chennai - 600 004, IFSC : HDFC0001097 |




Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan


Chettinad
Sarvalokaa Education
International School
Activities that nurture
children
holistically
• Archery
• Theatre
• Dance
• Instrumental Music
• Taekwondo
• Chess
• Soccer
ADMISSIONS
OPEN
ENQUIRE
FOR
DETAILS
044 47429900
73 5872 1784
www.sarvalokaa.org
Cambridge Assessment
International Education

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2025-2027
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2025-2027 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 April - 2025

